# இலங்கையின் பூர்வ சரித்திரம்

ஜி. ஸி. மேண்டிஸ், B.A., Ph.D.
இயற்றியது.

15490

Dr. U. V. S. IYER LIBRARY
24438



PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.
1933

(பதிப்புரிமை ஆசிரியருக்குரியது.)

# இலங்கையின் பூர்வ சரித்திரம்

(சித்திரப்படங்களும் தேசப்படங்களும் அடங்கியது)

கி. வா. ஜகந்நாதன்


ஆங்கில முதல் நூலாசிரியர்

ஜி. ஸி. மேண்டிஸ், B.A., Ph.D.



Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★

24438



பதிப்புரிமை ஆசிரியரது]


[விலை ரூ. 1. 25

# மொழிபெயர்ப்பாசிரியரின் குறிப்பு

ஈழமண்டலத்தின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறும் இந்நூலை, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்குமாறு திரு. ஜி. ஸி. மென்டிஸ் அவர்கள் என்னைக் கேட்டபொழுது தமிழ்மொழியிலே தக்க சரித்திர நூலில்லாமை கண்டு நான் இப்பணிபுரிய முன்வந்தேன். பல வேலைகளினிடையே செய்துவந்த இப்பணி, சரித்திர ஆராய்ச்சியிலே தமிழ்ச் சகோதரருக்கு ஊக்கமுண்டாக்க ஓர் தூண்டுகோலாகுமென நான் நம்புகிறேன். கொழும்புப்பட்டினத்திலிருந்து கைப் பிரதியைச் சென்னப்பட்டணத்திற்கு அனுப்பி அச்சேற்றும் கடமையும் என்னிடம் ஒப்பிக்கப்பட்டது ; இதனாலே பிழைகள் நேர்ந்திருக்கக் கூடுமாதலின், அவற்றைப் பொறுக்கும்படி அன்பர்களை வேண்டுகின்றேன்.

கொழும்பு,
நொவம்பர் 1933.

ஜீ. சி. இராமஸ்வாமி.

அன்பளிப்பு
திருமதி: கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை - 600 028
Dr. U. V. S. IYER LIBRARY
24438
MADRAS-90

## பொருளடக்கம்

பக்கம்.

*அணிந்துரை* ... vii

*முதனூலாசிரியரின் முகவுரை* ... xi

### நூல்

#### அதிகாரம் 1.

இலங்கையின் புராதன, மத்தியகால சரித்திரம்:—மகாவம்சம்—விஜயன் முதல் துட்டகெமுனு வரையில்—சத்தாதிஸ்ஸன் முதல் மகாசேனன் வரையில்—கீர்த்திஸ்ரீமேகன் முதல் 1-ம் பராக்கிரமபாகு வரையில்—2-ம் விஜயபாகுமுதல் 8-ம் பராக்கிரமபாகு வரையில்—கால அட்டவணை—ஏனைய ஆதாரநூல்கள்—'சரித்திரம்' (இதிகாசம்) என்பதைப்பற்றி மாந்தர் கொண்டுள்ள அபிப்பிராய பேதங்கள்—சரித்திரகாலப் பகுதிகள்—இலங்கைச்சரித்திரம்—அதன் காலப்பகுதிகள்—தேச சரித்திரத்துக்கும் பூமிசரித்திரத்துக்குமுள்ள தொடர்பு—இலங்கைக்கும் இந்தியாவுக்கு முள்ள தொடர்பு ... 1

#### அதிகாரம் 2.

ஆரம்பங்கள்:—(1) ஆதிகாலத்திற் குடியேறியவர்:—சரித்திரகாலத்துக்கு முந்தியபகுதி—வேடர்—இந்தியாவிலும் இலங்கையிலும் குடியேறிய ஆரியர்—ஆரியரின் முதல் வாசத்தானம்—மொழிக்கும் சாதிக்குமுள்ள தொடர்பு—ஆரியர் தொண்டு—திராவிடர்—இலங்கையிலே திராவிடர் குடிபுகுந்தமையினுலேற்பட்ட பலாபலன்கள் ... 18

பக்கம்.

(2) **பௌத்தசமயம், அது இலங்கைக்குவந்த வரலாறு:—** *பண்டை ஆரியரின் சமயம்—பௌத்த சமயம்—பௌத்தசமயம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டமை—பாளி பாஷையும் இலக்கியமும்—எழுதும் முறை—மனைக்கலையும் சிற்பக்கலையும்—பௌத்த சமயம் இலங்கையில் தாபிக்கப்பட்டதினுலேற்பட்ட பலாபலன்கள்* ... 29

அதிகாரம் 3.

**பண்டைகாலப்பகுதி:—** *தேவானன்பிய திஸ்ஸன்முதல் மகாசேனன்வரையில்—பூர்வ குடியேற்றத் தாபனங்கள்· அரசியற் சரித்திரம்—அரசியல்முறை—கிருஷியும் நீர்ப்பாசனமும்—பௌத்த சமயத்திலே ஆதிகாலத்தில் தோன்றிய பிரிவினைகள் சிற்பம்: இதனை நாம் கிருகநிருமாணம் (மனைக்கலை), உருவச் சிற்பம் என இரண்டாகப் பிரிக்கலாம்—வடஇந்தியாவும் தட்சிணதேசமும்—தென்னிந்தியா—தென்னிந்தியா மேனுடுகளோடு நடத்திய வாணிபம்—புறநாட்டு இலக்கிய நூல்கள்; இந்திய கிரேக்க இலக்கிய நூல்கள்* ... 40

அதிகாரம் 4.

**மத்தியகாலம்—முதற்பகுதி (கி.பி. 362-1017):—** *கீர்த்தி ஸ்ரீமேகவர்ணன் முதலாக 5-ம் மிகுந்துவரையிலும்—இலங்கைத்தீவின் பிரிவுகள்—அரசியல்முறை—கமம் (கிருஷி அல்லது பயிர் செய்கை); நீர்ப்பாசனம்—பௌத்த சமயம்—இந்து சமயம்—மனைக்கலை; சிற்பம்; ஓவியம்—இலக்கியம்—வடஇந்தியா—தென்னிந்தியா—பண்டைத் தமிழ் இலக்கியங்கள்—பல்லவர்—சோழர்—சீனம்—மேனுட்டு வியாபாரம்* ... 62

அதிகாரம் 5.

**பொலன்னறுவைக்காலம்:—** *சோழர் வெற்றியடைந்த காலமுதலாக மாகன் வரையிலும்—அரசியற் சரித்திரம்: சோழராட்சி*

பக்கம்.

—1-ம் விஜயபாகு (கி.பி. 1070-1114)—விஜயபாகுவுக்குப் பிந்திய மன்னர்—1-ம் பராக்கிரமபாகு (கி.பி. 1137-1186)—பராக்கிரமபாகுவுக்குப் பின் அரசுபுரிந்தோர்—அரசியல்முறை—போர்—கிருஷியும் நீர்ப்பாசனமும்—பௌத்த சமயமும் இந்து சமயமும்—மனைக்கலை, சிற்பம், ஓவியம் என்னும் கலைகள்—இலக்கியம்—அயல்நாட்டவரின் படையெழுச்சி ... 93

அதிகாரம் 6.

சிங்கள இராச்சியத்தின் சீரழிவு:—3-ம் விஜயபாகு முதல் 8-ம் பராக்கிரமபாகுவரையில்—தீவின் பிரிவுகள்—அரசியர் சரித்திரம்—வன்னியர்—யாழ்ப்பாண ராச்சியம்—பௌத்த சமயமும் இந்து சமயமும்—கட்டடச்சிற்பமும் உருவச்சிற்பமும்—இலக்கியம்—தென்னிந்தியர்: பாண்டியர்—விஜயநகர இராச்சியம்—மலாய் நாடுகள்—சீனம்—யேமன், எகிப்து, பெகு என்ப ... 122

பின்னுரை ... 145

அனுபந்தங்கள்

1. அரசர் நாமாவளி ... 148
2. சிங்கள வரிவடிவின் வளர்ச்சிப் படவிளக்கம் ... 156
3. வினுக்கள் ... 158

---

தேசப்படங்கள்

1. புராதன இலங்கை
2. புராதன மத்தியகால இந்தியா
3. இலங்கை மத்தியகாலம்

## சித்திரப் படங்கள்


பக்கம்.

1. சசஜாதகக் கதையை விளக்கும் சித்திரம்(முகப்புப்படம்)
2. சிங்கள எழுத்துக்களின் படிப்படியான வளர்ச்சி ... 37
3. சிப்பி, கருங்கல், சிகிமுகிக்கற்கள் என்பவற்றினாலான ஆயுதங்கள் ... 39
4. வேடரின் இல்லம்—மலைப்பாறையில் வசதியான ஓரிடம் ... ... 39
5. மின்னேரியா ஏரி ... ... 47
6. அபயகிரி டாகப—அனுராதபுரம் ... 51
7. "குஷ்ட இராஜன்" எனப்படும் சிலை ... 71
8. அனுராதபுரத்தில் ஈசுரமுனியா என்னுமிடத்திற் காணப்படும் ஆண் பெண் உருவங்கள் ... 77
9. நாளந்தாவிலுள்ள கெடிகை (மண்டபம்) ... 87
10. பொலன்னறுவையிலுள்ள முதலாம் சிவதேவாலயம். 109
11. பொலன்னறுவையிலுள்ள கிரிவிகாரை ... 112
12. பொலன்னறுவையிலுள்ள லங்கா திலக விகாரை ... 114
13. பொலன்னறுவையிலுள்ள இரண்டாஞ் சிவ தேவாலயம் ... 116
14. சிகிரியாவிலே சுவற்றில் வரையப்பெற்ற ஓர் சித்திரம் ... 124
15. கம்பளைக்கருகேயுள்ள லங்கா திலக விகாரை ... 134
16. யாப்பகுவிலுள்ள பெருங் கற்பாறை ... 137

# அணிந்துரை

மியூனிச்சு நகரவாசியும் பேராசிரியருமான
உவி. கைகர் அவர்கள் எழுதியது.

இலங்கைத் தீவைப்போன்று சரித்திர விஷயங்களைப் பாரம்பரையாகக் கூறும் கதைகளை இந்தியாவின் எப்பாகமும் பெறவில்லை என்பது யாவரும் நன்கறிந்த விஷயம். கி. பி. 362-ம் ஆண்டு வரைக்குமான விஷயங்களைக் கூறும் பாரம்பரைக் கதைகள் தீபவம்சம், மகாவம்சம் என்னும் இரு பெரும் பாளி புராணங்களி லடங்கியுள்ளன; இவ்விரண்டினுள், மகாவம்சத்திலே 18-ம் நூற்றாண்டுவரையிலும் நடந்த விஷயங்கள் பல்வேறு ஆசிரியர்களால் பல்வேறு சமயங்களிற் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, இந்நூல், விஜயன் தலைமையிலே ஆரியர் முதன் முதலாக இலங்கையிற் குடியேறிய கால முதலாக ஆங்கிலேயர் வரவுவரையிலுமான வரலாற்றைக் கூறுகின்றது. இவ்வரலாற்றி லுள்ள விஷயங்கள், பாளி அல்லது சிங்கள மொழியில் வரையப்பட்டுள்ள பலநூல்களில் விரிக்கப்பட்டும், சில சமயங்களில் திருத்தப்பட்டும் உள்ளன. இவற்றிலிருந்து இலேசாக உண்மையான சரித்திரவிஷயத்தை அறியக்கூடுமெனக் கருதுவது பெரும்பிழையாகும்; இவையனைத்தையும் இடைவிடாது நுணுகி ஆராய்தல்வேண்டும். ஏனெனில், இந்நூலாசிரியர்கள் அநேகமாய் ஒரு கட்சியினராயிருந்ததோடு, ஓர் இதிகாச நூலாசிரியரிடம் இன்றியமையாது வேண்டப்படும்

விஷயங்களைப்பற்றி மவுனஞ் சாதித்து, அற்ப விஷயங் களைப் பெரிதாகக்கருதி யிருக்கின்றனர். இவ்வாறு கூறுவது "உண்மை மறைப்போர்" என்னும் அபவாதத்தை அவர்கள் மீது சுமத்துவதாகாது; ஏனெனில் ஒரு பிக்குவுக்கு— மகாவம்சத்தின் பல பகுதிகளையும் எழுதியவர்கள் பிக்குக் களே—இலௌகிக விஷயங்களைக் காட்டிலும் தமது சமயத்தின் உயர்ச்சியிலுந் தாழ்ச்சியிலுமே கவனஞ் செல்லுமென நாம் எதிர்பார்க்கக்கூடியதே. மேலும் மிகப் பண்டைக்காலச் சரித்திர விஷயங்கள் கட்டுக்கதைகளாகவும் புராணங்களாகவும் மறைந்து கிடக்கின்றன; அவற்றி லிருந்து உண்மையான இதிகாசத்துக்குரிய விஷயம் ஏதேனு முண்டோவெனக் காண்பதும் கஷ்டமான விஷயமே. மகாவம்சத்திலே கூறப்பட்ட பிற்கால சம்பவங்களை ஆராயும்போது, அந்நூல் ஒரு காப்பிய மென்பதையும் அதற்குரிய அணியலங்காரங்களைப் பெற்றுள்ளதென்பதை யும், பண்டைய காப்பியங்களையே பிற்காலத்திய காப்பியங் களும் தழுவியுள்ளன வென்பதையும் நாம் மறத்தல் கூடாது. இறுதியாக, மகாவம்சத்தைத் தவிர்த்த இதிகாச நூல்களை நாம் நோக்கும்போதும் இவற்றிலே கூறப்பட் டுள்ள விஷயங்கள் நாம் நம்பத்தக்க ஆதார நூல்களி லிருந்து எடுக்கப்பட்டனவோ அன்றேல் அந்நூலாசிரியர் களின் கற்பனுசக்தியின் பயனுயேற்பட்ட வெறுங்கட்டுக்கதை களோ வென்பதையும் நாம் ஆராயவேண்டும்.

மேலே கூறிய பல காரணங்களினுலே, பேராசிரியர் திரு. ஜி. ஸி. மென்டிஸ் அவர்கள் எழுதிய இந்நூலுக்கு முன்னுரை வரைவதிலே, எனக்கு உண்மையாகவே பெரு மகிழ்ச்சி உண்டு. ஏனெனில், இந்நூலின் கையெழுத்துப் பிரதியை நான் பார்வையிட்டபோது, இலங்கைத்தீவின்

சரித்திரமானது புராண இதிகாசக் கதைகளை நுண்ணறி வோடு ஆராயும் ஒருவரால் எழுதப்பட்ட தென்பதைப் பெருந் திருப்தியுடன் கண்டேன். இவ்வாசிரியர் புராணக் கதைகளையும் ஐயத்துக்கிடமான பல விஷயங்களையும் நீக்கி, திட்டமாக உண்மை யெனக் கூறக்கூடிய, அல்லது நடந்திருக்கக்கூடிய சம்பவங்களையே தம் நூலுக்கு ஆதார மாகக் கொண்டுள்ளார். மேலும இவ் வாசிரியர் சம்பவங்களை யும், பெயர்களையும் சம்பவகாலங்களையும் வரிசையாகக் கூறுவதோடு நில்லாது, இலங்கை வாசிகளின் மனோவிருத்தி, செல்வம், கிருஷி, வாணிபம், சிற்பம், இலக்கியம் என்ப வற்றை ஆதிகாலந்தொட்டுத் தற்காலம் வரையிலும் விவரிக்க முயன்றுள்ளார். எனவே இந் நூல் வாசிப்போர்க்கெல்லாம் தெவிட்டாத இன்பம் தரும் விஷயங்களைக் கூறும் ஓர் அருமையான சரித்திர நூற் களஞ்சியமாகும் என்பது என் துணிபு. இக் காலத்தில் ஏற்பட்டுள்ள சரித்திரவாராய்ச்சி யின் முடிவுகளை நாமறிந்த வரையில், இந் நூலிற் கூறப்படும் விஷயங்கள் நம்பத் தகுந்தவையே. சில சிறு விஷயங்களிலே எனக்கும் இந்நூலாசிரியருக்கும் கருத்து மாறுபாடிருப்பி னும், இந்நூலின் கையெழுத்துப்பிரதியைப் பெருமகிழ்ச்சி யுடனும் நற்பயன் தரும்வகையிலும் படித்தேன். இந் நூலின் அருமைக்கேற்றவாறு பல்லோர் இதனை வாசித்து ஆசிரியருக்கு ஆர்வமூட்டுவரென நம்புகிறேன்.

ஆகஸ்டுமீ, 1932ஹு. உவி. கைகர்.

# முதனூலாசிரியரின் முகவுரை

இலங்கையின் பூர்வ சரித்திரத்தைக் கூறும் நூலொன்றும் இல்லையென்னுங் குறையை நீக்கவே இப்புத்தகத்தை வெளியிடுகிறேன். கட்டுக்கதைகளெனக் கருதப்படுவனவற்றைக் கூருது, கூடினவரையில் உண்மையான விஷயங்களையே இந்நூலுக்கு ஆதாரங்களாகக் கொண்டுள்ளேன். இஃது இலேசான காரியமாகவில்லை. சரித்திரநூலாராய்ச்சி செய்யும் மாணவனொருவனுக்கு, இலங்கையின் பூர்வசரித்திரத்தைப்பற்றிக் கூறப்படும் விஷயங்களெல்லாம், ஆராய்ச்சி செய்தற்கான விஷயங்களாகத் தோன்றுமேயொழிய, திட்டமாகக் கூறக்கூடியனவாக இராவாம்.

இத்தகைய நிலைமையிலே, இந்நூலிற் கூறப்பட்டவையனைத்தும் விவரமாகவேனும் திட்டமாகவேனும் உள்ளனவென்பது பொருந்தாது. ஆராய்ச்சிசெய்தற்கு இன்னமும் பலவிஷயங்களுள்ளனவாகையினலே, சரித்திர இலட்சணங்களனைத்தும் பொருந்திய நூலொன்றை வரைதற்கு நெடுங்காலஞ் செல்லும். மகாவம்சம் மாத்திரம் மொழிபெயர்க்கப்பட்டும் உரையெழுதப்பெற்றும் இருக்கின்றதேயொழிய, ஏனைய நூல்களை இதுவரையில் ஆராய்ச்சிக்கான வகையில் ஒருவரும் பதிப்பிக்கவில்லை. கற்சாசனங்கள் பலவற்றைச் சோதிக்கவும் அவற்றிலடங்கிய விஷயங்களைப் பிரசுரம் செய்யவும் வேண்டியிருக்கின்றது; எனவே இவற்றையும் நாம் ஆதாரமாகக்கொள்ளுதற்கில்லை. புராதன

கட்டடவாராய்ச்சியும், இந்தியாவிற்போல வெகுநுட்ப மாகச் செய்யப்படவில்லை. அனுராதபுரத்திலும், சரித்திர விஷயமான கட்டடங்களை அகழ்ந்தெடுத்துச் செய்தற் கானவேலை பெரிது மிருக்கின்றது; இவ்வாறு ஆராய்தற்கான இடங்கள் இன்னும் பலவுளவென்க.

இந்நூலை இயற்றுதற்கு அறிஞர்பலர் இயற்றிய நூல் கள்பல உதவின. அவற்றின் பெயர்களைக் கூறின், விரியும். எனினும் கோட்ரிங்டன் அவர்கள் இயற்றிய இலங்கைச் சரித்திரச் சுருக்கம் என்பதும், பேராசிரியர் உவில்யம் கைகர் என்பார் அரும் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் புதிப்பித்த சூளவம்சம் என்பதின் ஆங்கிலமொழிபெயர்ப்பும் எனக்குப் பெரிதும் உதவிசெய்தன என்று கூறுதல் அவசியமாகும். பல்வழிகளிலே எனக்கு ஒத்தாசை புரிந்த திரு. எஸ். பரனவிதான அவர்களும், முகவுரையளித்த பேராசிரியர் கைகர் அவர்களுக்கும், இந்நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துதவிய திரு. கீ. சி. இராமஸ்வாமி அவர்களுக்கும் என் நன்றி என்று முரியதாகும்.

இந்நூலிற் காணப்படும் வேடர்களின் படம் செலிக் மன் இயற்றிய வேடர் என்னும் நூலிலிருந்து சுருக்கப் பட்டு கேம்பிரிஜ் சர்வகலாசாலையாரின் அன்பார்ந்த அனு மதியுடன் இந்நூலிற் பிரசுரிக்கப்படுகின்றது. மற்றப்படங் களெல்லாம் அரசினர் புராதன கட்டடப் பாதுகாப்புப் பகுதியாரிடமிருந்து பெறப்பட்டன.

"ராக்ஸ்லி"
பாணந்துறை, இலங்கை,
நொவம்பர், 1933.

ஜி. ஸி. மெண்டிஸ்.



சசஜாதகக் கதையை விளக்கும் சித்திரம்—இது பொலன்னறுவையிலே வடபுறத்திலுள்ள கோயிலிற் காணப்படுகின்றது.

# இலங்கையின் பூர்வ சரித்திரம்

## முதலாம் அதிகாரம்

### இலங்கையின் புராதன, மத்தியகால சரித்திரம்

மகாவம்சம்.

இலங்கையின் புராதன, மத்தியகால சரித்திரத்தைக் கூறும் இந்நூலை வரைதற்குப் பாளி மொழியில் இயற்றப்பட்ட மகாவம்சம் என்னுங் காப்பியமே முக்கிய ஆதாரமாக உதவியது. இம் மகாவம்சத்தின் முதற்பாகம், கர்ணபரம்பரையாகக் கூறப்பட்ட சரித்திர காலந்தொடங்கி மகாசேன மன்னனுடைய ஆட்சி முடிவு (கி. பி. 362) ஈறாக, இலங்கைச் சரித்திரத்தைக் கூறுகிற்கும்; இது கி. பி. ஆறும் நூற்றாண்டளவிலே அநுராதபுரத்திலே மகா விகாரையிலே பௌத்த பிக்கு ஒருவரால் இயற்றப்பட்டது. ஓலைச்சுவடிகளிலே எழுதப்பெற்ற இந்நூலின் மிகப் பழைய பிரதியின் காலம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டிராதெனலாமெனினும், 12-ம் நூற்றாண்டிலே இயற்றப்பட்ட உரையினாலே மூல நூலின்காலம் அநேகமாய் ஒருவாறாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மகாவம்சத்தின் இரண்டாம் பாகம் (இதனைச் சூளவம்சம் எனவும் சில்லோர் கூறுவர்) முப்பிரிவுகள் கொண்டது. இதிலே, 1-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சி முடிவு (கி. பி. 1186) வரையிலும் நடைபெற்ற சம்பவங்களைக் கூறும் முதற் பிரிவானது, தர்மகீர்த்தி என்னும் பௌத்த பிக்குவினாலே, அநேகமாய்ப்

பொலன்னறுவையிலே 13-ம் நூற்ருண்டின் முற்பகுதியிலே இயற்றப்பட்டது. 4-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் முடிவு வரைக்கும் இத்தீவின் சரித்திரத்தைக் கூறும் இரண்டாம் பிரிவு, எக்காலத்திலியற்றப்பட்ட தென்பதும் இயற்றியவர் எவரென்பதும் நமக்குத் தெரிய வில்லை; ஆனல் கி. பி. 1333-ம் ஆண்டு வரையில் நடைபெற்ற விஷயங்களைப் கூறுவதிஞலே அதற்குப் பின்னரே அது வரையப்பட்டிருத்தல் வேண்டும். மூன்ரும் பிரிவு, கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (கி. பி. 1747-1781) காலத்திலே இயற்றப் பட்டது; இதனை எழுதியவர் பௌத்தபிக்குவான திபோத் துவாவ சுமங்கலர் எனக் கருத இடமுண்டு.

எனவே மகாவம்சமானது, இலங்கையின் சரித்தி ரத்தை அதன் ஆதி காலந்தொடங்கி—1877-ம் ஆண்டிற் சேர்க்கப்பட்ட அனுபந்தத்தையும் சேர்ப்போமாயின்—பிரிட்டிஷார் இலங்கையை வென்றகாலம் வரையிற் கூறு கின்றது. இவ்வாறு தொடர்பான சரித்திரக் குறிப்பைக் கொண்ட நாடுகள் மிகச் சிலவே; இந்தியாவின் எப்பகுதி யும், தன் பூர்வசரித்திரத்தை வரையப்பெறுதற்கு இத்துணை அருமையான சான்றுகளைப் பெற்றிருக்கவில்லை. ஆனல் மகாவம்சத்திற் கூறப்படுவனவெல்லாம் கர்ணபரம்பரையாக வழங்கிவந்த வரலாறுகளே; அவற்றை இதிகாசத்துக்கேற்ற சான்றுகளாகக் கொள்ளு முன்னர் ஊன்றி ஆராய்தல் வேண்டும்.

விஜயன் முதல் துட்டகெமுனு வரையில்.

மகாவம்சத்தின் முதற்பகுதிக்கு ஆதாரமாயுள்ள விஷ யங்கள், மகாவிகாரையிலே காணப்பட்ட பௌத்த சமய நூல்களுக்குச் சிங்கள மொழியிலே எழுதப்பெற்ற அர்த்தகதை என்னும் உரையிலே காணப்படும் சரித்திர

சம்பந்தமான பரம்பரைக் கதைகளாம். நான்காம் நூற்றூண்டளவிலே, செய்யுள் நடையிலியற்றப்பட்ட பாளி நூலாகிய தீபவம்சம் என்பதிற் கூறியுள்ளபடி, மகாவிகாரை, துட்டகெமுனுவின் உடன்பிறந்தவனுன சத்தாதிஸ்ஸனுற் கட்டப்பட்டது; தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இரு புராணங்களின்படியும், கி. மு. முதல் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்த சத்தாதிஸ்ஸனின் மகன் வலகம்பா (வத்த காமனி அபயன்) காலத்திலே அர்த்தகதை என்னும் உரை எழுதப்பட்டது. சத்தாதிஸ்ஸன் காலத்திலிருந்து நடைபெற்றனவாக மகாவம்சத்திலே கூறப்பட்ட விஷயங்கள் பொதுவாக நம்பத்தகுந்தவையே யென்பது அந்நூலை ஆராய்ச்சி செய்த போது விளங்குகின்றது. அதிலே கூறப்பட்டுள்ளபடி, வலகம்பா கால முதற்கொண்டே திட்டமான குறிப்புக்கள் வரையப்பட்டிருக்கலாமென்றெண்ண இடமுண்டு.

சத்தாதிஸ்ஸனுக்கு முந்திய அரசர்களைப்பற்றிக் கூறப்படும் நிகழ்ச்சிகள்—இவ்வரசர்களில் மிகப் புராதன காலத்தவர் உண்மையிலே சீவித்தவர்களாயிரா து, புராண ஆசிரியரால் சிருட்டீனை செய்யப்பட்டவர்களாயிருக்கலாம்—புராணக் கதைகளாயுள்ளன; அவற்றை நுணுகி ஆராய்ந்து, அடிப்படையான மெய்ப்பொருளை யறிதல் இலகுவான கருமமன்று. இக்காரணத்தினுலே, மேற்கூறிய புராணக்கதைகள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்பட்டிருப்பதோடு, அவற்றிற் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளும் உண்மையானவையெனக் கருதப்பட்டுள்ளன. விஜயனைப்பற்றியும் பண்டுகாபயனைப்பற்றியும் கூறப்பட்டுள்ள விஷயங்களை வெறுங் கட்டுகதைகளேயென நிராகரித்து, தேவானன்பிய திஸ்ஸன் கால முதலாக மகாவம்சத்திற் கூறப்பட்டுள்ளவற்றையே மாத்திரம் உண்மையெனக் கருதுவோரும் சில காலமாகத் தோன்றி

யுள்ளனர். மகாவம்சத்திலே தேவானன்பிய திஸ்ஸன் கால முதலாக, உண்மையான சரித்திரமெனக் கூறுதற்கான விஷயங்கள் காணப்படுகின்றனவென்பது உண்மையே; ஆனால் கட்டுக்கதைகளென வெளிப்படையாகக் கூறக்கூடிய பகுதிகளை மாத்திரம் நீக்கி, ஏனையவற்றை உண்மையெனக் கருதுதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. இலங்கைவாசிகள் எண்ணுவது போன்று, மகிந்தன், அசோகனுடைய புதல்வனே என்னுங் கொள்கைக்குச் சான்றாக இலங்கைக்குப் புறம்பான எந்த சரித்திரத்திலும் கூறப்படவில்லை. மற்று, அசோக மன்னைப்பற்றிச் சமீப காலத்திலே செய்த ஆராய்ச்சிகள், சில வாண்டுகளுக்கு முன் ஓல்டன்பர்கனர் என்னும் ஜெர்மானியப் பேராசிரியர் கொண்ட கொள்கையை—அதாவது மகிந்தனுடைய பிறப்பு வளர்ப்பு முதலியவை வெறுங் கட்டுக்கதைகளே என்பதை—நிலைப்படுத்துவன வாயுள்ளன. ரூவன்வலி சயவும், உலோகபாசாதாவும் (பித்தளையாண்மனை) துட்டகெமுனுவினுற் கட்டப்பட்டனவென மகாவம்சத்திற் குறிக்கப்பட்டுள்ளது, ஆனால் அந்நூலையும் தீபவம்சத்தையும் நுணுகி ஆராயுங்கால், இது உண்மையோவென ஐயுறுதற்கிட மேற்படுகின்றது. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னே ஏற்பட்ட சில கட்டடங்களைக் கட்டினவர் எவரென ஆராயும்போதும் மேலே காட்டிய இருநூல்களிலும் ஒற்றுமையான முடிவைக் காண முடியவில்லை. அக்காலத்திலே நிருமாணிக்கப்பட்ட கட்டடங்களின் முழுப்பட்டியும் மகாவம்சத்திற் கூறப்படவில்லை. உதாரணமாக, பண்டைக் காலத்திய டாகபக்களுள் களனி டாகபவே மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. ஆனால் அஃது யாரால் எப்போது நிருமாணிக்கப்பட்ட தென்பதைப்பற்றி மகாவம்சத்திலே யாதும் கூறப்படவில்லை.

சத்தா தீஸ்ஸன் முதல் மகா சேனன் வரையில்.

முதலாம் நூற்றுண்டு தொடக்கம், தேச சரித்திரத்துக்கு ஆதாரமான விஷயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. சத்தாதிஸ்ஸன் (கி. மு. 77-59) முதல் மகாசேனன் (கி. பி. 334-362) வரையிலும் ஆட்சி புரிந்த மன்னரின் வம்சாவளிகள் சாசனங்களினுல் நிச்சயப்படுத்தப்பட்டுள்ளன; இவற்றை மிகப் புராதனமான சான்றுகளிலே ஒரு பகுதியாமெனை நாம் கருதுதல் வேண்டும்.

இக்கால முதலாகக் கட்டடங்களைப் பற்றின விவரங்களும் முன்னிலும் திட்டமாயுள்ளன: இவற்றைக் கட்டினவர்களைப்பற்றித் தீபவம்சத்திற் கூறப்பட்ட வரலாற்றுக்கும் மகாவம்ச வரலாற்றுக்கும் அனேகமாய் முரணில்லாமையினுலே இவ்வாறு கூறலாகும். ஒவ்வோர் அரசனுடைய ஆட்சிக்காலங் குறிக்கப்பெற்ற வம்சாவளிகள் சேமிக்கப்பட்டும், கட்டடங்களைப் பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்கிவந்த கதைகள் பின்னர் சேர்க்கப்பட்டும் வந்தனவென்று நாம் கூறலாம்.

கீர்த்தி ஸ்ரீமேகன் முதல் 1-ம் பராக்கிரமபாகு வரையில்.

சூளவம்சத்தின் முதற்பாகத்திற் பெரும்பகுதி, ஆலய நிருமாணம் முதலிய நற்கருமங்களைப் பற்றின விவரங்களையும், சரித்திர வழியிலே பயன்படாதனவாயினும் மாந்தர்க்கு அறிவூட்டக்கூடிய கட்டுக்கதைகளையும், அடக்கி யுள்ளது. அந்நூலிற் கூறப்பட்ட வரலாறு முக்கிய அம்சங்களிலே உண்மையானதே; ஏனெனில் அதைப் பற்றின சான்றுகள் இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள கற்சாசனங்களிலும், அயல்நாட்டு இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

இப்பகுதி யியற்றிய ஆசிரியருக்கு உத்தம புருஷனாய் விளங்கிய 1-ம் விக்கிரமபாகுவின் ஆட்சி வெகு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவன் அரச இலட்சணங்களெல்லாம் பொருந்தியவனென்றும், அமானுஷ்யமான கருமங்களைச் செய்தானென்றும் கூறப்பட்டுள்ளது. சில சமயங்களிலே அவனுடைய நற்குணங்கள் அளவுகடந்து புகழப்பட்டுள்ளன; அவனுடைய சிறப்பைக் குன்றச்செய்யக்கூடிய விஷயங்களோ கூறாது விடப்பட்டுள்ளன. மேலும், சூளவம்சம் காப்பியமுறையிலே இயற்றப்பட்டமையினாலே, அதனைச் சிறப்பிக்கக்கூடிய அணியலங்காரங்களைக் கையாளுதற்கு ஆசிரியர் தமது ஸம்ஸ்கிருத அறிவை உபயோகிக்கப் பின்வாங்கவில்லை. அப்படியிருந்தும், இச் சரித்திரம் உண்மை நிகழ்ச்சிகளைத் தழுவியுள்ள தென்பதும் குற்றமெல்லாம் மிகைபடக்கூறல் என்பதனுள் அடங்குமென்பதும் வெளிப்படை. ஏனெனில், இதிற் கூறப்பட்ட விஷயங்களுக்குப் போதிய சான்றுகள் இந்தியாவிலும் இலங்கையிலும், கற்சாசனங்களிலும், இலக்கிய நூல்களிலும், புராதன ஞாபகச் சின்னங்களிலுங் காணக் கிடக்கின்றன.

2-ம் விஜயபாகு முதல் 8-ம் பராக்கிரம பாகு வரையில்.

பல விதங்களிலே சூளவம்சத்தின் இரண்டாம் பாகம் முதற்பாகத்தைப் போன்றேயுள்ளது. மூன்றாம் பாகமோ சுருக்கமானது; அரசர்களைப்பற்றி யாதும் கூறுவதின்று. இரண்டாம் பாகத்தை இயற்றியவருக்குப் புருஷசிம்மமாய் விளங்கிய 2-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியைப்பற்றின வரலாறு மிகவும் விஸ்தரித்துக் கூறப்பட்டுள்ளது; ஆனால் அது சரித்திர ஆராய்ச்சிக்குரிய நூலோவென ஆராயும்போது, 1-ம் பராக்கிரமபாகுவின்

ஆட்சிக்கால விவரத்திலும் குறைந்த நன்மை பயப்பதாகவே காணப்படுகின்றது.

மகாவம்சத்திற் கூறப்பட்ட நிகழ்ச்சிக் காலங்கள், புத்தர் நிருவாண மடைந்த வருடமெனக் கர்ண பரம்பரையாகக் கூறப்பட்ட ஆண்டு முதற்கொண்டே கணக்கிடப்பட்டு வருகின்றன.

கால அட்டவணை.

புத்தரது நிருவாணம்—அதாவது மரணம்—இந்திய கிரேக்க நூல்களிலும் மகாவம்சத்திலும் கூறப்பட்ட காலங்களை ஆராய்ந்ததிலிருந்து, கி. மு. 483-ம் ஆண்டிலெனக் கருதப்படுகின்றது. மத்தியகாலத்திலே இலங்கையில் வழங்கி வந்த கால அட்டவணைப்படி, புத்தர் கி. மு. 543-ம் ஆண்டிலேதான் நிருவாணமடைந்திருத்தல் வேண்டும். மேற்கூறிய இரண்டுக்குமுள்ள வித்தியாசம் அறுபது ஆண்டுகளாகும்; அவ்வாண்டுகளின் சிறு பின்னப் பகுதிகளைப் பிழையாக எண்ணியதினுல் இப்பிழை ஏற்பட்டிருக்க வேண்டும்; அன்றேல் ஒருவர் செய்த மாற்றமாயிருக்க வேண்டும். நிற்க, இலங்கையிலே [11-ம் நூற்றுண்டின் ஆரம்பம் வரையில்] காலவரையறை கி. மு. 483-ம் ஆண்டுமுதல் தொடங்கியதாகக் கருதப்பட்டது; ஆனுல் அதற்குப்பின் யாதோ வொரு காரணத்தினுல் கி. மு. 544-ம் ஆண்டே புத்தர் நிருவாண மடைந்த வருடமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தென்பதே, அறிஞர் கைகரின் கூற்று. கால வரையறையைப் பற்றி நிச்சயமாகக் கூறுதற்கில்லாமையினுலே, தாம் கூறும் அரசர்களின் ஆட்சிக் காலத்தைக் குறைத்து, இப்பிழையைத் திருத்த சூளவம்சத்தின் முதற்பாக ஆசிரியர் முயன்றுள்ளார். கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன், 2-ம் சேட்ட திஸ்ஸன், புத்ததாசன்

என்பவர்களுடைய மொத்த ஆட்சிக்காலத்திலிருந்து அறுபது ஆண்டுகளைக் குறைப்பதினாலே இப்பிழையை நீக்க அறிஞர் கைகர் முயன்றுள்ளார்.

பண்டைக்காலத்திய அரசர்களின் ஆட்சிக் காலம் முழு ஆண்டுகளாகக் கூறப்பட்டிருப்பதே, அவ்வித ஆட்சிக் கால வரையறை நம்பத்தகாததென்பதை நன்கு காட்டும். ஆனால் இவ்வரையறை, சத்தாதிஸ்ஸன் அல்லது அவன் சகோதரன் துட்டகெமுனு காலமுதலாகவே ஒருவாறு உண்மையெனக் கூறலாகும். சத்தாதிஸ்ஸன் முதலாக 1-ம் விஜயபாகுவரையிலும் செங்கோல் செலுத்திய வேந்தரின் ஆட்சிக் காலங்களும் ஒருவாறாக உத்தேசமானவையே எனக் கூறுதல்வேண்டும். நிற்க, சூளவம்சத்தின் இரண்டாம் மூன்றும் பாகங்களிற் குறிக்கப்பட்ட காலஅட்டவணைகளும் திட்டமானவை யென்பதற்கில்லை. சில அரசர்களின் ஆட்சிக்காலம் கூறப்படவில்லை; ஒரே சமயத்தில் இரண்டு மூன்று அரசர்கள் ஆட்சிபுரிந்ததாகக் கூறப்பட்டிருப்பதினாலே, கணக்கைச் சரிபார்த்தலுங் கடினமாயிருக்கின்றது.

**ஏனைய ஆதார நூல்கள்.**

மகாவம்சம், பிரதானமாக ஓர் சமயநூலானதையினாலே, இத்தீவின் அரசியற் சரித்திரத்தையும், அக்காலத்து மாந்தரின் செல்வம், வாணிபம் என்பவற்றின் வரலாற்றையும் விவரித்தற்குப் போதிய ஆதாரமாகாது. ஆகையினாலே, அதிலிருந்து பெறப்பட்ட விஷயங்களோடு, வேறுவகை நூல்களிலிருந்து பெறப்பட்ட விஷயங்களும் ஆதாரமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. விஜயன் முதல் துட்டகெமுனு காலம்வரையில் நடந்த விஷயங்களுக்காதாரமாக, நில நூலறிஞர், சீவ நூலறிஞர், மானிடசரீர வளர்ச்சி நூலறிஞர்,

இதிகாசச் சிற்ப நூலறிஞர் என்போரியற்றிய நூல்களி லிருந்து விஷயங்கள் தொகுக்கப்பட்டன; ஆனால் இவற்றிலிருந்து பெற்ற பயன் மிகச் சிறிதே; ஏனெனில், வேடர்களைப் பற்றியுள்ள நூல்களைத் தவிர மற்றவற்றைப் பற்றின ஆராய்ச்சி இலங்கையிலே ஆரம்ப நிலையிலே தானுள்ளது.

பிற்பகுதிகளைப் பற்றின மட்டில் முன்னிலுமதிகமான விஷயங்கள் பெறப்பட்டுள்ளன. மகாபோதி வம்சம், பூஜா வலியம், நிகாய சங்கிரகம் என்பன போன்று, பாளியிலும் சிங்களத்திலுமுள்ள இலக்கிய நூல்கள் மகாவம்சத்திற் கூறப்பட்டுள்ள விஷயங்களை உறுதிப்படுத்துவதோடு, மேல திகமான விஷயங்களையுந் தெரிவிக்கின்றன. சீனயாத்திரிக ரான பாகியன், அராபிய யாத்திரிகரான இபின் பதூதா என்போரைப்போன்ற பிற நாட்டினர் வரைந்துள்ள விருத் தாந்தங்களு முள; இவை, வேறு நூல்களிலே குறையாகக் கூறப்பட்ட விஷயங்களை ஓரளவுக்குப் பூரணப்படுத்துகின் றன. அரசர்கள், போர்கள், விகாரைகளின் பராமரிப்பு என்ப வற்றைப்பற்றின விஷயங்களை இலங்கையிலும் இந்தியாவி லும் காணப்படும் சாசனங்கள் விவரமாகத் தெரிவிக்கின் றன. இலங்கைக்கும் பிற நாடுகளுக்குமுள்ள தொடர்பை யறிந்து கொள்ளுதற்கு நாணயங்கள் விசேடித்த வகையிலே மிகவும் உபயோகமாயுள்ளன. மேலும், இலங்கைத்தீவினரின் வாழ்க்கை, மனோநிலை என்பவற்றையும், அந்நிய நாட்டுச் சம்பந்தத்தையும் அறிந்துகொள்ளுதற்குப் புராதனக் கட்டடங்களும் அவற்றைப்பற்றிக் கூறும் நூல்களும் பெரிதும் உதவி செய்துள்ளன.

'சரித்திரம்' (இதிகாசம்) என்பதைப் பற்றி மாந்தர் கொண்டுள்ள அபிப்பிராய பேதங்கள்.

சரித்திரம், அதாவது இதிகாசம், இன்ன இலட்சணங்கள் பொருந்தியிருக்கவேண்டும் என்பதைப்பற்றி நமக்கு மாறான கருத்துக் கொண்டிருந்தவர்களாலே மகாவம்சம் வரையப்பட்டிருப்பதனாலேயே, அந் நூலைச் சரித்திர நூலாக நாம் கருதும் போது, குற்றங் குறைகள் காணப்படுகின்றன. காப்பியங்கள்—பெரும்வீரர், முனிவர், நல்லோர், என்பவர்களைப்பற்றிய புராணக் கதைகள்—வம்சாவளிகள்—என்பவை, சரித்திர நூல்களோவென ஆராயும்போது, அவை மிகவும் குறைவு கொண்டவையே. மகாவம்சமும் இத்தன்மையதே.

இதற்கடுத்த மேலான படியிலுள்ள சரித்திரங்கள் தாமும், சரித்திர நூல்களைப் பற்றி நாம் கொண்டுள்ள உயர்நிலைக்கு வரவில்லை. மற்று, நீதிகளைப் போதிப்பதற்காகவே அவை பிரதானமாக இயற்றப்பட்டன. கிரேக்க ஆசிரியரான துசிதிதீசு என்பார் இயற்றிய பெலோப்போனீசியப் போர் என்னும் நூலும், போர்த்துக்கேய ஆசிரியரான குவைரோசு என்பார் இயற்றிய "இலங்கையின் ஆத்மீய இலௌகிக வெற்றி" என்னும் நூலும் இவ்வகுப்பைச் சார்ந்தவை. சரித்திர நிகழ்ச்சிகளை எடுத்துத் திட்டமாகக் கூறுதற்கு வேண்டிய விஷயங்களை இவை பெரிதும் உதவுவதோடு, நிகழ்ச்சிகளுக்கான காரணங்களைக் கூறி விளக்கவும் முயல்கின்றன. ஆனால் விஷயங்களைத் தெரிந்தெடுப்பதும், உட்கருத்துக்களை விளக்குவதும் அந்நூலாசிரியருடைய சுய அபிப்பிராயங்களுக்கும் நோக்கங்களுக்கும் இசைய இருத்தலால் இவை குறை கொண்டனவே. மேலும், ஒரு கொள்கையை ஆதரிக்கவோ,

அன்றேல் அரசியற்கட்சியில் ஒரு பிரிவினருக்குச் சார்பாக இருக்கவோ முயல்வதை இந்நூல்களில் நாம் பன்முறை காண்டல்கூடும்.

மானிடரின் வளர்ச்சிக் கிரமத்தை விளக்குவதே இக்காலத்திய சரித்திர ஆசிரியரின் பிரதான நோக்கமாகும். எச்சாதியினரும் இயற்கைத் திறமைகளை ஒரே அளவுக்குப் பெற்றுள்ளனர்; சந்தர்ப்பமும் வசதியும் ஏற்படின், சமுதாய முன்னேற்ற மடைதற்கு மாந்தர் ஒரேவிதமான சந்தர்ப்பங்களைப் பெற்றுள்ளனர் என்னும் கொள்கையை அவர் கொண்டிருக்கிறார். இவ்வளர்ச்சி அல்லது அபிவிருத்தியிலேற்படும் மாறுதலானது, மானிடன் தனக்கு உவக்காத இடங்களிலே வாசஞ்செய்வதினாலோ, அன்றேல் ஏனைய மாந்தரின் சம்பந்தமே யற்றிருப்பதினாலோ ஏற்படுகின்றதெனஅவர் கூறுகின்றார். முன்னுளைய சம்பவங்களுக்கும் இக்கால நிகழ்ச்சிகளுக்கும் நேரான தொடர்புண்டு என்பதையும் உணர்கிறார். தற்காலச் சம்பவங்கள், முன்னே நடைபெற்ற எண்ணிறந்த நிகழ்ச்சிகளின் பயனென்பதை அவர் அறிந்திருக்கிறார்; அதனால் மானிடர் தம் தற்கால நிலைமையை எவ்வாறு பெற்றார் என்பதை அவர் விளக்குகின்றார். அரச வம்சங்கள், ஆட்சிமுறை என்பவற்றை யறியவதோடு மாத்திரம் அவர் திருப்தி படையாது, குடிகளின் அரசியலறிவு வளர்ச்சியிலும், அவர்களுடைய மனப்பாங்கிலும், சமுதாய வாழ்க்கையிலும், இல்வாழ்க்கையிலும் அவர் கவனஞ் செலுத்துகிறார்.

இவ்வளர்ச்சியை விளக்குதற்பொருட்டு ஒரு நாட்டின் சரித்திரத்தைப் பலபகுதிகளாகப் பிரித்தல் வழக்கமாம். திட்டமாக வரையறுக்கப்பட்ட காலப் பகுதிகள் இல்லை

**சரித்திர காலப் பகுதிகள்.**

யென்பது உண்மையே. ஆனால், ஒரு சில புது விஷயங்கள் மானிடனைத் தாக்கும்போது, அவனுடைய எண்ணங்களும் வாழ்க்கை நிலைகளும் மாறுதலடைகின்றன. அப்போது, அது வரையிலே பின்பற்றப்பட்ட சீவியமுறை ஓரளவுக்கு நிலை குலைந்து புதிய வாழ்க்கை முறைக்கு இடந்தருகின்றது. இப் புது வாழ்க்கைதானும், நவீனக் கொள்கைகளும் வேறான நிலைமைகளும் ஏற்படும்வரையிலேதான் நிலைத்துள்ளது. இத் தகைய பகுதிகள், மானிடனது வளர்ச்சிப் பருவங்களைப் பற்றித் தெளிவான எண்ணங்களை நமக்குத் தருகின்றமையி னாலே, பரும்படியாக யாதேனுமொருவகை சீவிய நிலைமை பிரதானமாகக் காணப்படுங் காலம், ஓர் சரித்திரகாலப் பகுதியெனப்படும்.

இலங்கைச் சரித்திரம்— அதன் காலப் பகுதிகள்.

மானிட சரித்திரமானது, வேட்டையாடும் பருவம், மாடுமேய்க்கும் பருவம், கிருஷிப் பருவம், வாணிபப் பருவம், கைத்தொழிற் பருவம் அல்லது பகுதி என வகுக்கப்படுவது முண்டு. இலங்கைச் சரித்திரந்தானும் இப் பருவங்களுள் அநேகமாக அடங்குமென்க. மாந்தர் முதன் முதலாக இலங்கைக்கு வந்தபோது அவர்கள் வேட்டையாடும் பருவத்திலே இருந்தார்களென்பதற்கு இக் காலத்திலேயுங் காணப்படும் வேடர்களே சான்றுகளாவர். பின்னர் இத் தீவிற் குடியேறிய ஆரியர், கிருஷிப் பருவத்தை யும், போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வாணிபப் பருவத்தை யும் ஏற்படுத்தினர் ; பிரிட்டிஷார் வந்த பின்னர், இலங்கை, கைத்தொழிற் பருவத்தை அடைந்ததெனலாம்.

ஆனால் இவ்விதப் பாகுபாடு, இலங்கைத் தீவின் பல்வேறு பருவங்களைப்பற்றி நமக்குப் போதுமான விஷயங்களை

அறிவிக்காதென்க. முதற் பகுதி, வேட்டையாடிச் சீவித்த மாந்தர் மாத்திரமே இலங்கைவாசிகளாக இருந்த காலமாகும் என்பதைக் காட்ட நமக்குத் திட்டமான சான்றுகள் உள்ளன. ஆரியர் குடியேறினமையோடு இரண்டாங்காலப் பகுதி தொடங்கியது; இவர்கள் கமத்தொழிலைத் தோற்றுவித்து, வேடர்களோடும் இலங்கைக்கு வந்த திராவிடர்களோடும் ஓரளவுக்குக் கலந்து அவர்களையும் ஆரியசாதிக்குள்ளமையச் செய்தனர். பௌத்த சமயம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டபோது மூன்றுங்காலப் பகுதி தோன்றியது. இதனாலே, இலங்கைவாசிகள் அசோக மன்னன் காலத்து நாகரிகத்தோடு தொடர்பு பெற, அதன்பயனாக இவர்கள் செங்கற்கட்டங்களை அமைக்கவும், கற்சிற்ப வுருவங்கள் செதுக்கவும், எழுதவுங் கற்றனர்; பௌத்த சமய உபதேசங்களினாலே பெரு நன்மை பெற்றனர். கி. மு. நான்காம் நூற்றாண்டிலே இலங்கையிலே இன்னோர் பெரும் மாறுதலுண்டாயது. புதிய சிற்ப உருவங்கள் செய்யப்படலாயின; முன்னிலும் பெரிய ஏரிகள் வெட்டப்பட்டன; பாளிமொழி அதிகமாகக் கற்கப்பட்டது; இலக்கியத் துறையிலே தீவிர முயற்சி காணபட்டது. கி. மு. நான்காம் நூற்றாண்டிலே இந்தியாவி லரசுபுரிந்த குப்த அரசர் காலத்திற் றோன்றிய சமுதாய முன்னேற்றம், நாகரிகம், கலைப்பயிற்சி என்பவற்றின் பயனும் மேற்றிசையிலே யுள்ள இத்தாலி முதலாக, கீழ்த்திசையிலே யுள்ள சீனம்வரையிலு முள்ள நாடுகளோடு இலங்கை சம்பந்தம் பெற்றமையினாலும், இம் மாறுதல்கள் ஏற்பட்டிருத்தல் கூடும். இதற்குப் பின்னர் தென்னிந்தியச் சோழ அரசர்கள் இலங்கையின் மீது படையெடுத்து, ஓர் பகுதியை தமதாக்கிக் குடியேறினமையினாலே, இலங்கையினரின் முன்னேற்றம் தடை

பட்டது; ஆனால் பொலன்னறுவையிலே சிங்கள மன்னர் ஆட்சி புரிந்த காலத்திலே சனங்கள் மீண்டும் மேனிலையடைந்து, கட்டட நிருமாணம், சிற்பம், இலக்கியம், கமம் என்னும் துறைகளிலே மேலான முன்னேற்றமடைந்தனர். இதற்கப்பால் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய மன்னரும், அவர்களுக்குப்பின் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும், ஈற்றிலே ஆங்கிலேயரும் படையெடுத்தமையினாலே, சிங்களரின் சுயராச்சியமும் சுவாதீனமும் படிப்படியாக மறைந்துபோயிற்றென்க. தென்னிந்தியாவிலிருந்து சோழர்களும் பாண்டியர்களும் படையெடுத்ததின் பயனாக, நம்மவர் கட்டட நிருமாணத்திலும் சிற்பத்திலும் அவர்களைப் பின்பற்றினர் என்பது யாவருமறிந்த விஷயமே; போர்த்துக்கேயர், ரோமன் கத்தோலிக்க சமயத்தை இத்தீவுக்குக் கொண்டுவந்தனர்; ஒல்லாந்தர், தமது சட்ட முறையைத் தாபித்தனர். ஆங்கில துரைத்தன முறையோ, தற்காலத்திய கைத்தொழில் முறைகளினால் ஏற்பட்ட நாகரிகத்தின் பயனா யுண்டான பெரும் மாறுதல்களின் உதவி பெற்று, இலங்கையிலே ஒற்றுமை யுண்டாகவும், மாந்தர் மீண்டும் நாகரிகமடையவும் ஒத்தாசை புரிந்தது. இப்போதோ இலங்கைவாசிகள், குடியரசு முறையிலே சுயராச்சியம் பெறுதற்கான வழிவகைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

**தேச சரித்திரத்துக்கும் பூமி சாத்திரத்துக்கு முள்ள தொடர்பு.**

இதுகாறும் நாம் விவரித்த பலசாதி மாந்தரின் செயல்கள், ஓரளவுக்கு இந்நாட்டின் நிலவமைப்பினாலும் ஏனைய பூமிசாத்திர சம்பந்தமான விஷயங்களினாலும் கட்டுப்பட்டிருந்தன; இவ் விஷயங்கள் புராதன மத்திய காலங்களிலே சனங்களின்

குணத்தையும் தொழில்களையும் அதிகமாகப் பாதித்தன. எனவே, இலங்கைச் சரித்திரத்தைப் பிழையற அறிதற்கு, இத்தீவின் இயற்கை யமைப்பு, நிலத்தின் செழுமை, இந்தியாவுக்கும் இதற்குமுள்ள அண்மை, தன்னுள் ளடக்கமாயிருக்குந் தன்மை, மேற்றிசை ஐரோப்பிய நாடுகளிலிருந்து, கீழ்த்திசையிலுள்ள சீயம், சீனம், ஜப்பான், சாவகம், சுமாத்திரா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையிலே மத்தியத்தானமாக இருத்தல், ஆகிய பிரதானமான பூமிசாத்திர விஷயங்களையும் நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

இலங்கைத் தீவின் செழுமையானது, மிகப் புராதன காலந்தொட்டு சாந்த குணம் வாய்ந்த குடியேற்றக்காரரை யும், ஈவு இரக்கமற்ற படையெழுச்சிக்காரரையும் தன்னை யடையச் செய்தது. நாட்டின் உட்பிரதேசங்களுக்கு ஓர் பாதையேபோன்று விளங்கின விஸ்தாரமான சமவெளி களும், கடற்கரையோரத்திலே மலைத்தொடரொன்று மில்லாதிருந்த விஷயமும், அந்நியர் இத்தீவினுள் நுழை வதையும் குடியேறுவதையும் இலகுவாக்கின. தீவின் மத்தி யிலே இருந்த குறிஞ்சி நிலமானது சிங்கள நாகரிகத்தை அழியாது பாதுகாத்தும் ஒரு சிலகாலத்துக்கேனும் தோல்வி யடைந்தோருக்கு அடைக்கலந் தந்தும், பேருதவி புரிந்தது ; ஆனால் தற்காலத்திற்போன்று போக்குவரவுக் கான வசதிகள் இராதிருந்த முற்காலத்திலே, இதுவே அரசியல் விஷயங்களில் ஒற்றுமையுண்டாவதை மிகவும் கஷ்டமாக்கியது. இத்தீவின் தென்மேற்குப் பகுதியிலே பொழியும் கனமழையும், அடர்ந்த காடுகளும், நதிகளும், நெற்பயிர்க்குகந்த நிலம் மிகச் சிறிதளவே யிருக்குந் தன்மையும், இப்பகுதியிலே மாந்தர் ஏன் கடைசியிலே

குடிபுகுந்தனர் என்பதை விளக்கும்; ஆனால், மகாவலி கங்கை யோடும் பிரதேசத்தின் தன்மையானது, அநுராத புரத்தரசர்களை இத்தீவின் கீழ்ப்பகுதிலும் தென்கீழ்ப் பகுதியிலும் மிகப்புராதன காலந்தொட்டுச் செங் கோலோச்சி வந்ததின் காரணத்தை விளக்கும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள தொடர்பு.

இலங்கை இந்தியாவை யடுத்திருப்பதே இத்தீவின் சரித்திரமானது, பாரத இந்திய நாட்டின் சமுதாய, செல்வ, கலாபிவிருத்தி யோடு மிக நெருங்கினவிதமாக வென் சம்பந்தபட்டுள்ள தென்பதை விளக்கும். இத்தீவினரிற் பெரும்பான்மையோர் கைக்கொண்டொழுகும் இரு பிரதான சமயங்களான பௌத்தமும் இந்து சமயமும் இந்தியாவிலிருந்தே வந்தன. சிங்கள வரிவடிவமும் தமிழ் வரிவடிவமும் ஒன்றே; இரு மொழிகளின் தாய் மொழியும் ஒன்றே. நூற் பொருளிலும் நடையிலும், சிங்கள இலக்கியமானது பாளி, சம்ஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலுமுள்ள இலக்கிய நூல்களைப் பெரிதும் தழுவியுள்ளது. இத்தீவிற் காணப்படும் கட்டடங்களும் சிற்பங்களும் பொதுவாக இந்திய மாதிரிகளையே பின்பற்றியுள்ளன வெனலாம். சமீப காலத்திற் கூட, அரசியல் முறை, சீர்திருத்தங்கள் என்பனவும் இந்தியாவில் நடைபெறுவன வற்றையே பெரும்பாலும் பின்பற்றியுள்ளன.

இஃதெங்ஙனமாயினும், இலங்கை தனிப்பட்ட ஓர் தீவாக அமைந்திருக்கும் நிலைமையும், ஆஸ்திரேலியாவுக்கும் கிழ்த்திசை நாடுகளுக்கும் செல்ல வுதவும் இந்து மகா சமுத்திரக் கடற்பாதையிலே அமைந்திருக்கும் தன்மையும், தனதெனக்கூடிய ஓர் விசேடித்த நாகரிகத்தைத் தோற்றுவித்து

அதனை ஒங்கவைத்தற்கு உதவியது. இலங்கைத்தீவு, பாரத கண்டத்தினோர் பகுதியாகமாத்திர மிருந்திருப்பின், இத்தீவினரை நாகரிகமடையச் செய்வதிலே பேருதவி செய்த பௌத்த சமயம், இந்து சமயத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து வென்றிருக்க முடியாது; அரேபியாவுக்கும் சீனத்துக்கும் நடுவிலே இராவிடின், போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கடற்கரைப் பிரதேசங்களை தம்மாட்சிக் குட்படுத்தி யிருக்கமாட்டார்; இந்தியாவினின்றும் பாக்கு சல சந்தியினாற் பிரிக்கப்பட்டிராவிடின், போர்த்துக்கேயர் உரோமன் கத்தோலிக்க சமயத்தையும், ஒல்லாந்தர் தம் சட்டமுறையையும் தாபித்திருக்கமாட்டார்; இந்திய சம்பவங்களோடும் ஓரளவுக்குச் சம்பந்தமேற்படுத்தாம விரார், என்பதும் உண்மையே யாகும்.

## இரண்டாம் அதிகாரம்

# ஆரம்பங்கள்

### 1. ஆதிகாலத்திற் குடியேறினவர்

சரித்திர காலத்துக்கு முந்திய பகுதி.

**மா**னிடரின் செயல்களைக் காட்டும் மிகப் புராதனச் சான்றுகளா யுள்ளவை தற்காலமுங் காணக்கூடிய பண்டைக் கருவிகளேயாம். இவற்றில் மிகப் பழமை வாய்ந்தவை, கற்களை ஒன்றன்மே லொன்றாகத் தாக்குவதினலுடைபட்ட சிறுகற்களே; இயற்கையோடும் காட்டு மிருகங்களோடும் போராடுதற்கு இவை பண்டைக்காலத்திய மானிடரால் உபயோகிக்கப்பட்டு வந்தன. கல்லினலான இவ்வாயுதங்கள் உபயோகிக்கப்பட்ட காலம் கற்காலமெனப்படும்; இது, பழைய கற்காலம், புதிய கற்காலம் என பிரிக்கப்படும்.

இலங்கையிலே இதுகாறும் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழைய ஆயுதங்கள், வெண்பரல், சிகிமுகிக்கல், சிப்பி என்பவற்றாலாக்கப்பட்டவை; இவை பழைய கற்காலத்தைச் சார்ந்தவை. மானிடர் மாத்திரமே கொண்டுபோயிருக்கக் கூடிய இடங்களாகிய குகைகளிலோ, அன்றேல் அவற்றினருகோ இவை கண்டெடுக்கப்பட்டமையினலே, மானிடர் தாம் இவற்றை உபயோகித்திருக்க வேண்டும். இவற்றை

எச்சாதியினர் உபயோகித்தனர் எனக் கூறுதல் இயலாது; ஆனால் இத்தீவிற் குடியேறிய ஆரியரிடமிருந்து இரும்பை உபயோகிக்கக் கற்குமுன், வேட சாதியினர் கல்லாயுதங்களையே உபயோகித்தனர் என்றெண்ண இடமுண்டு.

வேடர். இவ்வேடர் உயரத்திற் கட்டையர்; சுருண்ட உரோமமும், நீண்ட தலையும், ஓரளவு நீண்ட முகமும், நடுத்தரமாக அகன்ற மூக்கும் அமைந்தவர். திராவிடர் காலத்துக்குமுன்னே தென்னிந்தியாவிற் சீவித்துவந்த இருளர், குறும்பர், என்பாரை இவர்கள் சார்ந்தவர்; செலிபீசுத் தீவுகளிலுள்ள தோவலர்களுக்கும், சுமாத்திராத் தீவிலுள்ள பாதினர்களுக்கும் இவர்கள் உறவினரே என்று சொல்லப்படுகின்றது.

இதுகாறும் நமக்குக் கிடைத்த சான்றுகளின்படி, இலங்கைக்கு வந்தவர்களுள் இவர்களே முதல்வராவர். இவர்களுடைய சுய சனனத்தானம் எது வென்பது இது வரையில் தெரியவில்லை. இலங்கைக்கு வேடர் வந்த வரலாறும், அவர்களுடைய உறவினர் ஆஸ்திரேலியா வரைக்கும் எவ்வாறு பரம்பினர் என்பதும் அறியக்கூடவில்லை. இலங்கையும் இந்தியாவும் இக்காலத்தைப் போன்று கடலினாற் பிரிக்கப்படாதிருந்த ஒரு காலத்திலே, தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த காட்டு விலங்குகளைப் போன்று, வேடர்கள் இத்தீவிற் குடியேறி யிருக்கலாம்.

இலங்கைக்கு வந்த காலத்திலே வேடர்—அவர்களுட் சில்லோர் இப்போது மிருப்பது போன்று—மானிட சீவியத்தின் முதலாம்படியான வேட்டையாடிச் சீவிக்கும் பருவத்திலிருந்தனர். அவர்கள் மாரிகாலத்திலே குகைகளிலும், கோடைகாலத்திலே ஆற்றங்கரைக் கண்மையிலும்

குடியிருந்தனர். வில்லும் அம்புங்கொண்டு விலங்குகளை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தை உணவாகக் கொண்டனர்; மரவுரிகளையும் இலைகளையும் ஆடைகளாக வணிந்தனர்; கூட்டங் கூட்டமாகச் சீவித்தனர்; ஒரு குடும்பத்தின் நன்மைக்காக ஒவ்வொருவரும் தத்தம் சுகத்தை ஓரளவுக்கு இழக்கவேண்டி யிருந்தது. அவர்கள் மறுபிறப்புண்டென நம்பினர்; நோயினாற் பீடிக்கப்பட்டபோது, பிதிருக்களுக்குப் பலியிட்டு அவர்களைத் திருப்தி செய்ய முயன்றனர்.

இவ்வேடர்களுடைய சீவனம் சுகசீவனமே என்று கூறுதல் பொருந்தாது. பற்பல வேளைகளில் அவர்களுக்கு உணவு எவ்வாறு கிடைக்குமென்பதே பெருங் கவலைக்கிடமான விஷயமாயிருந்தது; உயிருக் கேதேனும் ஆபத்து நேரிடுமோ வென்று அவர்கள் இடைவிடாது கவலைப்படவேண்டியிருந்தது. காட்டு விலங்குகளின் சஞ்சாரத்துக் கேற்க அவர்கள் இடமாற வேண்டி யிருந்தது; வயிறு வளர்த்தற்கான தொழில்களைப் புரிவதிலேயே அவர்களுடைய நேரஞ் செலவழிந்தமையினாலே, வாழ்க்கையின் வேறு துறைகளைப் பின்பற்றுதற்கான ஒழிவு நேரம் அவர்களுக்குக் கிட்டவே யில்லை.

ஆகையினாலே, இலங்கைத் தீவின் நாகரிக வளர்ச்சிக்கு இவ்வேடர்கள் செய்யக்கூடிய தொண்டு ஒன்றுமே யில்லையெனக் கூறலாம். சிங்களச் சாதியினர் தோற்றுதற்குதவியதே அவர்கள் புரிந்த முக்கிய தொண்டாகும். ஆரியர் இலங்கையிற் குடியேறியபோது, அவர்கள் தம்மினத்தவரான பெண்மக்களைப் போதிய தொகையினராக அழைத்து வந்திருத்தல் இயலாத காரிய மாகையினாலே அவர்களிற் பலர் வேடப் பெண்களை மணந்திருத்தல் வேண்டும்.

வேடரின் சரித்திரத்தைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்த பேராசிரியர் செலிக்மன் என்பவரின் கொள்கையின்படி, இத்தீவின் உட்பிரதேசங்களிலே யுள்ள சிங்களவர், வேடருடன் மணமுடித்தமையினால் கலப்புச் சாதியினராகவே யிருத்தல் வேண்டும். இவ்வேடர் கமத்தொழிலைப் பின் பற்றி, சிங்களமொழி பேசி, அவர்களுடன் கலந்து உறவு கொண்டாடியபோதே இக்கலப்பு உண்டாயிருத்தல் வேண்டும். கண்டிப் பகுதியிலே, காலஞ் சென்ற பிரதானத் தலைமைக்காரருக்கும் சிற்றரசருக்கும் நிவேதனங்கள் அளிக்கும் பண்டார முறை, வேடர் பிதிர் பூசை செய்யும் வழக்கத்தினின்றும் தோன்றியதே என செலிக்மன் கூறியுள்ளார்.

இந்தியாவிலும் இலங்கையிலுங் குடியேறிய ஆரியர்.

வேடருக்கு அடுத்தபடியாக, இலங்கையிற் குடியேறினவரென நாம் திட்டமாய்க் கூறக் கூடியவர் ஆரியரே. இவர்கள் கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவினுட் பிரவேசித்தனர். இவர்களுடைய மிகப் புராதன கவிகளின் தொகுதி ரிக் வேதம் எனப்படும்; சிந்துநதியின் பள்ளத்தாக்கிலே வாசஞ் செய்தபோது அவர்கள் பின்பற்றிய சீவியம், பழக்க வழக்கங்கள் என்பவற்றைப்பற்றி இவ்வேதம் நமக்கு ஒரு சிறிது தெரிவிக்கின்றது. குடும்பத்துக்கு மூத்தவரான ஒருவருக்கு அனைவரும் அடங்கி நடப்பதையே ஆரிய சமுதாய வாழ்க்கையும் அரசியல் முறையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒவ்வொரு கூட்டத்தினரும் ஒவ்வோர் அரசனால் ஆளப்பட்டு வந்தனர்; போர்புரிதற் பொருட்டு, பல குழுவினரும் அரசர்களின் கீழ் ஒற்றுமை

பூண்டு நின்றனர். அரசர்கள், குடிகளின் சமிதி அல்லது சபையின் ஆலோசனைக் கிணங்க நடந்தனர். கிருஷித் தொழி லிலே அவர்கள் அதிகமான ஊக்கமெடுக்கத் தொடங்கின போதிலும் பெரும்பாலார் மேய்ச்சற் றொழிலையே பின் பற்றினர்.

ஆரியர், இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து புறப்பட்டு, குடியேறுதற்பொருட்டு கீழ்த்திசையும் தென் றிசையும் செல்வாராயினர்; ஆறுகளோடும் வழியையே அவர்களும் பின்பற்றினர்; சீக்கிரத்திலே அவர்கள் விந்திய மலைக்கு வடக்கே யுள்ள பிரதேசமுழுதும் பரவிவிட்டனர். தென்னிந்தியாவிலுள்ள பெரு நதிகளான மகாநதி, கிருஷ்ணை, கோதாவரி, தாம்பரபர்ணி என்பவற்றின் ஆரிய மொழிப் பெயர்களிலே அவர்கள் தெற்கே குடியேறின தற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இலங்கையிற் குடியேறிய ஆரியர் இந்தியாவிலிருந்தே வந்தனரென்பதற்கு ஐயமில்லை; ஆனால் அவர்கள் இந்தியா வின் எப்பகுதியிலிருந்து வந்தன ரென்பது மாத்திரம் நமக்குத் திட்டமாகத் தெரியாது. இதனை நிச்சயித்தற்கான ஒரு வழி, சிங்களம் பண்டைய இந்திய மொழிகளில் எப் பிரிவைச் சார்ந்ததெனக் காண்டலாகும். ஆனால், இதனைத் திட்டமாகக் கூறக்கூடிய அளவுக்குப் பண்டைய இந்திய மொழிகளும் சிங்களமும் இதுவரையில் நன்கு ஒப்பிடப் படவில்லை. கி. மு. 500 ஆண்டளவிலே, ஆரியக் குடியேற்றக் காரர், இந்தியாவின் மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்து புறப் பட்டு, கரையோரமே சென்ற நாவாய்களின் மீதேறி இலங் கையை யடைந்து, நதிகளினூடே தீவின் உட்பிரதேசங்களை அடைந்தனர். அவர்கள் குடியேறியதைக் காட்டும் மிகப்

புராதன சான்றுகள், ஆரியமொழியினின்றும் பிறந்த ஒரு வகைத் திசைமொழியிலே வரையப்பெற்ற சிலாசாசனங்களே யாம். இத்திசைமொழியிலிருந்தே சிங்கள மொழி விருத்தி யடைந்தது; கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பே இத்தீவின் வட, தென்கீழ், கீழ்ப்பாகங்களில் ஆரியர் குடியேறின ரென் பதை இச்சாசனங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. மிகச் சிலரே, வட, தென்மேற்குப் பகுதிகளிற் குடியேறினர். எனினும் சில்லோர் களனிப் பகுதியிற் றங்கியிருந்து, களனி நதியோடும்வழியே சென்று நாட்டினுட்பிரதேசங்களை யும் அடைந்தனர். இங்கே கல்லினுலான ஆயுதங்களை யுபயோகித்துவந்த வேடரை ஆரியர் தமது இருப்பாயுதங் களைக்கொண்டுச் சிரமமின்றித் துரத்தி யோட்டி யிருக்க வேண்டும். இவ்வேடர், செம்பினுலும், வெண்கலத்தி னுலுமான கருவிகளை யுபயோகித்து வந்தன ரென்பதைக் காட்ட ஆதாரம் யாது மில்லை; எனவே, இரும்பை யுபயோகிக்கும் திறமை கொண்ட ஆரியரோடு போரிடக் கூடிய வன்மை வேடர் பெற்றிருக்கமாட்டாரென்பது தெளிபு.

கிருஷித் தொழிலேயே முக்கிய முயற்சியாகக் கொண்ட ஆரியர் ஓரிடத்திலே நிலையாக இருந்து வாழ்க்கை நடாத்தி வந்தனர். தேவையான ஆகாரத்தைப் பெறுதற் கான வழிவகைகள் இருந்தமையினுலே, அவர்கள் சிறிதள வுக்குச் சுகமாகவே சீவித்தனரென்க. கிருஷித் தொழி லைப் பின்பற்றுவதினு லேற்பட்ட ஓய்வுநேரம், அவர் கள் ஒருவரோடொருவர் அளவளாவி சமுதாய வாழ்க்கை நடத்தவும், அறிவை வளர்க்கவும், ஆத்மீய விஷயத்தைப் பற்றி அவர்களுக்குண்டான ஆர்வத்தைப் பூர்த்தி செய்யவும் உதவியது.

*ஆரியரின் முதல் வாசத்தானம்.

ஆரியர் எவ்விடத்திலிருந்து முதன் முதலாகப் புறப்பட்டு ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு கண்டங்களுக்கும் குடியேறச் சென்றனரென்பது இதுகாறும் திட்டமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. 1767-ம் ஆண்டளவிலேயே, பிராஞ்சியரொருவர், ஸம்ஸ்கிருதத்துக்கும் சில ஐரோப்பிய மொழிகளுக்குமுள்ள தொடர்பை எடுத்துக் காட்டினார். இதற்குப் பின்னர், உவில்லியம் யோன்சு என்பார் ஸம்ஸ்கிருதம், பாரசீகம், கிரீக்கு, லத்தீன், செல்திக்கு, கோதிக்கு என்னும் வேறுபட்ட பல மொழிகள் ஒரு தாய்மொழியிலிருந்தே

---

*புராதனச் சிங்களமொழி, "ஈழம்" என்றழைக்கப்பட்டது. இது மிகப் புராதன காலத்திலே வழங்கிவந்த ஸம்ஸ்கிருதமொழி—அதாவது வேதநூல்கள் எழுதப்பெற்ற பாஷை—யுடன் நெருங்கின விதமாகத் தொடர்பு கொண்டுள்ளது. ஈழத்துக்கும் ஸம்ஸ்கிருதத்துக்குமுள்ள வேறுபாடுகளாவன:—ஸம்ஸ்கிருதத்திலே நெடிலாக வழங்கி வந்த உயிரெழுத்து ஈழத்திலே குறிலாயிற்று; ஸம்ஸ்கிருதத்திலே அழுத்திச் சொல்லப்பட்ட மெய்யெழுத்துக்கள் சிங்களத்தில் சாதாரணமாகவே வழங்கின. (உதாரணம்: பார்யா என்னும் சொல் பாளிமொழியில் பரியா என வழங்கிச் சிங்களத்தில் பரிய என மருவியது; ஸம்ஸ்கிருதத்திலே இரட்டித்த மெய்யெழுத்துக்கள் சிங்களத்தில் ஒற்றையாக மாறின. (உதாரணம்: ஸம்ஸ்கிருதச் சொல்லாகிய தர்மரக்ஷித என்பது பாளியில் தம்மரக்கித என்றும் சிங்களத்திலே தம்மரகித என்றுமாயிற்று; மெல்லின ஒலிகள் சிங்களச் சொற்களிலே நீக்கப்பட்டன. (உ-ம். ஸம்ஸ்கிருதத்திலும் பாளியிலும் சங்கம் என வழங்கின சொல் சிங்களத்திலே சக என வாயிற்று; ஸ என்பது ஹ எனச் சிங்களத்தில் மாறியது. இத்தகைய மாறுதல்கள் பாளியிலே போன்று பல இந்திய மொழிகளிலும் இருந்தபோதிலும் சிங்களத்திலேயே மிகவுங் கூடின அளவுக்கு உள்ளன.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

தோன்றியவை என்பதை உணர்த்தினர். அதுமுதலாக, இம் மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியான இந்திய-ஐரோப்பிய மொழியைத் தம்மொழியாகக் கொண்டோர் ஆதிகாலத்திலே எங்கு வசித்தனர் என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயமாய் விளங்குகின்றது. சிலர் இவ்வாசத்தானம் மத்திய ஆசியாவிலென்பர்; சிலர் ருஷ்யாவின் தென்பகுதியிலென்பர்; வேறு சிலர் வடஜெர்மனியி லெனக் கூறுவர்; இன்னுஞ் சிலர் ஹங்கரியி லென்பர்.

மொழிக்கும் சாதிக்குமுள்ள தொடர்பு.

இதுகாறும் கூறியவை, இலங்கைக்கு வந்த ஆரியர் கலப்பற்ற இந்திய-ஐரோப்பியரின் பிற்சந்ததியினரே என்பதை அத்தாட்சிப்படுத்தவில்லை. மொழிகளுக்குள் ஒற்றுமையிருப்பது மாத்திரமே, சாதித் தொடர்புண்டென்பதைத் தாபித்தற்குப் போதுமான சாட்சியமாகாது. உதாரணமாக, வேடரும் ஒருவகைச் சிங்கள மொழியையே பேசுகின்றனர்; அப்படியிருந்தும் அவர்கள் வேறொரு சாதியின ரென்பது தெளிபு. வடஇந்தியாவிலுள்ளோ ரனைவரும், ஆரிய மொழியினின்றும் பிறந்த பல மொழிகளைப் பேசுவதினாலே, அவர்க ளனைவரும் ஒரே சாதியினின்றுந் தோன்றியவர் எனக் கூறுதற்கு எவரும் துணியார். மேலும், தற்காலத்திலே இலங்கையில் ஆங்கில மொழி சர்வசாதாரணமாக வழங்குவதானது, முன்னேற்றமடைந்த ஒரு சாதியினரின் மொழி, ஏனைய மொழிகளைப் புறக்கணித்துத் தானே மேலோங்குமென்பதையும், பேசுதற்கு ஆங்கில மொழியையே பெரும்பாலுமாக உபயோகிப்போர் ஆங்கிலேயராகவே இருத்தல் அவசியமில்லை யென்பதையும் விளக்கும்.

இலங்கையிலே வாழ்ந்த சிறு கூட்டத்தினர் பலருடைய பெயர்களை மகாவம்சம் கூறுகின்றது. அவை யாவன—சிங்களர் (சிங்கம்), தாச்சர் (கடுவாய்), இலம்ப கர்ணர் (முயல் அல்லது ஆடு), பலிபோசகர் (பசு), மோரியர் (மயில்), குலிங்கர் (ஒருவகைப் பறவை) என்பனவாம். இவற்றிலிருந்து யாமறியக் கிடப்பது யாதெனில், இலங்கையிலே பண்டைக்காலத்திலே வாழ்ந்த சாதியினர் தாம் பூசித்துவந்த மிருகங்கள், பறவைகள் என்பவற்றின் பெயர்களையே தங்குலத்தைக் குறிக்கும் பெயர்களாகக் கொண்டனர் என்பதே. இவர்களுள் சிங்களக் கூட்டத்தினர் பெருஞ் செல்வாக்கு வாய்ந்தவர்களா யிருந்திருத்தல் வேண்டும். இவர்களுடைய பெயர், முதலில் இத்தீவிலுள்ள மாந்தரனை வருக்கும், பின்னர், இத்தீவுக்கும், உரியதாயிற்று; இதற்கு உதாரணமாக, இங்கிலாந்திற் குடியேறிய சாதியினருள் ஒருவராகிய ஆங்கிலர், அந்நாட்டுக்கு ஆங்கில நாடு என்னும் பொருள் தரும் இங்கிலாந்து என்னும் பெயரை யளித்தமையைக் கூறலாகும்*.

**ஆரியர் தோன்டு.** இலங்கைத் தீவின் சரித்திரத்திலே ஆரியர் வரவு முக்கியமானதோர் காலப்பகுதியி னாரம்பமாகும். இவ்வாறு குடியேறிய ஆரியர் இத்தீவின் சரித்திரத்திலே பெரும் பங்கு பெற்றனர். இவர்கள் கொண்டுவந்த சிங்கள மொழி இக்காலத்திலும் மிகவு மதிகமாகப் பேசப்படுகின்றது. இரும்பைப்போல் அவ்வளவு முக்கியமான வேறோர் உலோகம் இதுகாறும் கிடைக்கவில்லை. இவர்கள் புதிதாகக்

---

*சிலோன் என்னும் தற்காலப் பெயரும், செரந்திபு என அராபியரிட்ட பெயரும் சிங்களர் நாடாகிய சிங்களத்துவீபம் என்பதிலிருந்து தோன்றியவையே.

கொண்டுவந்த கிருஷித்தொழில் இக்காலத்தும் நாட்டுக் குடிசனங்களின் பிரதான முயற்சியா யிருக்கின்றது; பௌத்த சமயம் பரவுதற்கான வழிகளையும் இது உதவியது; இச்சமயம் பல இடுக்கண்களுக்காளான போதிலும், இப் போதும் இலங்கைவாசிகளிற் பெரும் பகுதியினரின் சமய மாக இருந்து வருகின்றது.

**திராவிடர்.** வேடரையும் ஆரியரையுந் தவிர இன்னோர் சாதி யினரும் சிங்களர் தோன்றுதற் குதவி னர்; இவர்கள் திராவிடர் ஆவர். இவர் கள் இத்தீவுக்கு முதன் முதலாக எப்போது வந்தனர் என்பதைக் காட்ட யாதொரு சான்றுமில்லை; ஆனால் மிகப் புராதன காலந் தொடங்கி, இவர்கள் படையெழுச்சிக் காரர்களாகவேனும், குடியேற்றக்காரர்களாகவேனும் வந்தன ரென்பதில் ஐயமின்று. பண்டைக் காலத்திலே வந்த திராவிடரிற் பெரும்பாலார்—இக்காலத்திலே கடற்கரை யோரத்திலுள்ளவர் செய்வது போன்று—சிங்களத்தையே தம்மொழியாகக் கொண்டு சிங்களரோடு கலந்துவிட் டனர்.

"திராவிடர்" என்னுஞ் சொல் தனிப்பட்ட ஓர் சாதி யினரைக் குறிப்பதாகாது; ஆனால், "ஆரியர்" என்பதைப் போன்று, தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு என்னும் திராவிட மொழிகளைப் பேசுவோரைக் குறிக்கும் சொல்லாகும். தற்காலத்திலே திராவிடரெனப்படுவோர், பூர்வத்திராவிடரும் இந்தியப் பழங் குடிகளும் கலந்ததினா லுண்டான ஓர் கலப்புச் சாதியினரே.

ஆரியர் இந்தியாவினுட் பிரவேசித்தபோது, திராவிடர் தென்னிந்தியாவில் மாத்திரமின்றி வட இந்தியாவிற் பெரும் பகுதியிலும் வசித்தனர்; ஆனால் அவர்கள் முதன் முதலாக

எங்கிருந்து இங்கு வந்தனர் என்று கூறுதற்குத் திட்டமான சாட்சியமில்லை. இந்தியாவின் வடமேற்கிலே பலுச்சிஸ்தான மென்னும் நாட்டிலே, திராவிட மொழியின் ஓர் திசை மொழியான பிராம்மி என்னும் மொழி இக்காலத்திலுங் காணப்படுவதானது, திராவிடரும் ஆரியரைப் போன்று வட-மேற்கிலிருந்தே இந்தியாவினுட் புகுந்தன ரென்பதைக் காட்டும் போலும். கி. மு. 4000-2000 ஆண்டுகளிலே பாபிலோனியாவிலே வாழ்ந்து வந்த சுமேரியரும் திராவிடரும் ஒரே சாதியினரெனக் கூறுதற்கான ஒற்றுமைகள் காணப் படுகின்றன. ஆகையினாலே இச்சுமேரியரின் சந்ததியினரே திராவிடர் எனக் கருதும் சில அறிஞர்களுமுளர்.

இலங்கையிலே திராவிடர் குடிபுகுந்தமையினாலேற்பட்ட பலாபலன்கள்.

கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலே சிங்கள சாதியினர் தோன்றுதற்குத் திராவிடர் உதவினர் என்பதை விளக்கப் போதுமான சாட்சிய மிருந்தபோதிலும், இலங்கை நாகரிகமடைதற்கு சிறப்புடன் குறிக்கக் கூறியவகையிலே இத்திராவிடர் ஏதேனும் செய்தனர் என்பதைக் காட்ட இதுகாறும் யாதும் கண்டுபிடிக்கப்படவில்லை. கி. பி. ஆறும் ஏழாம் நூற்றாண்டுகளிலே நேர்ந்த பல்லவ படையெழுச்சிகளுக்குப் பின்னரே, திராவிடர் நாகரிகத்துக்கும் முன்னேற்றத்துக்குமான வகையிலே உதவி புரிந்தனர் எனக் காட்ட ஆதாரங்களுள. சோழ நாட்டினர் இலங்கையின்மீது படையெடுத்துக் குடியேறத் தொடங்கியதற்குப் பின்னரே திராவிடரின் ஆதிக்கம் பெரிதும் ஓங்குவதாயிற்று; பாண்டியர் படையெழுச்சிகளோடு இன்னமும் அதிகரித்தது. 14-ம் நூற்றாண்டிலே திராவிடரின் ஆதிக்கம் மகோன்னதநிலை யடைந்த தெனலாம்.

அப்போது யாழ்ப்பாண அரசர் தென் பகுதியினரிடமிருந்து திறையும் பெறுவாராயினர். திராவிடரின் செல்வாக்கு இந்து சமய வந்தனை வழிபாடு அனுட்டானம் என்பவற்றினாலேயே அதிகம் ஓங்கி வளர்ந்தது ; 11-ம் நூற்றாண்டிலே இந்து சமயம் திடமாக வேரூன்றியதோடு, பிற்காலத்திலே பௌத்த சமயத்தையும் அதிகமான மாறுதலடையச் செய்தது.

## 2. பௌத்த சமயமும், அது இலங்கைக்கு வந்த வரலாறும்

பண்டை ஆரியரின் சமயம்.

இலங்கையிற் குடியேறிய பண்டைய ஆரியரின் சமய மின்னதென நாம் கூறுதற்குத் திருப்திகரமான அத்தாட்சி யாதுமின்று ; ஆனல் திட்டமான சாட்சியம் கிடைக்கக் கூடிய கி. பி. முதலாம் நூற்றாண்டளவிலே, அவர்கள் குடியேறிய எல்லா இடங்களிலும் பௌத்த சமயம் பரவி விட்டதென்க.

பௌத்த சமயம் இந்தியாவிற் றோன்றுதற்கு முன்னே, பல நூற்றாண்டுகளாக அந்நாட்டிலே சமயக்கிளர்ச்சி யுண்டாயிருந்தது. ரிக்வேதத்திலிருந்து நாமறியக் கூடியபடி, இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்திலே ஆரியர் வசித்தபோது எளிதிலே அனைவருக்கும் விளங்கக்கூடிய சமயத்தையே அவர்கள் பின்பற்றினர். ஆரியர் இயற்கைத் தோற்றங்களைத் தொழுது வந்தனர்; அவற்றை உயிருள்ளனவாகவும் மானிட வுருவம் பெற்றவையாகவும் எண்ணினர். வானமண்டலத்துக்குரிய தேவதையை அவர்கள் வருணன் என வழைத்தனர். இத்தேவதையே, தருமம் எது

அதருமம் எது என்பதையும், உலகத்தின் ஒழுங்கான நியமத்தையும், இரவும் பகலும் பருவகாலங்களும் முறை பிறழாது நிகழ்வதையும் கவனித்து வந்ததென அவர்கள் நம்பினர். மழை பெய்யச் செய்த இடிமுழக்கம் புயற் காற்று என்பவற்றுக்கு அதிதேவதை இந்திரன் என்க. சூரியன் விஷ்ணுவே என்பது ஆரியர் கொள்கை. சூரிய னுக்கு எதிரியாகப் பிற்காலத்திற் றோன்றி, முதன்மை பெற்ற சிவபெருமான் அக்காலத்திலே உருத்திரன் என் றழைக்கப்பட்டார்; ஆரம்பத்திலே அவர் புயற்காற்றுக் குரிய அதிதேவதையாக மாத்திரமே கருதப்பட்டார். சிரத்தை, அதாவது உள்ளத்தூய்மை போன்ற குணங்களை யும் பண்டைக்கால ஆரியர் பூசித்து வந்தனர்.

ரிக்வேதத்திற்குப் பின்றோன்றிய இலக்கிய நூல்க ளாகிய பிராம்மணங்கள், வேத வியாக்கியானங்கள் (பாட்டியம், விருத்தி யுரை, அகல வுரை யெனினும் பொருந்தும்), உபநிஷத்துக்களைப் போன்ற தத்துவ விசார நூல்கள் என்பன கங்கா நதியின் பள்ளத்தாக்கிலே ஆரியர் பரவியபோது அவர்கள் பின்பற்றிய வாழ்க்கை முறையைப் பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன. சமய அனுட்டானங் களிலும் தத்துவ ஆராய்ச்சி விஷயங்களிலும் நாமதிசயிக்கத் தக்க விதத்திலே அவர்கள் முன்னேற்ற மடைந்திருப்பதை இவை காட்டும். குருமாரைக்கொண்டு செய்தற்கான பூசை முதலியன மிகவும் விரிவடைந்தன; சீவபலியும் சாதாரண மாகி விட்டது.

பௌத்த சமயம்.

கி. மு. ஆறும் நூற்றூண்டிலே பௌத்த சமயம் தோன்றியது; சமய அனுட்டானங் களையும் பலியையும் மோட்ச சாதனங்க ளெனக் கூறிய பிராமணரின் அதிக்கிரமத்துக்கு எதிராகவே

இச்சமயம் தோன்றியது. சாதி அல்லது வருணக் கட்டுப்பாட்டைக் கூடாதெனக் கண்டித்தது. புத்தர், துன்பம் உண்மையான ஓர் விஷயமென்றும், அது விருப்பத்தினாலேயே வுண்டாகின்றதென்றுங் கூறினர். இத்துன்பமானது, அஷ்டசீலம் அல்லது சிறந்த எண்மார்க்கங்களைப் பின்பற்றுவதினாலே நீங்கக் கூடியதென அவர் போதித்தார். அஷ்டசீலங்களாவன:—நற்கொள்கை; நற்சிந்தனை; நற்பேச்சு; நற்கருமம்; நற்பிழைப்பு; நன்முயற்சி; நன்மனம்; நற்கவனம். பௌத்த சமயக் கோட்பாட்டின்படி, மோட்சமானது, ஒருவனுடைய சுயமுயற்சியாலேயே கிடைக்கக் கூடியது; இது இறுதியில் அருகத நிலைமையையளிக்கும். காமக்குரோதமற்ற இந்நிலையை யடைதற்கு விரும்பும் பௌத்த சமயி, சீலனா யிருந்து, நற்கருமங்களைப் பற்றிச் சிந்தனை செய்வதிலே தன்காலத்தைச் செலவழிக்க வேண்டும்.

மேற்கூறியவற்றிலிருந்து, பௌத்த சமயிகள் புத்தரைப் புறக்கணித்துத் தங் கவனத்தை யெல்லாம் அவரது உபதேசங்களிலும் அனுட்டானங்களிலு மாத்திரமே செலவழித்தன ரென்றெண்ணுதல் கூடாது. ஆதியிலிருந்தே அவர்கள் புத்தரிடம் பெரும் பயபக்தி கொண்டிருந்தனர். பிரதிமைகளை உபயோகிக்காத பண்டைக் காலத்திலே, அவர்கள் அரசமரங்களுக்கும் புத்தருடைய என்பு முதலிய சேஷங்களை அடக்கியிருந்த டாகப (தாதுகர்ப்பம்)க்களுக்கும் பூஜை செய்தனர். புத்தர் ஓர் அரசமரத்தினடியிலிருந்த போதே ஞானம் பெற்றா ரெனக் கூறப்படுகின்றது.

புத்தரது முற்பிறப்புக்களைப் பற்றின சரித்திரங்களையும் பௌத்த சமயிகள் பேராவலுடன் கற்கின்றனர். அவர்

ஓர் போதிசத்துவரா யிருந்தமையினுலே (அதாவது புத்த ராகுந் தன்மை யுள்ளவர்), தாம் நிருவாணமடைவதிலும் பார்க்கப் பிறர் நன்மையையே பெரிதுங் கோரி நின்ருர். அவர் தமது நிருவாண நிலையைத் துறந்து பிறர் பொருட்டுத் தம்மைத் தியாகஞ் செய்தமையினுலே, புத்தர் ஆகும் நிலைமைக்குத் தக்கவராயினர் என்பதே இச்சரித்திரங்களிற் கூறப்படுகின்ற போதனை யாகும்.

பௌத்த சமயம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டமை.

பௌத்த சமயம் முதன்முதலாகப் பரவுதற்குக் காரணம், புத்தர் தம் பூதவுடலை நீத்தற்கு முன்னே தாபித்த பிக்குக்களின் சங்கமே என்க. பிக்குக்கள் பிரம்மசரியத்தையும் வறுமையையும் மேற்கொண்டு, உணவுக்கும் உடைக்கும் இலௌகிக பௌத்த சமயிகள் அளிப்பதையே நம்பியிருந்தனர். சில நூற்ருண்டுகளிலே அவர்கள் பௌத்த தருமத்தை ஆசியாவிலுள்ள பல தேசங்களிலும் போதித்து அச் சமயத்தைப் பரவச்செய்தனர்.

தற்காலத்திய பாட்ஞ நகரத்துக்கும் புத்தகயா பட்டினத்துக்கும் நடுவே, ராஜகிருகம் என்பதைத் தலைநகராய்க் கொண்ட மகத தேசத்திலே பௌத்த சமயம் முதன் முதலாகத் தோன்றி அங்கிருந்து படிப்படியாக மேற்றிசை நோக்கிப் பரவியது. சீக்கிரத்திலே, நருமதையாற்றுக்கு வடக்கேயுள்ள அவந்திநாட்டிலும், வடமேற்கே நெடுந்தூரத்திலுள்ள காச்மீரத்திலும் இச்சமயம் வேரூன்றியது. பௌத்த சமயம் பரவி விருத்தி யடைந்த போது, அதன் கொள்கைகளி லேற்பட்ட அபிப்பிராய

பேதத்தினாற் பல பிரிவுகள் தோன்றின. இப்பிரிவுகளைச் சார்ந்தவர் மகாசங்கிசர்கள், தேரவாதினிகள், சருவஸ்தி வாதினிகள், மகிஷாசகர்கள் என்பவராவர். பண்டைக்காலத்திலே, தேரவாதினிகள் கூடிய முக்கியமான இடங்கள் யமுனைநதிக் கரையிலுள்ள அலகாபாத்து அல்லது பிரயாகைக் கருகே யிருந்த கோசாம்பியும், உச்சயினியைத் தலைநகராகக் கொண்ட அவந்திநாடுமாம். பல பௌத்த ஞாபகச் சின்னங்கள் இப்போதுங் காணக்கூடிய விதிசா என்பது உச்சயினிக் கருகாமையிலே உள்ளது.

வடஇந்தியாவிலே ஏகசக்கராதிபத்தியஞ் செலுத்தி வந்த சந்திரகுப்த மௌரியனுடைய பேரப்பிள்ளையான அசோகனுடைய காலத்திலே (கி. மு. 274-237) பௌத்த பிக்குக்களின் பிரசாரவேலை அதி தீவிரமாக நடந்தது. அசோகனாட்சியிற் பெரும்பகுதியிலே இந்தியா அடைந்த சமாதான நிலைமையும், அயல் நாடுகளுடன் இந்தியா நடாத்திய வாணிபத்தின் விருத்தியும், அசோகன் புறநாட்டரசருக் கனுப்பிய தூதுக்களும், அவன் பௌத்த சமயத்தைத் தழுவின பிறகு அச்சமயத்தினிடம் கொண்ட பேரன்பும், எல்லாமுஞ் சேர்ந்து பௌத்த சமயம் பரவுதற்கு அதிகமாக உதவின. பௌத்த சமயப் பிரசாரகர்கள் ஆசிய நாடுகள் பலவற்றுக்குஞ் சென்றனர்; தேரவாதினிக் கொள்கையைப் பின்பற்றிய பிக்குக்கள் சிலர் மகேந்திரன் (மகிந்தன்) தலைமையிலே இலங்கைக்கு வந்தபோது, அநுராதபுரத்திலே ஆட்சிபுரிந்த தேவானன்பிய திஸ்ஸன் என்னுமரசன் அவர்களை நல்வரவேற்றான்.

**பாளி பாஷையும் இலக்கியமும்.**

ஓர் புது பாஷையையும் இலக்கிய நூல்களையும் பௌத்த சமயப் பிரிவினருள் ஒருவரான தேரவாதினிகள் இலங்கைக்குக் கொண்டு வந்தனர். கலப்புள்ள ஆரிய மொழியிலே

வரையப் பெற்ற சாஸ்திர நூல்கள் பலவற்றை அவர்கள் தமது சமய நூல்களாகக் கொண்டனர். இக்கலப்பு மொழியே பிற்காலத்தினரால் பாளி என்றழைக்கப் பட்டது. உள்ளத்தெழுங் கருத்துக்களை விளக்குதற்குப் பாளிமொழி மிக ஏற்றது; மத்தியகாலத்தே இலங்கையிற் சீவித்த பிக்குக்கள்,—ஐரோப்பாவிலே கிறிஸ்தவக் குருமார் லத்தீன் மொழியை உபயோகித்தவாறு—தமது நூல்களைப் பாளிமொழியிலேயே எழுதுவாராயினர். சிங்கள பாஷையிலே எழுதப் பெற்ற தர்ம இதிகாச தத்துவ நூல்கள், பாளியிலுள்ள சொற்களையே பெரிதும் வழங்கிவருகின்றன.

பாளிமொழியி லெழுதப்பட்ட தருமநூல் "திரிபீடகம்" அல்லது "மூன்று கூடைகள்" என்றழைக்கப்படும்; இப் பிரிவுகளாவன (1) விநயம்—அதாவது பிக்குக்களின் ஒழுக்க முறை நூல்; (2) தருமம் அல்லது சூத்திரம்—அதாவது, புத்தரும் அவரது சீடர்களு மருளிய உபதேசங்கள்; (3) அபிதர்மம்—அதாவது பௌத்த சித்தாந்தம். திரிபீடகம் பல பிரிவுகள் கொண்டது; இவற்றிற் சில செய்யுள் நடையிலும் சில வசன நடையிலும் எழுதப்பட்டுள்ளன; சில இரண்டுங் கலந்துள்ளன. "ஜாதகம்" என்னும் நூலும் அதன் உரையும் பிரசித்தி பெற்றவை. அவை புத்தரின் பூர்வ சன்மங்களையும் அப்போது நடந்த சம்பவங்களையுங் கூறுகின்றன; ஜாதக உரைக்கு முகவுரையாயுள்ள பாகம், புத்தவம்சம் என்னும் நூலின் பிரிவேயாகும். ஜாதகக் கதைகளும் அவற்றுளடங்கிய நீதிகளும் சிங்களராலே பெரிதும் போற்றப்படுகின்றன. பாளியிலும் சிங்களத்திலும் இயற்றப்பட்ட இலக்கியங்கள் பல, புத்தர் போதிசத்துவரா யிருந்த காலத்திலும் பின்னரும் நடைபெற்ற சம்பவங்களை

முதலிற் கூறியே தொடங்குகின்றன. "ஜாதகக் கதைகள்" பலவற்றிற் கூறப்பட்ட விஷயங்களே சிங்களக் காப்பியங்களின் விஷயங்களாயுள்ளன.

எழுதும் முறை.

பௌத்த சமயத்தோடு எழுதும் முறையும் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. இலங்கையிலே மிகப் பூர்வ காலத்திலே செதுக்கப்பட்ட சாசனங்கள் முதலியன குகைகளின் மேற்கூரையாக நின்ற பாறைகளின் கீழ்ப்புறத்திலோ அல்லது மேற்புறத்திலோ இப்போதும் காணப்படுகின்றன. இச்சாசனங்கள் செதுக்குதற்குபயோகப்பட்ட எழுத்துக்களிலிருந்தே தற்காலத்திய சிங்கள வரிவடிவந் தோன்றியது; இவ்வெழுத்துக்கள் அசோகமன்னனது சாசனங்களெழுதுதற்குபயோகப்பட்ட பிராம்மி எழுத்துக்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

தமிழுள்பட, தற்காலத்திலே இந்தியாவில் வழங்கும் வரிவடிவங்களுக்கெல்லாம் மூல எழுத்தாயிருப்பது பிராம்மியே. பலஸ்தீனதேசத்திலே, இஸ்ரவேலரின் இராச்சியத்துக்கு விரோதமாகத் தான் கிளப்பிய கலகத்திலே வெற்றியடைந்தமையைச் சாசன மூலமாகக் குறிப்பதற்கு, மோவாபிய மன்னனான மேஷா என்பவன் உபயோகப்படுத்திய பினீசிய வரிவடிவைப் பிராம்மி வரிவடிவும் ஒருவாறு ஒத்திருக்கின்றது. எனவே, சிங்கள வரிவடிவமானது தற்காலத்து ஐரோப்பிய மொழிகளின் வரிவடிவங்களைப்போலவே செமிதிக்கு மொழியிலிருந்து உண்டானதென இறுதியாகக் கூற வேண்டியிருக்கின்றது. அன்றேல் அது, செமிதிக்கு வரிவடிவம் தோன்றிய இன்னோர் மூல வரிவடிவத்திலிருந்து தோன்றி யிருத்தல் வேண்டும். இதற்கு

இன்னொரு சான்றையும் ஈண்டு குறிக்கலாம். அதாவது, பண்டைக் காலத்துச் சிங்கள சாசனங்கள் சில, அரபியிற் போல வலதுபக்கத்தி லிருந்து இடதுபக்கமாக எழுதப் பட்டுள்ளன.

தமது வரிவடிவத்தை மேலான நிலைக்குக் கொண்டு வருமுன்னே பல நாடுகள் கஷ்டமான பல நிலைகளை யடைய வேண்டியிருந்தது.* ஆனால் இலங்கைத்தீவு அவ்வித சங்கடங்களுக் கிடோகவில்லை. சிங்கள மொழியிலுள்ள பல்வேறு ஒலிகளையும் குறிக்கக்கூடிய அளவுக்கு விருத்தி யடைந்த வரிவடிவைப் பிக்குக்களின் மூலமாக அது பெற்றது.

**மனைக்கலையும் சிற்பக்கலையும்.**

இத்தீவுக்குப் பௌத்த சமயம் வந்தபின்னரே, செங்கல், கல் என்பவற்றாலான கட்டடங்களும் சிற்ப வுருவங்களும் தோன்றலாயின. பண்டைக்காலச் சிற்பங்கள், பௌத்த சமய சரித்திரத்திலேற்பட்ட

*வரிவடிவந் தோன்றிய வரலாற்றின் சுருக்கம்: ஆரம்பத்திலே மாந்தர் தாம் குறிக்க விரும்பிய பொருட்களின் படங்களைப் பரும் படியாகக் கீறினர்; இப்படங்களிலிருந்தே எழுத்துக்கள் தோன்றின. (வேடர் இந்நிலைமைக்கு மேலான நிலைமையை அடையவில்லை.) இதன் பின்னர், முழுப்படத்திற்குப் பதிலாக ஒரு குறியீடு வரையப்பட்டது. இதனைச் சீன வரிவடிவிற் காணலாகும். மூன்றாம்படியிலே சிங்கள வரி வடிவிலே நாம் காண்பதுபோன்று—குறியீடானது பொருளைக் குறிக்காது ஒலியைக் குறிப்பதாயிற்று. இந்நிலைமை யேற்பட்ட போது எழுதுவதும் சுலபமாயிற்றெனலாம். அன்றேல், சீனத்திலேபோன்று, ஒருவன் தன் கருத்துக்களை எழுத்து மூலமாகத் தெரிவித்தற்காக நூற்றுக்கணக்கான குறியீடுகளைக் கற்கவேண்டி யிருக்கும்.




சிங்கள எழுத்துக்களின் படிப்படியான வளர்ச்சி.

சம்பவங்களைக் காட்டுவன; அவ்வாறே மிகப் பழைய கட்டடங்களும் டாகபக்களும் விகாரைகளும் பௌத்த சமயத்தின் சிறப்பு ஓங்கவே நிருமாணிக்கப்பட்டன. மேலும் டாகபக்கள், விகாரைகள் என்பவற்றின் நிருமாணம், மணக்கலையின் அபிவிருத்திக்குக் காரணமாயிற்று; ஒவ்வொரு விகாரையிலும் புத்தர் பிரதிமையைப் பிரதிட்டித்தல் வழக்கமானபோது, உருவச் சிற்பக்கலை மேலோங்குதற்கான வழியேற்பட்டது.

**பௌத்தசமயம் இலங்கையில் தாபிக்கப்பட்டதின் லேற்பட்ட பலாபலன்கள்.**

வேறு வழிகளிலும் பௌத்த சமயம் இலங்கை வாசிகளின் சீவியம் முதலியவற்றில் மாறுதலுண்டாக்கியது. வாழ்க்கை மிருகத் தன்மை கொண்டதாயும் நாகரிக சீவியத்துக்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைந்துமிருந்த காலத்திலே, பௌத்த சமயம் மாந்தருக்கு ஓர் வழிகாட்டியாக விளங்கியது. அது, நேர்மைக்கான விதியையும், ஒழுக்கமான சீவியத்தை நடத்தற்கான சமய அனுட்டானங்களையும் உதவியது. போர்த்துக்கேயர் வரும் வரையிலே, அதுவே இலங்கைவாசிகளை நாகரிக வாழ்க்கையைப் பின்பற்றச் செய்யும் முக்கியத் தூண்டுகோலாயிருந்தது. மேலும், அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தொடர்புண்டாக்கி வைத்ததினாலே, இந்திய சமுதாய, நாகரிக, முன்னேற்ற, வாழ்க்கைக்கான பல விஷயங்களினால் இலங்கையினரும் பெரும் பயனடையச் செய்தது.



சிப்பி, கருங்கல் சிகிழகிக் கற்கள் என்பவற்றிஞலான ஆயுதங்கள்.



வேடரின் இல்லம்—மலைப்பாறையில் வசதியான ஓரிடம்.

மூன்றும் அதிகாரம்.

# பண்டைக் காலப் பகுதி

தேவானன்பிய திஸ்ஸன் முதல் மகாசேனன் வரையில்.

பௌத்த சமயம் இலங்கைக்கு வந்த பின்னரே இலங்கைச் சரித்திரத்திலே நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ச்சியாக நாமறிய முடிகின்றது. எனவே, இலங்கைச் சரித்திரத்தின் பண்டைக் காலப் பகுதி, அசோக மன்னனுடைய காலத்திலே (கி. மு. 274—237) சீவித்த தேவானன்பிய திஸ்ஸன் கால முதலாகத் தொடங்குகின்றதெனலாம். கமவளர்ச்சி, பாசன வேலை என்பனவும், பௌத்த சமயத்தின் அபிவிருத்தி என்பதுமே இக்காலத்திய பிரதான விஷயங்களாகும். இக்காலப்பகுதி மகா சேனனுடைய (கி. பி. 334—362) ஆட்சியோடு முடிவடைகின்றது. மற்றைய மன்னர்களெல்லாவரினும் இவனே குளங்களையும் ஏரிகளையும் அதிகமாக வெட்டுவித்தான். மகாவிகாரையிலே வசித்த தேரவாதினிகளை எதிர்த்தும் அவர்களுடைய எதிர்க்கட்சியினருக்கு உதவி புரிந்தும் வந்த மன்னருள் இவனே முதல்வனவன்.

பூர்வ குடியேற்றத் தாபனங்கள்.

இக்காலப்பகுதியின் ஆரம்பத்திலே சனங்கள் பிரதானமாக மூன்றிடங்களிலே இலங்கையிற் குடியேறினர். இவற்றிலே முக்கியமானது அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, வட சமவெளியிலே யிருந்தது.

இரண்டாம் பிரதேசம் உருகுணை என்பது; இதன் தலைமைப் பட்டணம் மாகமா என்றழைக்கப்பட்டது; மூன்றும் பிரதேசம் களனி கங்கை பாய்ப்பெற்றது; இதன் தலைநகர், கல்யாணி அல்லது களனியா என்னும் பெயர் கொண்டு விளங்கியது. இம்மூன்று பிரதேசங்களும் ஒன்றுக் கொன்று சம்பந்த மின்றி, குடியேறப் பெற்றிருக்கலாம்.

வடதேசத்திலே, உள்நாடு பிரவேசித்தற்கான பாதை மூன்று பிரதான நதிகளின் கரையே சென்றது; ஒன்றுக் கொன்றின் அருகாமையிலேயே இந்நதிகள் உதித்தன. நதிகளினுற்பத்தித்தானங்களுக் கருகே மத்திய இடத்திலிருந்தமையினாலும், மல்வது ஓயா என்னும் ஏரிக்கரையிலே முக்கியமான ஓரிடத்திலே இருந்தமையினாலும், அனுராதபுரம் தலைநகராக அமைந்தது. தென்னிந்தியாவிலிருந்து வந்த படையெழுச்சியாளர், மன்னருக்கருகிலுள்ள மாதோட்டத்திலே இறங்கி, மல்வது ஓயா என்னும் ஏரிக் கரையினூடே நாட்டினுட்பகுதிகளை யடைந்தனர்.

தென் பகுதியிலே நான்கு நதிக்கரையோரங்களிலேயும் மாந்தர் குடியேறினர். இந்நதிகளாவன:—வளவை கங்கை, கிரிந்தி ஓயா, மாணிக்க கங்கை, கும்பகர்ண ஓயா இவை வடபகுதியிலுள்ள நதிகளைப் போலவே கிருஷி முயற்சிக் கேற்ற வசதிகளை யளித்தன.

மகாவலி கங்கையினாலே வடபிரதேசச் சம வெளியும் தென் கிழக்குப் பிரதேசமும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் பெற்றிருந்தன. மேலே குறிப்பிட்ட மூன்று நதிகளின் உற்பத்தித் தானமும் கச்சகத்திடர்வழிக்கு (மாகன்தோட்டம்)

அருகாமையிலே யிருந்தன. இது மகாவலி கங்கையும் அதன் உபநதியாகிய அம்பன் கங்கையும் சங்கமமாகுமிடத்துக்கு அண்மையி லிருந்தது. அனுராதபுரத்திலிருந்து இவ்விடத்துக்குக் கஹகலே, கிதிகலே என்னுமிடங்களின் வழியே செல்லும் ஓர் மார்க்கமு மிருந்தது. கச்சகத்திடர்வழியி லிருந்து. மகாவலிகங்கையி னோரமே மகியங்கனைவுக்கும் (தற்காலம் அலுத்நுவரை), பிறகு மாணிக்க கங்கையி னருகே புத்தலைக்குஞ் செல்லுதல் கூடும்.

களனி கங்கைப்பிரதேசத்திலே யிருந்த குடியேற்றத் தாபனங்களைப்பற்றிச் சரித்திரக் கதைகளிலிருந்தேனும் சிலா சாசனங்களி லிருந்தேனும் ஒன்றும் அறியக் கூடவில்லை; இப்பிரதேசம் அனுராதபுரத்தரசருக்குக் கீழ்ப்பட்டிருந்த தாகவும் தெரியவில்லை. கன மழை பொழியப் பெறும் பிர தேசமா யிருந்தமையினாலே, இது அடர்ந்த வனமாக விருந்த தோடு, வடதிசை அல்லது தென்மேற்குத் திசையிலிருந்து உட்புகுதற்குக் கஷ்டமாக இருந்திருத்தல் வேண்டும். இங்கே ஓடும் நதிகள் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசை நோக்கி ஓடுவதினாலே, அவைதாமும் பிரயாணஞ் செய்தற் கான பாதைகளாகப் பயன்படாதொழிந்தன. களனிப் பட்டினம் ஓர் முக்கிய துறைமுகமா யமைந்தது. புறநாட்டு வணிகர் நவரத்தினங்களைத் தேடி இத்துறைமுகத்தி லிறங்கு வாராயினர்.

மலைநாடான மத்தியப் பிரதேசம் இக்காலத்திலே மிகச் சில ஆரியராற் குடியேறப் பெற்றது. அவ்விடம் போக்குவரவுக்குக் கஷ்டமானதாயும், நெல்விளைதற்குத் தகைமையற்ற பூமியாகவு மிருந்தமையே இதற்குக் காரண மென்க.

**அரசியற் சரித்திரம்.**

வடக்கேயிருந்த முப்பிரதேசங்களும், தென்மேற்கு, மேற்றிசைப் பகுதிகளும், ஆரம்பத்திலே தனிப்பட்ட அரசர்களால் ஆளப்பட்டு வந்தன. இவர்களின்கீழ் குறுநில மன்னர் வெவ்வேறு பிரிவுகளில் அரசுபுரிந்து வந்தனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் ஈற்றிலே, மாகமா என்னும் பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு உருகுணைப் பகுதியை யாண்டுவந்த துட்டகெமுனு என்பான் (கி. மு. 101-77) பல குறுநில மன்னரையும், அனுராதபுரத்திலே ஆட்சிபுரிந்த ஏலாரன் (எல்லாளன்) என்னும் தமிழரசனையும் தோற்கடித்தமையினாலே இலங்கையின் வட, தென் கிழக்குப் பகுதிகளின் சக்கரவர்த்தியானான். துட்டகெமுனுவுக்குப் பின்னர் அவனுடன் பிறந்தவனான சத்தா திஸ்ஸன் முடிசூடினான். அக்காலத்து முறைப்படி, அரசாளு முரிமை அரசனுடன் பிறந்தாருக்கும் பின்னர் அவர்களுடைய புத்திரருக்குமாயிருந்தது. சத்தா திஸ்ஸனுக்குப் பின் சிம்மாதன மேறிய வலகம்பாவை ஐந்து தமிழர் தோற்கடித்துத் தாமே ஒருவர்பின்னொருவராக அரசு புரிந்தனர். யசலாலகத் திஸ்ஸ (கி. மு. 112-120) னிடமிருந்து சுபன் (கி. பி. 120-126) சிங்காதனத்தைப் பற்றினான். இதற்குப் பின்னர் இலம்பகர்ண வம்சத்தைச் சார்ந்த வசபன் (வாகாப்பு) என்பான் ஆட்சிபுரிந்தான் (கி.பி. 127-171). இதற்குப் பின்னர் பல மன்னர் வரிசைக் கிரமமாக ஆண்டுவந்தனர்;

---

துட்டகெமுனுவின் பட்டப் பெயரான கெமுனு அல்லது காமனி (கிராமணி = கிராமத் தலைவன்) என்பது அவனுக்கு பின் வந்தவராலும் வகிக்கப்பட்டது; இது, அவனோ, அன்றேல் பின் வந்தவர்களோ, ஓர் காலத்தில் கிராமத்தலைவர்களா யிருந்திருக்கலாமென்பதைக் காட்டும்.

ஆனால் விஜயகுமாரன் என்பான் முடிசூடின சிறிது காலத்துக்குள்ளே இலம்பகர்ண வம்சத்தைச் சார்ந்த சங்கத்திஸ்ஸன் என்பான் (கி.பி. 303-307) அவனை யோட்டித் தானே ஆட்சிபுரிந்தான்.

அரசியல் முறை.

இக்காலத்து அரசியல் முறை ஓர்வகை மானிய முறையைத் தழுவியிருந்தது. ஏரி நீரைப் பாசனத்துக்கு உபயோகித்தற்காக குடிகளிடமிருந்து இறக்கப்பட்ட வரி நீங்கலாக, அரசன் பயிர்ச்செய்கைப் பயனிலே ஓர் பங்கும் பெற்றான். இதற்குப் பதிலாக அவன், பகைவரால் குடிகளுக்குத் தீங்குநேரிடாது பாதுகாத்து, கமத்தொழிலபிவிருத்திக்கு உதவினான். அவன் தன் கீழுள்ள சிற்றரசருக்கும் தலைவருக்கும் தன் வருவாயிலோர் பகுதியை அளித்தான்; சில சமயங்களிலே விகாரைகளின் பராமரிப்புக்கும் பிக்குக்களின் உணவுக்குமாக தன் வருவாயிலோர் பகுதியை ஈந்தான்.

இத்தகைய அரசியல்முறை, நாகரிக நிலை மேம்படுதற்கு மிகவுந் துணைபுரிந்தது. வேடராகவும் ஆடுமாடு மேய்க்கும் இடையர்களாகவும் இருந்த காலத்தில் மாந்தர் செல்வமுடையவர்களாயிராமையினாலேயும், அனைவரும் செல்வ அளவில் ஏறக்குறைய சம நிலையிலிருந்தமையினாலேயும், அத்தகைய அரசியல் முறையே சிறந்ததெனநினைப்பாருமுளர். ஆனால் அவரனைவரும் வறுமைவாய்ப்பட்டவர்களாகவேயிருந்தன ரென்பதையும் நாகரிகம் மேலோங்குதற்கு யாதொரு விதமான உதவியும் அவர்கள் செய்யவில்லையென்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கிருஷித்தொழிற் பருவத்திலும் மாந்தர் வறுமைவாய்ப்பட்டவர்களாகவே இருந்தனர். ஆனால் அரசர்களும் சிற்றரசர்களும் செல்வ

நிதி படைத்துக் கலைகளையும் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்ய அச் செல்வத்தைச் செலவிட்டனர். அவர்கள் விகாரைகளுக்கென நிதிகளமைத்தமையினாலே, அங்கே வதிந்த பிக்குக்கள் தம் ஓய்வுநேரத்தை, இலக்கிய இலக்கண நூல்களை இயற்றுதற்கும், கல்விக்கும், சன்மார்க்க போதனைக்குமாகச் செலவழித்தற்கு வசதியேற்பட்டது. அரசர்கள் நாட்டைப் பகைவரிடமிருந்து காத்தற்காகப் படை வகுத்தனர். ஏரிகளையும் குளங்களையும் வெட்டினர். டாகபங்களையும் விகாரைகளையும் கட்டினர்; புத்தகாலயங்களை நிருமாணித்தனர்; பெருங்குன்றுகளை மலையரண்களாக்கினர்; பட்டினங்களை மதிற் சுவர்களாலும் அகழிகளாலும் பலப்படுத்தினர்; தங்குடிகளின் நன்மைக்கான இன்னோரன்ன செயல்களையும் புரிந்தனர்.

**கிருஷியும் நீர்ப் பாசனையும்.**

ஆரம்பத்திலிருந்தே ஆரியர்கள் கிருஷித்தொழிலிற் பெரும் ஊக்கமெடுத் திருந்தனர்; அவர்கள் நீர்ப்பாசனைக்கு ஆற்று நீரை முதலிலுபயோகித்தனராயினும், சனத்தொகை அதிகரித்தபோது, வயல்களுக்குப் போதுமான நீரை ஆறுகளிலிருந்து பெறுதல் முடியாதென அறிந்து, அதனைச் சேமித்தற்காக ஏரிகளை வெட்டி, முன்னிலுமதிகமாக நெற்பயிர்ச் செய்கையை அதிகரிக்கச்செய்தனர்.

பண்டைக்காலத்தில் தென்னிந்தியச் சமவெளிகளிலே பூமியை அகழ்வதாலேற்பட்ட ஏரிகளிலே நீர் சேகரிக்கப்பட்டது. பிற நாடுகளிலோ, ஆற்றுநீரைப் புதிய வாய்க்கால்களினூடே ஓடச் செய்வதினாலே நீர்ப்பாசனை நடைபெற்றது. ஆனால் இதே காலத்தில் இலங்கையிலே வயல்களுக்கு ஏரிநீர் பாய்ச்சப்பெற்றது; இவ்வேரிகள், ஆழமற்ற பள்ளத் தாக்குகளிலே இரு குன்றுகளுக்கிடையே ஓர் அணையைக்

கட்டுவதாலானவை. இவ்வணைக்கு முன்னுள்ள இடத்திலே மேடான இடத்திலிருந்து ஓடிவரும் சிற்றாறுகள் மாரி காலத்து மழைநீரைக் கொண்டுசேர்க்கும். கால்வாய்களும் வெட்டப்பட்டன. இவை தாம் பாயும் பிரதேசத்து வயல் களுக்கு நீரை உதவியதோடு, ஏரிகளுக்கும் நீரைக்கொண்டு சேர்த்து அவ்வழியே அதனைப் பரந்த பிரதேசத்திற் பாயு மாறு செய்தன.

மிகப் புராதனமான ஏரிகளும்* வாய்க்கால்களும் அநு ராதபுரத்திற் கணித்தாக வெட்டப்பட்டன. சனத்தொகை விரைவிலே பெருக்கமடைந்தது. இப்போது பாசவக்குளம் என்றழைக்கப்படும் அபயவேவவும் திஸ்ஸவேவவும் நுவற வேவவும் முதன்முதலாக வெட்டப்பட்டவை. கி.பி. 127 முதல் 171 வரையிலாட்சி புரிந்த வசபன் 11 ஏரிகளையும் 12 கால்வாய்களையும் வெட்டினனென கூறப்படுகின்றது. இவற்றிலொன்று அநுராதபுரத்துக்குத் தென்கீழ் திசையி லுள்ள ஏறுவேவ ஆகும். 1-ம் சேட்ட திஸ்ஸன் (கி.பி. 323-334) ஆறு ஏரிகளையும், அவனுடன்பிறந்தானான மகா சேனன் (கி.பி. 334-362) 16 ஏரிகளையும் ஒரு வாய்க்காலையும் வெட்டுவித்தான். இது அம்பன் கங்கையிலிருந்து நீரைக் கொண்டு வந்தது. இப்பதினாறு ஏரிகளுள் ஒன்று கவுதுலு வேவ என்பது; இன்னொன்று 4560 ஏகரா பரப்புள்ள மின் னேரியா ஏரியாகும். இவ்வேரியின் கரை 40 முதல் 50 அடி உயரமானது. வசபனும் மகாசேனனும் வெட்டுவித்த ஏரிகளினாலே அநுராதபுரத்துக்கும் மகாவலி கங்கைக்கும் இடையேயுள்ள பிரதேசத்திலே, கமத்தொழிலிற் பெரும் அபிவிருத்தியும் சனத்தொகைப் பெருக்கமும் உண்டா

* ஏரிகளைக் குளங்களெனவும், கான்களை வெட்டாறுகளென வும் அழைப்பாருளர்.



மின்னேரியா ஏரி.

யிருத்தல் வேண்டும். சிறிது காலத்துக்குள்ளே மின்னேரியா ஏரியினுல் நன்மை யடைந்த சனங்கள் மகாசேனனை ஓர் தெய்வப் பிறப்பெனக் கருதி வணங்கலாயினர் என்பதை ஈண்டு நாம் குறிப்பிடலாம்.

பௌத்த சமயத்திலே ஆதிகாலத்திற் றேன்றிய பிரிவினைகள்.

கமத்தொழிலபிவிருத்தியோடு பௌத்த சமயமும் பெரும் முன்னேற்ற மடைந்தது. ஆனுல் தேரவாதினிகள் எல்லாவற்றையும் தம் வழியே நெடுங்காலத்துக்கு நடத்த முடியவில்லை. வலகம்பாவின் காலத்திலே தர்மருசியர் என்னும் ஓர் பிரிவு பௌத்த சமயத்தினுள் தோன்றியது; இதைச் சார்ந்தோர் தேரவாதினிகளிடமிருந்து பிரிந்து அபயகிரி விகாரையைத் தம் இருப்பிடமாகக் கொள்ளலாயினர். கோதாபயன் காலத்திலே (கி. பி. 309-323) சாகலிகர் தோன்றினர். இவர்களும் பௌத்த சமயத்தினின்றும் பிரிந்து தட்சிண விகாரையிற்றங்கினர். இவ்விகாரையின் டாகப, ஏலாரனுடைய சமாதியெனச் சாதாரணமாகக் கூறப்படுகின்றது. சில ஒழுக்க முறைகளைப்பற்றித் தர்மருசியினரும் சாகலிகரும் தேரவாதினிகளோடு மாறுபட்டமையினுல் இப்பிரிவுகள் தோன்றின.

இந்தியாவிலிருந்து பிக்குக்கள் வந்தமையினுலும் பௌத்த சமயத்திலே பிரிவுகள் ஏற்பட்டன. வைதூலிய நாத்திக சமயத்தை வோகாரிக திஸ்ஸனும் (கி. பி. 269-291) கோது அபாவும் வேரறுத்தனர் எனச் சொல்லப்படுகின்றது. இவ்வைதூலியர் தத்துவசித்தாந்தங்களிலே தேரவாதினிகளோடு மாறுபட்ட மகாயானிகளாக இருக்கலாம். சோழ நாட்டவனும் பேயோட்டுவதிற் திறமைவாய்ந்தவனுமான சங்கமித்திரன் என்னும் பிக்கு, கோது அபாவின் காலத்திலே

இலங்கைக்கு வந்திருந்தான். இவன் மகாசேனன் காலத்திலே மீண்டுமொருமுறை வந்து மகாவிகாரையிலே யிருந்த பிக்குக்கள் சரியான ஒழுக்க முறைகளைப் போதிக்காமையினாலே அவர்களுக்கு அரசன் யாதொரு வகையிலும் உதவாதிருக்கச் செய்தான்.

இவ்விதமாகப் புதுக்கொள்கைகளேற்பட்டதினாலே, மாந்தர் ஏனைய பௌத்த தத்துவ இலக்கியங்களையும் அவை எழுதப்பெற்ற பிற மொழிகளையும் கற்கும்படியாயிற்று. மகாயான பௌத்த நூல்கள் ஓர் வகைக் கலப்பு ஸம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தன ; இம்மொழியைக் கற்பதினாலே ஓரளவுக்கு ஸம்ஸ்கிருத மொழியைப்பற்றின அறிவேற்பட வசதி யுண்டாயிற்று ; இது சிங்கள இலக்கிய இலக்கணங்களைப் பெரிதும் மாற்றுதற்குப் பிற்காலத்திலே இடமாயிருந்தது.

இக்காலத்திலே, பௌத்த சமயம் மாத்திரமன்றி வேறு சமயங்களும் இலங்கைத் தீவிற் காணப்பட்டன. நிகந்தர்களும் ஆஜீவிகர்களும் அனுராதபுரத்திலே வசித்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இவ்விருவருள் நிகந்தர், அதாவது சமணர் என்பார், புத்தரது காலத்திலே சீவித்த மகாவீரர் என்னும் சமயாசாரியரின் கொள்கையைப் பின்பற்றினர். ஆஜீவிகர் என்போரும் அதே காலத்திலிருந்த மக்கலி கோசாலர் என்பவரின் உபதேசங்களைப் பின்பற்றினவராவர். பாமர சனங்களோ பண்டைய சமய வொழுக்கங்களையே பின்பற்றி வந்தனர். இவர்கள் துர்த்தேவதைகளுக்குப் பலி கொடுத்தும், தேவதைகளின் வாசஸ்தானங்களெனக் கருதிய மரங்கள் போன்ற இயற்கைப் பொருட்களை வணங்கியும் வந்தனர்.

4

இலங்கைக்கு வந்த பௌத்த பிக்குக்கள் ஆரம்பத்திலே மிகிந்தலை, வெஸ்ஸகிரி, ஈசுரமுனியா போன்ற இடங்களிலேயுள்ள கற்குகைகளிலும், மகா மேக வனம் போன்ற உத்தியான வனங்களிலும் தங்கியிருந்தனர். இவர்கள் வந்த சிறிது காலத்துக்குள்ளே தூபராமாடாகப கட்டப்பட்டது; அனுராதபுரத்தின் தென்றிசையிலுள்ள அரசமரம் நடப்பட்டது.

சிற்பம்: இதனை நாம் கிருக நிருமாணம் (மனைக்கலை), உருவச் சிற்பம் என இரண்டாகப் பிரிக்கலாம்.

முதலாம் நூற்றுண்டுக்குப் பிறகு குகைகளை வாசஸ்தானங்களாகக் கொள்வது வழமையற்றுப்போயிற்று; வடபிரதேசத்திலும், தென்கீழ்ப்பிரதேசத்திலும் விகாரைகள் கட்டப்பட்டன. அனுராதபுரத்திலே பண்டைக்காலத்திலே கட்டப்பட்ட விகாரைகளுள் மிகப்பிரசித்தி பெற்று விளங்கியவை, மகா விகாரை, வலகம்பாவினுற் கட்டப்பட்ட அபயகிரி விகாரை, மகாசேனனுற் கட்டப்பட்ட ஜேதவனுராமா என்பனவாம்.

இவ்விகாரைகளைச் சார்ந்த கட்டடங்களின் பரப்பு மிகவுமதிகமே. ஒவ்வொன்றிலும் தொகையான பிக்குக்கள் வசித்து வந்தனர்.

கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றுண்டுகளிலே கட்டப்பட்ட விகாரைகள் கல் அஸ்திவாரங் கொண்டிருந்தன; இதனை இப்போது நாம் அனுராதபுரத்திலுள்ள கிலமான கட்டடங்களிலே காணுதல் கூடும். இக்கட்டடங்களின் மேற்றளங்கள், செங்கல், மரம், களிமண் என்பவற்றினுல் நிருமாணிக்கப்பட்டன. விகாரையைச் சார்ந்த ஏனைய கட்டடங்கள், சமையலறையும் போசனசாலையும்



அபயகிரி டாகப—அனுராதபுரம்.

உபோசதகிருகமுமாம். பிந்தியதிலே, பௌத்தசங்கத்தினர் போய அல்லது உபோசத நாட்களிலே பஞ்சசீலத்தைப் படனஞ் செய்தற்பொருட்டு ஒன்று கூடினர். உபோசத கிருகத்தினமைப்பை மகா விகாரையைச் சார்ந்த பித்தளை மாளிகை காட்டுகின்றது. ஆனால் இப்போது காணப்படும் அதன் கற்றூண்கள் அக்காலத்திற்குரியனவல்ல வெனக் கூறுதற்கு இடமுண்டு.

சாதாரணமாக ஒவ்வோர் விகாரையின் வளவுக்குள் ளும் ஓர் டாகப இருந்தது. இக்காலத்திற் கட்டப்பட்ட டாகபக்களுள் மிகப்பிரசித்தி பெற்றது அனுராதபுரத்தி லுள்ள ரூவன்வலி சய என்பதாகும். இதுவும் மகாவிகாரை யைச் சார்ந்த டாகபவும், அக்காலத்திலே நிருமாணிக்கப் பட்ட மற்ற டாகபக்களும், மத்திய இந்தியாவிலே சாஞ்சி என்னுமிடத்திருந்த டாகபவைப் போன்றே நிருமாணிக்கப் பட்டன. தெற்கே திஸ்ஸமகாராமாவிலே யிருந்த டாகபவை ஈழநாகன் (கி.பி. 96—103) கட்டினான். கஜவாகு (கி.மு. 174—196) அபயகிரி டாகபவை விசாலப்படுத்தினான்; அப் போது அது அக்காலத்திற் கட்டப்பட்ட ஏனைய விகாரை களிலும் பெரிதாயும் கீசே(இது எகிப்திலுள்ள ஓர் புராதனப் பட்டினம்)யிலுள்ள மூன்றும் பிரமிட்டினும் பெரிதாயு மிருந்தது. மிகப் பெரிய டாகபக்களெல்லாம் அனுராத புரம், களனியா, திஸ்ஸமகாராமா என்னும் இராசதானிப் பட்டினங்களிலே கட்டப்பட்டன. இவை இவ்வரசர்களு டைய செல்வத்துக்கும் பணியாளரைக் கொண்டு வேலை செய்விக்கக்கூடிய திறமைக்கும் சான்றுகளாக இருக் கின்றன.

சேதியங்கள் அல்லது தூபிகள் எனப்பட்ட டாகபக் கள் புத்த காலத்துக்கு முன்னரே தோன்றியவை. இவை

பலவித வடிவங்கொண்டவையா யிருந்தன. முதலிலே தூப ராமடாகப ஒரு நெற்குவியல்வடிவங் கொண்டிருந்தது. இதே காலத்தில் ஏனைய டாகபக்கள் அரை கோள வடிவ மாக நிருமாணிக்கப்பட்டன. இவை வட்டமான அல்லது சதுர வடிவமான மேடைகளின்மேற் கட்டப்பட்டன; கீழ்ப்பாகத்திலும் அகன்ற படிகள் மூன்றிருந்தன. இவற்றுள் உயர்ந்த படியின் மேல் அரை கோள வடிவக் கோபுரம் நிறுவப்பட்டது. கோபுரத்தின் மேல் உரச கோட்டுவே என்னும் சதுக்கமும் அதன்மேல் கூர்முனைக் கோபுரத்தின் அடித்தளமும் இருந்தன. ஆரம்பத்திலே இக்கூர்முனைக் கோபுரமானது ஒரு கற்றூண்மேல் குடை வடிவங்கொண்டிருந்தது.

இக் காலத்திலே சாதாரண சனங்கள் வசித்த கட்டடங்களின் அடையாளம் யாதொன்றும் இதுகாறும் கிடைக்கவில்லை. அவர்கள் குகைகளிலேனும் அல்லது அழியக்கூடிய பொருள்களாலான கட்டடங்களிலேனும் வசித்திருக்கவேண்டும். அரசமாளிகை தவிர, மகாவம்சத்திற் கூறப்பட்ட சமய சம்பந்தமற்ற ஒரே வொரு கட்டடம், கூடகர்ணத்திஸ்ஸனால் (கி. பி. 16—38) கட்டப்பட்டு வாகாப்புவினால் (கி.பி. 127—171) உயர்த்தப்பட்ட அநுராதபுரத்து அரணேயாகும்.

சிற்பத்திலும் ஓரளவுக்கு வேலை நடைபெற்றது. அதற்குதாரணமாக இப்போதுங் காணப்படுபவை சுண்ணப்பாறையிற் செதுக்கப்பட்டவை; இவை தென்னிந்தியாவிலே கிருஷ்ணநதிக்கரையிலுள்ள அமராவதி என்னுமிடத்திற் காணப்படும் சிற்ப உருவங்களையே தழுவி யுள்ளன.

வட இந்தியா வும் தட்சிண தேசமும்.

இக்காலத்திலே இலங்கைக்கு ஓர் முன்மாதிரியாக இருந்து, அதன் வாழ்க்கையைப் பெரி தும் தாக்கியது இந்தியாவே; அந்நாட் டிலே நடைபெற்ற முக்கிய சம்பவங்களை அறியாது இலங்கையின் சரித்திரத்தை விளங்கிக் கொள்ளுதல் இயலாத காரியமாகும்.*

இத்தீவிலே பௌத்தசமயம், சிற்பம் என்பவற்றின் விருத்திக்கும், வட இந்தியா, தட்சிண தேசம் என்ப வற்றுக்குமேற்பட்ட தொடர்பைப்பற்றி முன்னரே கூறப்பட்டுள்ளது. இத்தொடர்பு இலங்கைக்கும் ஆந்திர தேசத்துக்குமேற்பட்ட சம்பந்தத்தினுலேயே பெரும் பாலுமுண்டாயது. அசோக மன்னனது காலத்திலே, ஆந்திரர், கோதாவரி கிருஷ்ணு நதிகளுக் கிடையே இருந்த தெலுங்காணம் என்னும் பிரதேசத்தி லிருந்தனர். அவனுக்குப் பின்னர், ஆந்திரவரசர்கள் தமது இராச்சி யத்தை இந்நதிக்கரைகளினூடேயும், பின்னர் வடதிசை

*இக்காலத்திலே இந்தியா மூன்று முக்கிய பாகங்களாகப் பிரிக் கப் பட்டிருந்தது. இவற்றுள், மிகப்பிரதானமானது வடக்கே சிந்து நதியினுலும் கங்கா நதியினுலும் நீர்பாய்ச்சப் பெற்ற சம வெளியே யாகும். இரண்டாவது, நர்மதாநதிக்கும் விந்தியமலைக்குந் தெற்கி லும், கிருஷ்ணு, துங்கபத்திரா நதிகளுக்கு வடக்கிலுமிருக்கும் தட்சிண பீடபூமியாகும். இதன் மேற்குப் பாகத்திலே அரை வாசிப் பகுதி, பண்டைக் காலத்திய மகாராஷ்டிர இராச்சிய மென்றும், கீழ்ப்பாகம் தெலுங்காண மென்றும், வட பாகம் கலிங்க மென்றும் அழைக்கப்பட்டு வந்தன. சாதாரணமாகத் தென்னிந்தியா வென்றழைக்கப்படும் மூன்றும் பாகம், கிருஷ்ணு துங்கபத்திரா நதிகளுக்குத் தெற்கே சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள் கொண்டதாயிருந்தது.

நோக்கியும் விசாலமடையச் செய்தனர். இவர்கள் கி. மு. இரண்டாம் நூற்றூண்டிலே உச்சயினியையும், அடுத்த நூற்றூண்டிலே விதிசாவையும் தமதாக்கிக் கொண்டனர்: ஆந்திர இராச்சியத்தின் தலைநகர் முதலில் தானியகடகம் என்னும் அமராவதி பட்டினமாக இருந்தது. ஆனால், கி.மு. முதலாம் நூற்றூண்டிலே இதிலும் மத்தியமான இடத்திலே இருந்த பிரதிஷ்டாணவே (தற்காலத்திலே பைதான்), தலைநகராக்கப் பட்டது.

ஆந்திரரிற் பெரும்பாலோர் பௌத்தசமயிகள்; அவர்கள் அச்சமயத்தைப் பல வழியிலும் ஓங்கச் செய்தனர். இதனை, இந்தியாவில் சாஞ்சி, அமராவதி, கிருஷ்ணநதிக் கரையிலிருந்த நாகார்ச்சுனகோண்டா என்பவற்றிலுள்ள டாகபக்கள் சிற்பங்கள் என்பவற்றிலிருந்தும் மேற்றிசையிலுள்ள கார்லே, நாசிக், அஜந்தா என்னுமிடங்களிலே பாறைகளி லகழ்ந்தெடுக்கப்பட்ட பிரசித்திபெற்ற மண்டபங்களிலிருந்தும் அறியலாகும். கி.பி. இரண்டாம் நூற்றூண்டிலே மகாயானக் கொள்கைகளைப் போதித்து, அவற்றைச் சீர்படுத்திய நாகார்ச்சுனன் என்னும் ஆசிரியர் ஓர் ஆந்திரரே; அவர் நாகார்ச்சுனகோண்டாவாசியாக இருந்திருத்தல் கூடும்.*

---

*இக்காலத்திலே இலங்கைக்கும் வட இந்தியாவுக்குமான போக்குவரவு—ஆந்திர இராச்சியத்தினூடே சென்ற பழமையான இருபாதைகளுட்பட—மூன்று பாதைகளின் வழியே நடைபெற்றது. முப்பாதைகளும் பாடலிபுத்திரத்திலிருந்து கிளம்பின. (இந் நகரம் இப்போது பாட்னு என்றழைக்கப்படுகின்றது). இப்பாதைகளிலொன்று பிரயாகை (அலகாபாத்து), கௌசாம்பி (கோசாம்பி) பார்கத்து, விதிசா, உச்சயினி, மாகிஷ்மதி (மந்திம்) பிரதிஷ்டாண (பைதான்) என்பவற்றின் வழியே வந்து, கோதாவரி, கிருஷ்ண நதிகளின் முகத்துவாரங்களைத் தாண்டி இலங்கைக்குச் சென்றது.

தென்னிந்தியா.

மிகப்புராதன காலந்தொடக்கமாக இலங்கை தென்னிந்தியாவோடு நெருங்கின விதமாகத் தொடர்பு கொண்டிருந்தது; ஆனால் இக் காலப்பகுதியிலே அதைப்பற்றி விவரமாக நாமொன்றும் கூறுதல் இயலாது. சேர சோழ பாண்டியர் தமது பண்டைய வரசரைப்பற்றின சரித்திரங்களை இயற்றுதிருக்கவேண்டும்; அன்றேல் அவை இப்போது அழிபட்டிருக்கவேண்டும். கி. பி. 7-ம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்திலே அவர்கள் நிருமாணித்த தூபிகள்போன்ற ஞாபகச் சின்னங்கள், கல் அல்லது செம்பின்மீது பொறிக்கப்பட்ட சாசனங்கள் என்பவை இப்போது காணக் கிடைக்க வில்லை. ஆகவே அக் காலத்துச் சரித்திரத்தை வரைதற்கு உபயோகமாயுள்ளன வெல்லாம் சிற்சில செய்யுட்களும், அவற்றின் உரை களும், புறநாட்டவர் அவர்களைப்பற்றிக் கூறியுள்ளனவுமே யாகும். ஆனால் நாம் உண்மையென ஒப்பக்கூடிய வெகு சில விஷயங்களையே இவை கூறுகின்றன.

---

இரண்டாவது மாகிஷ்மதியிலிருந்து பிருகுகச்சா (தற்காலம் பிரோச்சு எனப்படுவது) வுக்குச் சென்றது. இங்கே சனங்கள் கப்பலேறி, பம்பாய் இராசதானியிலே தானா ஜில்லாவிலுள்ள சூர்ப்பாரகை (சோபாராம் என்பது) வழியே சென்று இலங்கையை அடைந்தனர். மாந்தர் கப்பலேறி வங்காள விரிகுடா வழியே இலங்கைக்குச் செல்வதே மூன்றாம் பாதையாகும். இவ்வாறு சென்றவர் பாடலிபுரத்திலே கப்பலேறி, கங்கா நதிவழியே தாம்ர லிப்தி நகரஞ் சென்று, அங்கிருந்து கீழ்கடற்கரைவழியே சென்ற னர். இலங்கைக்கு வந்த பிக்குக்கள் அநேகமாய் முதற் பாதை வழியேயும், வியாபாரிகள் 2-ம் 3-ம் பாதைகளின் வழியேயும் சென் றிருத்தல்வேண்டும். கிறிஸ்து சகாப்தம் முதலாக இரண்டாம் பாதையே பிரசித்தமான பாதையாக இருந்தது.

சேர, சோழ, பாண்டிய நாடுகளிலே* வசித்த ஆதிகால மக்கள், திராவிடராயும் அதற்கு முந்தியகாலத்துப் பண்டைய சாதியினரின் சந்ததியினருமாயு மிருந்தனர். இவர்கள் தங்குலத்தைக் குறிக்க ஓர் மரம், மிருகம், அல்லது பறவையைத் தம் விருதுக்கொடியாகக் கொண்டிருந்தனர். அதிகார உரிமை வேளாளர் (வேளிர்) என்றும் கமக்காரரிடமிருந்தது; இவர்களுக்குத் தலைவனே மன்னவனென்க. பாண்டிய வரசர், சாதியிலே மறவர். பழையன் மாறன் என்னும் பட்டப்பெயர் பூண்ட சிற்றரசர் கன்னியாகுமரியினருகே ஆட்சிபுரிந்தனர்; வலகம்பா காலத்திலே இலங்கையின் மீது படையெடுத்துவந்த அரசரிருவர் பழைய மாறன், பிள்ளைய மாறன் என்னும் பெயர் கொண்டிருந்தமையினாலே, இவர்களும் முன்னவரோடு சம்பந்தம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். சோழவரசர் திரையர் குலத்தின

* பாண்டிய இராச்சியம் தற்காலத்திய மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களின் பெரும் பகுதியை அடக்கி இருந்தது. அதன் இராசதானி முதலில், தாம்பிரபாணி நதிக்கரையிலிருந்த கொற்கையாகவும், பின்னர் மதுரையாகவு மிருந்தது. சோழ இராச்சியம் வடபெண்ணைமுதல் வெள்ளாறுவரையிலுமுள்ள கடற்கரைப் பிரதேசமடங்கியதாய் மேற்கே குடக நாடுவரையிற் பரவியிருந்தது. அதன் இராசதானி முதலிலே, திருச்சிராப்பள்ளிக்கடுத்த உறையூராகவும், பிற்காலத்திலே, காவேரிப்பட்டினமாகவுமிருந்தது. காஞ்சி (இஃது இப்போது காஞ்சிபுரம் எனப்படும்) இன்னொரு பெரிய பட்டினமாகும். சேர நாடு (கேரளநாடு)—தற்காலத்திய திருவிதாங்கூர், கொச்சி இராச்சியங்களும் மலையாள ஜில்லாவுமடங்கி யிருந்தது. இதன் தலை நகரம் முதலில் வஞ்சி யாகவும் (இது கொச்சியினருகே பெரியாற்றின் கரையிலே இப்போது திருக்கரூர் எனப்படும் பட்டினம்) பின்னர் அவ்வாற்றின் முகத்துவாரத்தருகேயுள்ள திருவஞ்சிக்களம் என்னும் பட்டினமாகவு மிருந்தது.

ரெனக. கரிகாலச் சோழன் காலத்திலே இதே குலத்தைச் சார்ந்த இன்னொரு வம்சத்தினர் காஞ்சிபுரத்தைத் தலைநக ராகக்கொண்டு ஆண்டு வந்தனர். இவர்களில் மற்றொரு மரபினர் மோரியர் என்னும் பட்டப்பெயர் சூடியிருந்தனர். இப்பெயர் இலங்கையிலிருந்த ஓர் பண்டைய குலத்தின் பெயராகுமென்பதை ஈண்டு குறித்தல் தகும். இலங்கை யிலே பிரசித்திபெற்ற இன்னொரு குலமான இலம்பகர்ணர் என்பார் பண்டைய தென்னிந்திய இலக்கிய நூல்களிலே குறிக்கப்படவில்லை; ஆனல் பன்னிரண்டாம் நூற்றுண்டளவி லேனும் அத்தகைய வம்சமொன்றிருந்த தென்பது பிற் காலத்திய இலக்கியங்களிலிருந்து தெரிய வருகின்றது.

சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள் மிகத் தொன் மை வாய்ந்தன வென்பதைப்பற்றி யாதொரு ஐயமுமில்லை. அசோக மன்னன் அவற்றைத் தன் கற்சாசனங்களிலே குறித்துள்ளான். கிறிஸ்து பிறத்தற்கு முன்னரே இந்நாடு களிலே பௌத்த சமயிகளும் சமணரும் இருந்தனரென்பது மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிலே அச்சமய பிக்குக் கள் வசித்த குகைகளிலே கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முன்னர் வழங்கிவந்த பிராம்மிலிபிகளிற் செதுக்கப்பட்ட கல்வெட்டு களிலிருந்து தெரியவருகின்றது. கி. மு. நான்காம் நூற் றுண்டு முதலாக இவர்களைப்பற்றி கிரேக்க உரோம நூலாசிரி யர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்பதும் கவனித்தற்பாலது.

தென்னிந்தியா மேனாடுகளோடு நடத்திய வாணிபம்.

புராதன காலந்தொடங்கி, தன் வாணிபத்தினாலே தென்னிந்தியா பெருங்கீர்த்தி பெற்றிருந் தது. வியாபாரத்தின்பொருட்டு முதன் முதலாகத் தென்னிந்தியாவை நாடிவந்த வர் அராபியரே. ஆனல் கிறிஸ்தவ சகாப் தத்தின் ஆரம்பத்திலே, இவர்களுடைய

வியாபாரத்தை உரோம சக்கராதிபத்தியத்தைச் சார்ந்த கிரேக்கர் கைப்பற்றினர்; இவர்கள் ஏடன் குடாவிலிருந்து புறப்பட்டுக் கடல்வழியே இந்தியாவை அடைதற்குப் பருவகாற்றுக்களைப் பயன்படுத்துதல் கூடுமென்பதைக் கண்டுபிடித்தனர். உரோம சக்கரவர்த்தியான அகஸ்தசு (கி.மு. 31-கி. பி. 14) கால முதலாக நீரோவின் மரணம் வரையிலும் (கி. பி. 68), வாசனைச் சரக்குகள், மஸ்லின் போன்ற மெல்லிய வஸ்திரங்கள், முத்துக்கள், வைரங்கள் என்பவற்றை உரோம சக்கராதிபத்தியத்தினர் பெரிதும் நாடி நின்றனர். மிளகு, அரிசி, இஞ்சி, இலவங்கம் என்பவற்றின் கிரேக்க நாமங்கள் தமிழ் சொற்களி னடியாகப் பிறந்தன வென்பதிலிருந்து, கிரேக்கர் இவற்றை உரோமாபுரிக்கு எடுத்துச் சென்றனர் என்பது தெளிவாகும். நீரோவின் மரணத்துக்குப் பின்னர் இவ்வியாபாரம் குறைவடைந்த போதிலும், மூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதி வரையில் ஒருவாறு நடந்துவந்தது. கிரேக்கருக்கு விற்றற் பொருட்டு இலங்கையின் விளைபொருட்கள், முதலில் இந்தியாவுக்குக் கொண்டுபோகப்பட்டன; ஆனால் இரண்டாம் நூற்றாண்டிலே, இத்தீவிலிருந்து ஏற்றுமதியாகக் கூடிய பொருட்களைப் பெறுதற்கு வியாபாரிகள் நேராகவே வரலாயினர்.

புறநாட்டு இலக்கிய நூல்கள்; இந்திய, கிரேக்க இலக்கிய நூல்கள்.

அக்காலத்திலே இந்தியாவிலியற்றப்பட்ட மூன்று இலக்கிய நூல்களிலே இலங்கையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்நூல்களி னாசிரியர்கள் இலங்கையில் யட்சர் என்னும் சாதியினர் வசிப்பதாகக் கருதி யிருந்தனர். புத்த நூலாகிய ஜாதகம் என்பதிற் கூறப்பட்ட ஒரு கதையிலே, இலங்கை, தாம்பிர

பர்ணி எனக் கூறப்பட்டுள்ளது. நாகத்துவீபம், கல்யாணி, என்னுமிடங்களும் இதிற் கூறப்பட்டுள்ளன. யட்சணிகளென்னும் அசுரப்பெண்கள் இத்தீவிற் குடியிருப்பதாக அந்நூலிற் கூறப்பட்டுள்ளது. கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலே ஸம்ஸ்கிருதமொழியிலே இயற்றப்பட்ட திவ்வியாவதானம் என்னும் பௌத்த இலக்கிய நூலிலே, இலங்கை தாமிரத்துவீபம் என வழைக்கப்பட்டுள்ளது. சிங்களன் என்னும் பெயர்கொண்ட வணிக இளைஞன் யட்சணிகளைத் தன்னுட்சிக்குட்படுத்தி இத்தீவை யாண்டு வந்ததாக இந்நூலிற் கூறப்பட்டுள்ளது. விசயனையும் குவேனியையும் பற்றின வரலாறு மேலே விவரித்த இரு கதைகளினுமிருந்தும் ஏற்பட்டிருக்கலாம். இராமாயணத்திலும் இலங்கையிலே யட்சர் என்னும் இராட்சதர் சீவித்தனரென்றும் அவர்களையாண்ட மன்னன் இராவணனென்றும் கூறப்பட்டுள்ளது. இராமாயணக் கதையை நாமனைவரும் நன்கறிவோம். இலங்கையின் வடமேற்குப்பகுதிக்கு இடப்பட்ட நாகத்துவீபம் என்னும் நாமம், யட்சர்களைப் போன்று அமானுஷ்யத்தன்மை கொண்டவர்களாகக் கருதப்பட்ட நாகர்கள் அங்கே வந்திருக்க வேண்டுமென்றெண்ண இடந் தந்தது.

மகா அலெக்சாந்தர் கால முதலாக கிரேக்க நூலாசிரியர் பலர், தாம்ரபர்ணி என்பதின் மரூஉமொழியான தாப்பிரோபேன் என்னும் பெயரை இலங்கைக்கு அளித்திருக்கின்றனர். இந்து மகா சமுத்திரத்திலே கப்பலேறி வாணிபஞ் செய்வோர்க்கு உதவும்படி கி. பி. முதலாம் நூற்றுண்டிலெழுதப்பட்ட பேரிப்புளுசு என்னும் நூலில், இலங்கை பலேசிமுண்டு என்றழைக்கப்படுகின்றது; அங்கு முத்து, இரத்தினம், மஸ்லின், ஆமையோடு என்பன கிடைக்குமென்

பதுங் கூறப்பட்டுள்ளது; அப்புத்தகத்திலே, தீவின் பரப்பு மிகவும் அதிகமாகவும், ஆப்பிரிக்காவுக்கு மிக அண்மையிலே இத் தீவு இருப்பதாகவுங் கூறப்பட்டுள்ளது. இதற்கப்பால், இரண்டாம் நூற்றூண்டிலே சீவித்த டோலமி யென்பான் இலங்கைக்கு சாலேசு என்னும் பெயரளித்துள்ளான். இப் பெயர், சிங்களம் என்பதின் மரூஉவாக இருத்தல் கூடும். அரிசி, இஞ்சி, தேன், நீலக்கல், கோமேதகம், பொன், வெள்ளி, யானை என்பன இலங்கையிற் கிடைக்கக்கூடிய பொருட்களென அவன் வரைந்துள்ளான். கிரேக்கருக்கு இலங்கையைப் பற்றின திட்டமான அறிவு இல்லையாதலின், அவர்கள் கூறுவதை முற்றும் நம்புவதற்கில்லை. எனினும், டோலமியின் தேச படத்திலே, மலய நாடு, அனுராதபுரம், மகாவலி கங்கை என்பன ஓரளவுக்குத் திட்டமாகக் கூறப் பட்டிருப்பதினாலே, இத்தீவின் உட்பிரதேசங்களைப்பற்றி கிரேக்கர் ஓரளவு அறிந்திருந்தனர் எனக்கூறலாம்.

நான்காம் அதிகாரம்

# மத்தியகாலம்—முதற்பகுதி

## (கி. பி. 362—1017)

கீர்த்தி ஸ்ரீமேக வர்ணன் முதலாக 5-ம் மிகுந்து வரையிலும்.

வட இந்தியாவை ஒரு குடைக்கீழ் கொண்டுவந்த சமுத்திரகுப்த சக்கரவர்த்தியின் (கி. பி. 326-375) காலத்திலே ஆட்சி புரிந்த கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் முதலாக இலங்கைச் சரித்திரத்தின் மத்திய கால முதற் பகுதி தொடங்குகின்றது ; சிங்கள மன்னனுன 5-ம் மிகுந்துவின் காலத்திலே, சோழர் இலங்கையை வென்றதோடு (கி. பி. 1017) இப் பகுதி முடிகின்றது. முற்பகுதியிலே, அரசியல், கிருஷி, நீர்ப்பாசனம், பௌத்த சமயம், சிற்பம், மனைக்கலை (கட்டட நிருமாணம்) என்பவற்றிலே, இலங்கை விருத்தி யடைந்த தென்பதையும், இந்தியாவோடும் மேனுடுகளோடும் இத் தீவு நேரான சம்பந்தம் பெற்ற தென்பதையும் நாம் அறிந்தோம். மத்திய காலத்து முதற் பகுதியிலே இலங்கை இவற்றிலெல்லாம் முன்னிலு மதிகமான விருத்தி யடைந்த தென்பதைக் காண்போம். மாந்தரின் வாழ்க்கையை மேலோங்கச் செய்யும் நாகரிகத்தைப் பற்றின அறிவு முன்போலவே வட இந்தியாவிலிருந்து பெறப்பட்டது ; தென்னிந்தியாவோடும் முன்னிலும் நெருங்கினவிதமாய்த் தொடர்பு ஏற்பட்டது. அப்படியிருந்தும், சிங்கள சாதியினர், தமக்கென விசேடித்த ஓர் நாகரிகத்தை! யுண்டாக்கி அதனை விருத்தி செய்யலாயினர்.

இப்பகுதியிலே 66 அரசர்கள் ஆட்சி புரிந்தனர்; ஆனால் எவரும் பெருங் கீர்த்தியடையவில்லை. இவர்களின் நாமாவளி, கால அட்டவணை யேற்படுத்துதற்குதவுமே தவிர வேறெவ்வழியிலும் உபயோகப்படாது. அரசர்களிற் பெரும்பாலோர் மோரிய அல்லது இலம்பகர்ண வம்சத்தவரா யிருந்தனர். இவர்களது ஆட்சிக் காலம் பல்வகைப்பட்டிருந்தது; சிலர் ஓராண்டுக்குக் குறையத்தானும் ஆண்டனர். பண்டைக் காலத்திற் போலவே, மன்னர்கள் வரிசைக் கிரமமாகச் சிங்காதன மேறவில்லை; பன்முறைகளில் மந்திரியோ, சேனபதியோ, அல்லது தமிழ்ப் படையெழுச்சிக்காரரோ அரசனை ஒதுக்கித் தாமே அரசு புரிந்தனர்.

**இலங்கைத் தீவின் பிரிவுகள்.** முன்னதிகாரத்திற் குறிக்கப்பட்ட மூன்று குடியேற்றத் தாபனங்களும், இத் தீவின் விசேடித்த பாகங்களாகித் தனிப் பெயர்களை பெற்றன. அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட வடபகுதி, ராஜரட்டை யெனும் பெயர் பெற்றது. இதற்குத் தெற்கேயும் மலைகளுக்கு மேற்கேயு மிருந்த பிரதேசம் தட்சிணதேச மெனப்பட்டது. தென்கீழ்ப் பிரதேசம் உருகுணை யென்றும், நடுவிலிருந்த மலைப்பிரதேசம் மலயநாடென்றும் அழைக்கப்பட்டன. ராஜரட்டை யென்னும் பிரதேசம், உத்தர தேசம், (வடநாடு), பச்சிம தேசம் (மேனாடு) பிராசீன தேசம் (கீழ்நாடு) என முப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. இப் பிரதேசங்களனைத்தும் அனுராதபுரத்தரசரின் கீழிருந்தன; ஆயின் உருகுணைப் பிரதேசம் அவர்களால் மிகச் சிறு அளவுக்கே ஆளப்பட்டது.

இக்காலத்திலே—1-ம் காசியபன் காலம் நீங்கலாக—அனுராதபுரம் இலங்கையின் தலைநகராக விளங்கியது. அப்போதிருந்த ஏனைய நகரங்களோடு ஒப்பிடின், அது பல நீண்ட வீதிகளும் சந்துகளுமுடையதாய் மிகப் பெரிய பட்டினமாயிருந்தது. அப்பட்டினம் பல கோயில்களைப் பெற்றிருந்தமையினால் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாயுமிருந்தது. நகரத்தினுள்ளும் வெளியும் நடைபெற்ற கமத்தொழிலின் பெரும்பகுதிக்குப் போதுமான நீர் ஏரியிலிருந்து பெறப்பட்டது; கமத்தொழிலினாலுண்டான விளைவே நகர மாந்தரின் உணவுக்கு உபயோகப்பட்டதென்க. அனுராதபுரம் அரசினரின் இருப்பிடமாயும், வியாபாரத்துக்கேற்ற தலமாயும், பிற நாட்டு வணிகரின் வாசத்தானமாயுமிருந்தது. நகரத்தை மேற் பார்வையிட நுவரலட்டன் எனத் தனிப்பட்ட உத்தியோகத்தன் நியமிக்கப்பட்டிருந்தான் என்பதை ஈண்டு குறிப்பிடலாம்.

கி. பி. 478-496-ம் ஆண்டுகளில் அரசுபுரிந்த 1-ம் காசியபன், தன் பிதாவைக் கொன்று முடிசூடினமையினாலே, இந்தியாவுக்குத் தப்பியோடிய தன்னுடன்பிறந்தானாவது, பிதிர்ஹத்தி புரிந்தமைக்காகத் தன்னை வெறுத்த குடிகளாவது சிங்காதனத்திலிருந்து தன்னைத் தூரத்திவிடக் கூடுமெனப் பயந்திருந்தான். இக்காரணத்தினாலே அவன் அனுராதபுரத்தை விட்டு, சிகிரியா என்று தற்காலம் வழங்கும் சிம்மகிரி அல்லது சிங்கமலையைத் தன்னிருப்பிடமாகக் கொண்டு, அதனையே இராசதானியாக்கினான். இலங்கையிலே பண்டைக் காலத்திருந்த மலைக்கோட்டைக்குச் சிகிரியா தக்க உதாரணமாகும். ஆபத்துக்காலத்திலே தம்மெதிரிகளினின்றும் தற்காத்துக் கொள்ள இலங்கை யரசரும் சிற்றரசரும், ஐரோப்பிய அரசரையும் சிற்றரசரையும் போன்று

கோட்டைகளைக் கட்டாது, இயற்கையாயமைந்த பெரும் பாறைகளையும் மலையுச்சிகளையும் உபயோகித்தனர் என்பது நாம் கவனித்தற்குரிய விஷயமாகும்.

பொலன்னறுவையும் இக் காலத்திலே பிரதான நிலை யடைந்தது. உருகுணையிலிருந்தோர் அதனைப் படை யெடுக்க முடியாத நிலைமையிலே இருந்ததினாலே அப் பட்டினம் முக்கியமாயிற்று. பட்டினத்தினயற்புறத்திலே நீர்ப்பாசனமேற்பட்டபோது அப்பிரதேச முழுதும் செல்வம் நிறைந்த நாடாய் விளங்கியது. 4-ம் அக்கபோதியும் (கி. பி. 658-674) 7-ம் அக்கபோதியும் (கி. பி. 766-772) அப்பட்டினத்திற் சிறிது காலந் தங்கியிருந்தனர்; 5-ம் சேனன் (கி. பி. 972-981) காலத்திலே, தமிழர் படை யெடுத்து அனுராதபுரத்தைப் பற்றியபோது அம்மன்னன் பொலன்னறுவைக்குத் தப்பியோடி அங்கே தங்கியிருந் தான்.

அரசியல் முறை. இதற்கு முந்திய காலப்பகுதியிலிருந்த மன்னர்களைப் போன்று இக்காலத்து மன்னர்களும் சுயேச்சாதிகாரிகளா யிருந்தனர்; குடிகள் இவர்களைப் போதிசத்துவர்களெனவே கருதி வந்தனர். இராச்சியத்தின் தலைவர்களாயிருந்த இவர்களுடைய அதிகாரம் பரம்பரையாக நாட்டிலே வழங்கி வந்த பழக்க வழக்கங்களினாலேயே கட்டுப்பட்டிருந்தது. அரசாளு முரிமை அரசனது சகோதரனுக்கும், பின்னர் மூத்த சகோதரனுடைய மகனுக்கும் அவனுடைய தம்பிகளுக்கு மாக இருந்தது. அரசனுக் கடுத்தவன் யுவராசன் அல்லது இளவரசனென்க. இவனே அநேகமாய்ப் பட்டத்துக்குரிய வனுயுமிருந்தான்; மகாதிபாதன் என்னும் பட்டப் பெயர் இவனுக்குண்டு. 1-ம் அக்கபோதி (கி. பி. 568-601) கால

5

முதற்கொண்டு தட்சிண பிரதேசத்தின் ஆட்சி மகாதி பாதனிடம் ஒப்புவிக்கப்பட்டது; அதனாலே அது மகாதி பாதம் அல்லது மாயரட்டை என அழைக்கப்பட்டது. மலய நாடும் அனேகமாய் அரச வம்சத்தைச் சார்ந்த ஒருவனால் ஆளப்பட்டுவந்தது.

அரசனுக்குதவியாக உத்தியோகத்தர் பலர் இருந் தனர்; இவர்களுள் சிலர் நாட்டின் ஆளுகையைச் சாதாரண காலத்தில் நடத்திவர, யுத்த வீரரையும் அவர்களுக் குரித்தான விஷயங்களையுங் கவனிக்கச் சேனாதிபதி போன்ற உத்தியோகத்தர்களு மிருந்தனர். சேனாதிபதித்தானம் அரசனால் பெரிதும் நம்பப்பட்டவனுக்கே அளிக்கப் பட்டது; எனவே இப்பதவிக்கு அரச குடும்பத்தின ரொருவனே வழக்கமாக நியமிக்கப்பட்டான். சத்தக்காககன் (சத்திரகிராஹகன்) அல்லது குடை தூக்குபவன், அசிக் காககன் அல்லது வாள்தூக்குபவன், மகாலேகன் அல்லது முக்கிய எழுத்துக்காரன்—இவனே அரசனுடைய கட்டளை களை எழுதுபவன்—என்போர் ஏனைய பிரதான உத்தி யோகத்தர்களாவர்.

இக்காலத்திய அரசியல் முறையிலே விசேடமாகக் கவனித்தற்குரிய விஷயம் கிராமங்களின் சுயராச்சியமே. ஒவ்வொரு கிராமத்தவரும் தத்தங்கிராமத்துக்கான விஷயங்களை அந்நியர் இடர்ப்பாடின்றித் தாமாகவே கவனித்து வந்தனர். அரசாங்க உத்தியோகத்தர், நீதிவழங்கவும் அரசனுக்குரிய இறையை இறுக்கவும் ஆண்டுக்கொருமுறை வந்தனரே தவிர, கிராம விஷயங்களிலே சிறிதளவுக்கே தலையிட்டனர். எவ்வெக்கிராமங்களின் இறை விகாரைக் குரியதென அரசன் நியமித்தானோ, அக்கிராமங்கள் ஏனைய கிராமங்களினும் மிகவுமதிகமான உரிமைகளைப் பெற்றிருந்

தன. விகாரைகளுக்குரிய கிராமங்களினுள்ளே அடைக்கலம் புகுந்த கொடுங்குற்றவாளிகளைத்தானும் அரசனுடைய ஏவலாளர் சிறைபிடித்தல் கூடாதென்றிருந்தது; ஆயின், அக் கிராமங்களிலே ஒளித்த குற்றவாளிகள் தண்டிக்கப்படாவிடின், கிராமத்திலிருந்து தண்டப்பணம் இறுத்தற்கு அரசனுக்குரிமை யிருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

போக்குவரவுக்கான சாதனங்களில்லாமையினாலே தலைநகருக்கு வெளியே யுள்ள குடிகளை அடக்கியாளுதல் பெருஞ்சிரமமான காரிய மென்பதை நாமுணர்ந்தாலொழிய, அக் காலத்திய அரசியல் முறை எவ்வாறென்பதை முற்றாக அறிந்து கொள்ளுதலியலாது. இராசபக்தியுடையவர்களாயும், அரசனுக்குரிய இறை செலுத்துபவர்களாயுமிருந்தவரையில், சிற்றரசரும் குறுநிலமன்னரும் கிராமக் குடிகளைப் போலவே மன்னனால் அடக்கியாளப்பட்டனர். நாட்டினுள் அமைதியு மொழுங்கு மேற்படுத்தி, அதனைப் பகைவர்களிடமிருந்து காப்பதே அரசனது முக்கிய கடமையாக இருந்தது. ஆலயங்களுக்குத் தானங்கள் செய்வதும், அவற்றையும் வேறு சமயத்தாபனங்களையும் (விகாரை, மடம் என்பன) பிணியாளரின் மருத்துவச்சாலைகளையும் நிருமாணிப்பதும், குடிகளுக்கு நன்மை பயப்பதோடு தனது வருவாயையும் அதிகரிக்கச் செய்த ஏரிகளை வெட்டுவதும், மன்னனுடைய கடமைகளாக இருந்தன.

மேற்குறித்த விஷயங்களிலிருந்து, அரசர்கள் கொல்லப்பட்டபோதும்—சிங்காதனம் ஒரு வம்சத்திலிருந்து இன்னொரு வம்சத்தை யடைந்தபோதுங்கூட—கலகம் நீடித்திருந்தாலும் அல்லது நாடு அந்நியர் படையெழுச்சிக்கு உட்பட்டிருந்தாலுமன்றி, குடிகள் யாதொரு தங்கு

தடையுமின்றி தமது நாளாந்த சீவியத்தை நடத்திவந்தன ரென்பது பெறப்படும்.

கமம் (கிருஷி அல்லது பயிர் செய்கை); நீர்ப் பாசனம்

கமமும் நீர்ப்பாசனமும் இக்காலத்திலே விருத்தியடைந்தமைக்குக் காரணம், குடிகளின் முயற்சிகளிலே அரசர் முதலியோர் அதிகமாகத் தலையிடா திருந்தமையே யெனலாம். நெல் முன்னிலுமதிக ஊக்கத்துடன் செய்கைபண்ணப்பட்டது; தென்னிந்தியாவுக்குக் கூட நெல்லும் அரிசியும் ஏற்றுமதி செய்யப்பட்டன. முந்திய காலப்பகுதியினிறுதியிலே ஏரிகள் வெட்டப்பட்டன வென நாம் முன்னமேயே கூறியுள்ளோம்; இவ்வேலை இக்காலப்பகுதியின் முதல் ஐம்பதாண்டுகளிலும் நடைபெற்றது. மிகப்பெரிய ஏரிகள் சில இக்காலத்திலேதான் வெட்டப்பட்டன. 5-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பொலன்னறுவையிலுள்ள தோபவேவவை 1-ம் உபதிஸ்ஸன் கட்டினான். தாதுசேனன் (கி. பி. 460-478) கலாஓயாவின் குறுக்கே ஓர் அணைகட்டி கலாவேவவை அமைத்தான். 2-ம் முகலனும் (மொக்கல்லான—கி. பி. 537—556) பல ஏரிகளையும் குளங்களையும் வெட்டினான். குருந்துவேவ (இது ராட்சதக்குளம் அல்லது அக்கட்டிமுறிப்பாயிருக்கலாம்) என்னும் ஏரி, மிகிந்தலை ஏரியைக் கட்டினவனும், முன்னரே வெட்டப்பட்டிருந்த அலகரக்கால்வாயைப் புதுப்பித்தவனுமான 1-ம் அக்போ (கி. பி. 568—601) வினால் வெட்டப்பட்டது. அலகரக்கால்வாய், அம்பன் கங்கையையும் மின்னேரியா ஏரியையும் சேர்த்தது. கந்தளாய், கிரிதலை ஏரிகளை வெட்டினவன் 2-ம் அக்போ (கி. பி. 601—611) என்பவனே. பூரணமாய் நிரம்பியுள்ளபோது கலாவெவ,

ராட்சதனேரி ஆகிய ஒவ்வொன்றும் 4,425 ஏகர் விஸ்தீர்ண முள்ளவை. முந்தியது 18,500 அடி நீளமும் 36 முதல் 50 அடி உயரமுமுள்ளது. கந்தளாய் ஏரி 3,500 ஏகர் பரப்புள்ளது. இதன் கரை, ஒருமைல் 890 அடி நீளமும் 54 அடி முதல் 59 அடி உயரமுமுள்ளது.

பௌத்த சமயம்.

இக்காலத்திலே முன்னிலும் பார்க்கப் பௌத்த சமயம் பெரிதும் விருத்தியடைந்தது. அது பல திருவிழாக்களும், எண்ணிறந்த கோயில்களும் உடையதாய், பிரதிமைகளைப் பூசிக்கும் வழக்கமும் புண்ணிய தினங்களன்றி சமய போதனையுமுடையதாய்ப் பொது சனங்களால் போற்றப்பட்டு வந்தது. அரசர் தாமும் புத்தருடைய சீடர்களின் நாமங்களையோ, அல்லது போதிசத்துவ சம்பந்தம் பெற்ற பெயர்களையோ சூட்டிக் கொள்வாராயினர்—உ-ம். காசியபன் (காசபன்), அக்போ (அக்கிரபோதி).

இக் காலப்பிரிவின் ஆரம்பத்திலே—அதாவது, கீர்த்தி ஸ்ரீமேகன் காலத்திலே, புத்தரது தந்த சேஷம் (பல்) எனச் சனங்களால் கருதப்பட்டதும் இந்தியாவிற் கலிங்க நாட்டிலே பூசிக்கப்பட்டு வந்ததுமான தலதா (பல்) இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. அதற்கென விசேடமாக நிருமாணிக்கப்பட்ட கட்டடம் தலதா மாலிகவை என்னும் பெயர் பெற்றது. அக்காலத்திலேயுங்கூட இத்தந்த சேஷம் வருடத்துக் கொருமுறை பெருங் கோலாகலத்துடனே ஊர் வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இத் தலதா, புத்தரின் சின்னமாகக் கருதப்பட்டுவந்ததோடு, நாளாவட்டத்தில் சிங்கள அரசரின் ஆட்சி யுரிமையைக்காட்டும் பொருளாயிற்று. ஒவ்வோர் அரசனும் அதனைத் தன்

பாதுகாப்பில் வைத்திருத்தல் இன்றியமையாததெனக் கருதப்பட்டது; அரசன் தன்தலைநகரை மாற்றும்போதெல்லாம் அதுவும் எடுத்துச் செல்லப்பட்டது.

பௌத்த சமயத்தின் பல பிரிவினரும் இக் காலத்திலே மேனிலையடைந்தனர்; அவர்களிடையே தாந்தாம் உயர்ந்தவரென்னும் போட்டியும் ஓரளவுக்கிருந்தது. தர்மருசிகர், சாகலிகர் என்போரின் தொகை கூடியது; இவர்கள் சிகிரியா, மிகிந்தலை என்னுமிடங்களிலே யிருந்த விகாரைகளில் வசித்துவந்தனர். மகிஷாசகர், தர்மகுப்தர் என்னும் பௌத்த சமயப்பிரிவினரும் இக் காலத்திலே காணப்பட்டனர் எனச் சீன நூலாசிரியர்கள் கூறியுள்ளனர். ஒழுக்க முறைகளிலே இவ் விரு கட்சியினருக்கும் தேரவாதினிகளுக்கும் மாறுபாடுகளிருந்தன. பிக்குணி சங்கங்களை ஏற்படுத்துதற்கு இலங்கையிலிருந்து சீனத்துக்குச் சென்ற சிலர் தர்மகுப்தப் பிரிவினரே யென்க. தேரவாதினிக் கட்சியிலிருந்து விலகினவருள் முதல்வரான மகாசங்கிகரும் இக்காலத்திலே காணப்பட்டனர்.

இலங்கையிலே வைதூலியர் என்றழைக்கப்பெற்ற மகாயானச் சமயப் பிரிவினரும் இத் தீவிலே பெருஞ் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். மகாயானக் கட்சி கிறிஸ்து பிறந்த காலத்திலே தோன்றி, கி. பி. 6-ம் நூற்றுண்டிலே இந்தியாவில் முக்கியமாய் விளங்கியது. அதனைச் சார்ந்த சமயப் பிரசாரகர்கள் தூர தேசங்களுக்கெல்லாஞ் சென்று, அருகத நிலையை ஒருவன் நாடுவதிலும்பார்க்கப் போதிசத்துவ நிலையை நாடுவதே மேலானது எனச் சிலாகித்துக் கூறினர். இவர்களுடைய இடைவிடாப் பிரசாரத்தினுல் போதிசத்துவரை வணங்குவது இக்காலத்திலே இலங்கையில்



"துஷ்ட இராஜன்" எனப்படும் சிலை.

அதிகமாக வழங்கியது; போதிசத்துவப் பிரதிமைகள் பல செய்யப்பட்டும் பூசிக்கப்பட்டும் வரலாயின; இவற்றிற் சிலவற்றை—உதாரணமாக வலிகமத்திலே யுள்ள குஷ்ட ராஜனுடைய சிலையெனக் கூறப்படும் பிரதிமையை—நாமிப் போதும் காண்டல் கூடும். தற்காலத்திலேயும் வணங்கப்படும் நாதன் என்னும் பிரதிமை, உண்மையிலே போதிசத்துவ ரான அவலோகிதேசுவரர் அல்லது லோகேசுவரநாதரின் பிரதிமை எனச் சிலர் கூறுவர். இவரையே மகாயானிகள் உலக ரட்சகர் எனக் கருதினர்.

மகாயான பௌத்த சமயநூல்கள் வரைதற்குதவிய ஸம்ஸ்கிருத பாஷையை விரிவாகப் பலர் கற்றமையே மகா யானக் கொள்கைகள் பரவியதிஞலேற்பட்ட முக்கிய பலனு கும். ஒருவன் தான்செய்த நற்செயல்களின் பயனுக, ஒரு புத் தராகவேண்டுமென விரும்புவதை 7-ம் நூற்றுண்டிலே ஸம்ஸ் கிருதத்திலே பொறிக்கப்பட்ட இலங்கைச் சாசனமொன்று குறிக்கின்றது. 8-ம் நூற்றுண்டி லெழுதப்பெற்ற இன்னெரு ஸம்ஸ்கிருத சாசனம், அனுராதபுரத்து அபயகிரி விகாரை யிலும் அதற்குரிய நிலங்களிலும் வசிக்கும் பிக்குக்களும் ஏனையோரும் கைக்கொண்டொழுகுதற்கான நியமங்களை அடக்கியுள்ளது. அபயகிரி விகாரையைச் சார்ந்தோர் நாத்தி கரிடம் சமரச நோக்கங்கொண்டே இருந்தனர் என்பது அனைவரும் நன்கறிந்த விஷயம்; அங்குள்ளோர் ஸம்ஸ்கிருத மொழியை நன்கு அறிந்திருக்கவேண்டு மென்பதை அச் சாசனம் காட்டுகின்றது. கி. பி. 4-ம் நூற்றுண்டிலே ஸம்ஸ்கிருத மொழியிலே எழுதப்பட்ட மகாயான நூல் களையும் (2-ம் ஆரியசூரர் இயற்றிய ஜாதகமாலை; சந்திர கோமினியின் இலக்கணம்; சாந்திதேவரின் போதிசரியாவ தாரம்—7-ம் நூற்றுண்டு—) இலங்கைவாசிகள் நன்கு பயின்

ழிருந்தனர் என்பது இதற்குப் பிற்காலத்தி லெழுதப்பட்ட சிங்கள நூல்களிலிருந்து தெரியவருகின்றது.

முன்னரே குறிப்பிட்டவாறு, ஸம்ஸ்கிருத மொழிப் பயிற்சியினாலே பெரும்பயன்கள் உண்டாயின. அது சிங்களத்துக்குப் பல சொற்களை உதவி, சிங்கள மொழி வளரவும் பொருள் கொள்ளவும், விசாலிக்கவுஞ் செய்தது; சிங்கள நூலாசிரியர்களுக்கு அது முன்மாதிரிகளைத் தந்தது; இலக்கணம், யாப்பு, ஜோதிடம், ஒலிநூல், எழுத்தியல் என்பவற்றைப்பற்றியும், வைத்தியம், மாந்திரிகம், மனைக்கலை, அரசியல் என்பவற்றைப்பற்றியுமான அறிவைக் கொடுத்துதவியது.

இந்து சமயம்.

இச்சமயத்தில் இலங்கையிலே ஸம்ஸ்கிருத மொழி பரவியதற்கு இன்னொரு காரணமிருந்தது. பௌத்த சமயத்துக்கு முன்னிருந்த இந்து வைதிகக் கொள்கைகள் இக்காலத்திலே இந்தியாவிலே அரசு புரிந்த குப்தமன்னர் காலத்தில் புத்துயிர்பெற்று இலங்கையிலும் பரவலாயின. சனங்கள் பலர் இந்து தேவதைகளைப் பூசித்து, இந்து சமய அனுட்டானங்களைக் கைக்கொள்வாராயினர். நெடுங்காலமாகப் பிக்குக்களைப் பரிபாலித்து வந்தது போன்று அரசர்கள் இப்போது பிராம்மணர்களையும் பரிபாலித்தனர். இதேகாலத்தில், தற்போது கண்டியிலே மகாதேவாலயத்திலுள்ள விஷ்ணு விக்கிரகம், கி. பி. 790-ம் ஆண்டிலே, இந்தியாவிலிருந்து தேவுந்தரா (தோன்று) வுக்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கு முந்தியே மாதோட்டத்திலும் திருக்கோணமலையிலும் சிவாலயங்கள் தாபிக்கப்பட்டன; இவ்வாலயங்களைத் தாபித்தோர் அவ்விடங்களிற் குடியேறிய தமிழர்களாயிருந்திருத்தல்வேண்டும்.

பௌத்த சமய வளர்ச்சியும் செல்வ அபிவிருத்தியும், மனைக்கலையிலே பெரும் முன்னேற்றத்தை யுண்டாக்கின. இக்காலத்திலே முதன் முதலாகக் கட்டப்பட்ட கோயில்கள், பெரும் கற்பலகையினூற் சேர்க்கப்பட்ட இரு மேடைகளா கவே இருந்தன. இவற்றிலொன்று கர்ப்பக் கிருகமாகவும் மற்றது பறையடிக்கு மிடமாகவு முபயோகிக்கப்பட்டுவந் தன. இதற்குப் பின்னர் இக் கட்டடங்கள் சிறந்த முறை யிலே நிருமாணிக்கப்பட்டன. உதாரணமாக ஜேதவனு ராமா டாகபவுக்கு மேற்றிசையிலுள்ள கட்டடம் முத லில் அரை கோளவடிவமான செங்கற்கூரையுடையதாக விருந்தது. அதன் செங்கற் சுவர்களையும் பிரம்மாண்டமான கதவுக்கால்களையும் இப்போதும் நாம் காணலாம். அது ஒரு மண்டபமும், கூடமும், சிறு தாழ்வாரமும் கர்ப்பக் கிருகமும் கொண்டதாய் சில அம்சங்களில் கிறிஸ்தவக் கோயிலை ஒத்திருக்கின்றது. இக் காலத்திய டாகபக்களெல் லாம் அளவிற் சிறியனவாயும், சதுக்கத்தில் நிருமாணிக்கப் பட்டனவாயுமுள்ளன. நிற்க. இக்காலத்திலே செய்யப்பட்ட மிகப் பிரதானமான கருமம், சிகிரியாவை ஒரு மலைக் கோட் டையாகச் செய்தமையேயாகும். செங்கற்களைக் கொண்டு ஒரு சிங்கவுருவ மமைக்கப்பட்டிருப்பதும் பல படிகள் கட்டப்பட்டிருப்பதும், அவற்றைச் சுற்றியுள்ள சுவர்களில் நன்கு குழைந்த சுண்ணக்கலவை பூசப்பட்டிருப்பதும் அக் காலத்திய அருந்திறமை வாய்ந்த வேலையைக் காட்டுகின்றன.

மனைக்கலை; சிற்பம்; ஓவியம்.

இலங்கையிலே காணப்படும் மிகச் சிறந்த சிற்பங்கள் சில இக்காலத்திலேயே செதுக்கப்பட்டன. இதற்கு முந்திய காலத்திலே சிற்பவுருவங்கள் சுண்ணக் கல்லிற் செதுக்கப் பட்டிருக்க, இக்காலத்திய சிற்பவுருவங்களோ, கற்பாறையிற்

செதுக்கப்பட்டன. ஈசுரமுனியாவிலே, கற்பாறையிலே ஓரளவுக்கு செதுக்கப்பட்டுள்ள ஸ்திரீ புருஷ வடிவங்களிலும், ஆசனத் தமர்தல் போன்ற ஏனைய வுருவங்களிலும் குப்தகாலத்துச் சிற்பமுறை பின்பற்றப்பட்டதென் பதைக்காட்டும் அத்தாட்சிகளை நாம் காண்டல் கூடும். இராணி மண்டபமென்னுங் கட்டடத்தின் வாசற்படியிலே கருங்கல்லிலே செதுக்கப்பட்ட சந்திரபிம்பம் அழகு பொருந்தியதாய் சிற்பியின் அருந்திறமையைக் காட்டுகின்றது.

சிகிரியாவிலே சுவரிலே வரையப்பட்ட சித்திரங்கள் இலங்கையிலுள்ளவற்றுள் மிகப்பிரசித்தி பெற்றவை. மேற்கிந்தியாவிலே அஜந்தா குகைகளிலே காணப்படும் சித்திரங்களை இவை பெரிதும் ஒத்துள்ளன. மானிட வடிவங்கள், அஜந்தாவிற்போலவே, திறமையுடன் எழுதப்பட்டுள்ளன; மலர்கள், கனிகள், அல்லது இன்னிசைக் கருவிகளைத் தாங்கி நிற்கும் கரங்கள், எவரும் மெச்சத்தக்க வகையிலே வரையப்பட்டுள்ளன.

**இலக்கியம்.**

பௌத்த சமயத்தில் மாந்தருக் கேற்பட்டிருந்த ஆர்வம் இலக்கிய நூல்களியற்றுதற்குப் பெரிதுந் தூண்டியது. இக் காலப்பகுதியின் தொடக்கத்திலும், அதற்கு முன்னரும் பாளி மொழியிலியற்றப்பட்ட சமய நூல்கள் பலவற்றுக்குச் சிங்களத்திலே உரைகள் வரையப்பட்டன. இவற்றுள் முக்கியமானது மகாவிகாரையினரா லியற்றப்பட்ட மகா அர்த்த கதை என்பதாகும். அவை இக் காலத்திலே காணவில்லையாகையினாலே, அவை எழுதப்பட்ட காலத்தைப்பற்றியாவது, உள்ளடக்கமான விஷயங்களைப்பற்றியாவது நாம் திட்டமாக ஒன்றுங் கூறுதலியலாது. இலங்கைக்குப்

பௌத்த சமயம் கொண்டுவரப்பட்டதைப்பற்றியும் மகா சேனன் காலம் வரையும் இலங்கைச் சரித்திரத்தைப் பற்றியு மான பாட்டுத் தொகுதிகளைக் கொண்ட தீபவம்சம் என்னும் நூலே இக் காலப்பகுதியின் மிகப்பழைய பாளி நூலாகும். மகாநாமன் (கி. பி. 409-431) ஆட்சிக் காலத்திலே புத்த கோஷர் இந்தியாவிலிருந்து இத்தீவுக்கு வந்தது முதலாகப் பாளி மொழிப் பயிற்சியும், அம்மொழியிலேயே நூல்களியற்றுதலும், சாதாரண வழக்கமாயிற்று. இவரே விசுத்தி மார்க்கம் என்னும் நூலின் ஆசிரியராவர்; இவர் பௌத்த சித்தாந்தத்தை இந் நூலிலே எடுத்துக் கூறுகின்றார். சமய நூல்களைப்பற்றிச் சிங்கள மொழியிலியற்றப்பட்ட விருத்தியுரைகளைப் பாளி மொழியி லெழுதியவர் இவரே யென்றுங் கூறப்படுகின்றது. இவருடைய நூல்கள் பிற் காலத்திய பௌத்த சமயிகளின் மனத்தைப் பெரிதும் மாற்றியது; சமயநூல்களை எடுத்துக் கூறுவதற்கு இவர் கையாண்ட முறை பிற்காலத்திலே பர்மாவிலுங்கூடப் பின்பற்றப்பட்டது.

கி. பி. 6-ம் நூற்றாண்டிலே பாளிமொழியிலே இயற்றப் பட்ட முக்கியமான நூல், மகாவம்சம் என்பதாகும். தீப வம்சத்திற் கூறப்பட்டதையே இதுவும் கூறுவதாயினும், அர்த்த கதையி லிருந்தெடுக்கப்பட்ட விஷயமுங் கொண்டுள் ளது. மகாவம்சம் ஒரு காப்பிய நூலாகும்; பாஷையிலும் நடைப்போக்கிலும் இது ஸம்ஸ்கிருதத்தைப் பெரிதுந் தழுவி யிருக்கின்றது. பிற்காலத்திய பாளி சிங்கள இலக்கிய நூல்களுக்கு முன்மாதிரிகளாக இருந்த நூல்கள் இரண் டினுள் மகாவம்சம் ஒன்றாகும்; மற்றையது, நிதான கதை என்னும் முகவுரை கொண்ட ஜாதகம் என்னும் நூலென்க. இவ்விரு நூல்களையும் முன்மாதிரியாகக் கொண்ட மகா



அனுராதபுரத்தில், ஈசுரமுனியா என்னுமிடத்திற் காணப்படும் ஆண் பெண் உருவங்கள்.

போதி வம்சம் என்னும் நூலும் இக்காலப்பகுதி முடியு முன்னரே தோன்றியது.

பாளிமொழி நூல்களினுங் குறைவாகவே சிங்கள மொழியில் இலக்கிய நூல்கள் தோன்றின. நான்காம் நூற்றுண்டினிறுதியிலே, புத்ததாசன் காலத்திலே பாளி சமய நூல்களின் சில பகுதிகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. 1-ம் அக்போவின் காலத்திலே (கி. பி. 568-601) பன்னிரண்டு சிங்களக் கவிகளிருந்தனரெனச் சொல்லப்படுகின்றது. தர்மபத அர்த்தக் கதைக்கான சிங்களச் சொல்லகராதி யொன்று இக்காலப்பகுதி முடிதற்கு முன்னரே இயற்றப்பட்டது. தம்பிய அதுவகாதபத என்னும் பெயருடன் இந்நூல் இக்காலத்திலும் வழங்கிவருகின்றது. சிங்கள அணியலங்காரத்தைப்பற்றிக்கூறும் "சிய பாஸ்கரம்" என்னும் நூலும் இந்நூற்றுண்டு காலத்திலேயே வரையப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கிறிஸ்தவ சகாப்தத்தின் பூர்வ நூற்றுண்டுகளிலே வழங்கிவந்த ஏனைய மொழிகளினும் சிங்களமொழி இப்போதைப் போன்று அவ்வளவு வேறுபட்டிருக்கவில்லை. ஆனல் இக்காலத்திலே சிங்களமொழி தனக்கெனெ விசேடித்த வடிவத்தை யடைந்தது. அதே சமயத்தில் வரிவடிவமும் மாற்றமடைந்தது; அதாவது இப்பகுதி முடியுங்காலத்திலே, சிங்கள எழுத்துக்கள் தற்காலத்திய வட்டவடிவத்தை யடைந்தன. பாஷையும் பாளி, ஸம்ஸ்கிருதம் என்னும் பாஷைகளின் நடையினுல் பெரிதும் மாற்றப்பட்டது.

**வட இந்தியா.** பண்டைக்காலத்திலே இலங்கையிற் பெருஞ்செல்வாக்கு படைத்தும் அதற்கு ஒரு முன்மாதிரியாக இருந்தும் வந்த நாடு இந்தியாவேயாம். அநேகமாய் அதன் பகுதிகள் எல்லாவற்றேடும்

இலங்கை சம்பந்தம் பெற்றிருந்தது; சமயம், சிற்பம், ஓவியம் என்பவற்றிலே இந்தியா இலங்கைக்கு எத்துணை அளவு முன்மாதிரியாக விளங்கிய தென்பதை முன்னரே கூறியுள்ளோம். மௌரிய சக்கராதிபத்தியம் சிதைந்தபின்னர் இந்தியா சுயேச்சாதிகாரம் பெற்ற பல இராச்சியங்களாகப் பிரிந்தது; இவை ஒன்றோடொன்று போர்புரிந்து நின்றன என்பதும் குறித்தற்பாலது. கி. பி. 4-ம் நூற்றாண்டிலே, சமுத்திரகுப்தன் வட இந்தியா முழுவதையும் தன்னாட்சிக்குட்படுத்தி, அமைதியும் செழுமையும் தோன்றச் செய்தான். அவனுடைய அதிகாரம் அனேகமாய் இந்தியா முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது; சிங்களரும் தனக்கடி பணிந்து நிற்பதாக அவன் விருதுகூறினன். புத்தகயாவுக்குச் செல்லும் சிங்கள யாத்திரிகர் தங்குவதற்காக அந்த க்ஷேத்திரத்திலே ஒரு மடம் கட்டுதற்கு அனுமதி பெறும்படி கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் பல பரிசில்களோடு சமுத்திரகுப்தனிடம் ஒரு தூதனுப்பினன்.

சமுத்திரகுப்தனும் அவன் சந்ததியினரும் ஆண்ட காலத்திலே, இந்தியாவே கீழ்நாடுகளுள் பிரதானமாயிருந்தது. பாரசீக, உரோம, சீனச் சக்கரவர்த்திகளோடு இந்தியச் சக்கரவர்த்திகள் தூதனுப்பிப் போக்கு வரவு செய்துவந்தனர். பாகியன், ஹியூன் திசியாங்கு போன்ற சீன யாத்திரிகர் இந்தியாவுக்கு வந்தனர்; குமாரசீவர் போன்ற இந்திய ஞானிகள் சீனத்துக்குச் சென்றனர். அப்போதுதான் இந்தியாவுக்குக் கீழ்த்திசையிலுள்ள பிரதேசங்களும், சாவகத்தீவும் பௌத்த சமய போதனையைப் பெற்றன.

இந்து சமயம் புத்துயிர் பெற்ற காலமும் இதுவே. குப்தமன்னர்கள், பௌத்த சமயிகளும் சமணர்களும் தத்தம்

சமய அனுட்டானங்களின்படி நடத்தற்குப் பூரண சுதந்தர மளித்தபோதிலும் விஷ்ணுபத்தி யுடையவர்களாயிருந்த னர். இலக்கியம், விஞ்ஞானம், மனைக்கலை, சிற்பம், ஓவியம் என்பவற்றின் விருத்திக்கு இவர்கள் பெரிதும் உதவிபுரிந்த னர். ஸம்ஸ்கிருதமே கற்றோரின் மொழியாயது. மகாபார தம், இராமாயணம் என்னும் இந்திய காப்பிய நூல்களும், மனுதர்மசாத்திரம், கௌடில்யரின் அர்த்த சாத்திரம் போன்ற ஏனைய ஸம்ஸ்கிருத நூல்களும் இக்காலத்திலேதான் இறுதி யான உருவமடைந்தன. காளிதாசன் தனது நாடகங்களை யும் காப்பியங்களையும் இயற்றியதும் இக் காலத்திலேதான் என்க. இவை பிற்காலத்தில் சிங்கள இலக்கிய நூல்களுக்கு முன்மாதிரியாக இருந்து அவற்றைப் பெரிதும் மாறுதலடை யச்செய்தன. இந்திய வித்துவ சிரோமணிகளும் பெரிதும் போற்றிய ஜானகிஹரணம் என்னும் ஸம்ஸ்கிருத காவியத்தை குமாரதாசன் என்னும் இலங்கைப் புலவன் இதற்குச் சிறிது பின்னரே இயற்றினான் என்பதை ஈண்டு குறிப்பிடலாம். அபிநயம், அடக்கம், வடிவவனப்பு, நிலை, அங்க வமைப்பு என்பவற்றிற் சிற்பங்கள் சிறந்து விளங்கின. அஜந்தாக் குகையிலுள்ளவை போன்ற ஓவியங் களும் மகோன்னத நிலையடைந்தன. இந்தியாவின் சிறப் பான நிலைமையும் அதன் முன்மாதிரியும் செல்வாக்கும் அபரிமிதமாயிருந்தமையினாலே, ஆசிய நாடுகள் பல, இந்தி யாவை தமக்கொரு குருவாகக் கொண்டிருந்தன வெனலாம்.

**தென்னிந்தியா.** அரசியலுக்கான விஷயங்களிலே இலங்கை இந்தியா வுடன் மிகவு மதிகமான சம்பந்தம் பெற்றிருந்தது; ஆனாலும், தக்க சரித்திர ஆதாரங்கள் இல்லாமையினாலே, இலங்கைக்கும் சேர சோழ பாண்டிய மன்னர்களுக்குமுள்ள தொடர்பை நாம்

அறிந்துகொள்ளுதல் இயலாத காரியம். இவ் வரசர்கள் ஒருவரோடொருவர் பன்முறை போரிட்டனர்; ஒவ்வோர் அரசனுடைய வெற்றி தோல்விக் கேற்ப, அவரவருடைய இராச்சியங்களினெல்லைகள் விரிந்தும் சுருங்கியும் வந்தன.

பண்டைக்காலத்து அரசருள் மிகப்பிரசித்தி பெற்றவன் சோழன் கரிகாலன் என்பவனும். கி. பி. 5-ம் நூற்றாண்டி னாரம்பத்திலே இவன் சேர பாண்டியர்களை முறியடித்து, குழப்பம் விளைத்த ஆயர், அறவாளர், குறும்பர், ஒழியர் என் னும் சாதியினரை அடக்கினான். அவன் காவேரிப்பட்டினத் தைத் தன் தலைநகரமாக்கி, காவேரி நதிக்கரைகளை உயர்த்து வதனாலும் கால்வாய்களை வெட்டுவதனாலும் வெள்ளப் பெருக்கினால் அப்பட்டினத்துக்குச் சேதம் உண்டாகாத படிச் செய்தான். நாமிங்கு குறித்தற்கான இன்னொரு சோழராசன், கலப்ப வம்சத்தைச் சார்ந்த அக்கூடவிக் கந்தன் என்பவனாவன். இவன் காலம் 5-ம் நூற்றாண்டின் இறுதி யென்க. இவன் காலத்திலேதான் புத்த தத்தன் என்பான் பௌத்த சித்தாந்த தத்துவங்களை விளக்கும் அபிதர்மாவதாரா என்னும் நூலையும், பௌத்த பிக்குக்களின் அனுட்டான விதிகளடங்கிய விநயவினிச்சயம் என்னும் நூலையும் பாளிமொழியில் செய்யுள் நடையில் இயற்றினான். கி. பி. 6-ம் நூற்றாண்டிலே சீவித்திருக்கலாமென ஊகிக்கக் கூடிய சேரன்செங்குட்டுவன் என்பவனைப்பற்றியும் நாம் அறிகிறோம். இவன் சேர நாட்டைத் தென்னிந்திய இராச்சியங்களுள் முதன்மை பெறச் செய்தான். இவன் காலத்திலே கவல் அல்லது கயவாகு (கஜபாகு) என்பான் இலங்கை மன்னனாக இருந்தா னெனக் கூறப்படுகின்றது. செங்குட்டுவனுக்குப்பின் சிம்மாதன மேறியவன், பாண்டிய மன்னனான இரண்டாம் நெடுஞ்செழியனாற் றோற்கடிக்கப்

பட்டான்; இவன் 7-ம் நூற்றாண்டின் துவக்கத்திலோ அன்றேல் அதற்குச் சிறிதுமுன்னரோ பாண்டிய நாட்டைத் தென்னாடுகளுள் தலைமை பெற்று விளங்கச் செய்தான்.

**பண்டைத் தமிழ் இலக்கியங்கள்.**

மன்னர்களைப்பற்றிக் கூறும் இலக்கிய நூல்கள், அக்காலத்து மாந்தரின் சமுதாய வாழ்க்கையைப்பற்றி நாம் அறிதற்குப் பெரிதும் உதவுகின்றன. அசோக மன்னன் காலத்திலே வட இந்தியாவிற் றோன்றிய நாகரிகம் தமிழ்க் கவிகளை ஒரு சிறிதும் பாதிக்கவில்லை எனத் தோன்றுகின்றது. பண்டைத் தமிழ் நூல்கள், பௌத்த, சமண சமயங்களைப்பற்றி யாதும் கூறவில்லை. மற்று, அவை அவ்வவ்விடங்களிலே வழங்கின வழிபாட்டு முறைகளையும், முருகன் போன்று ஓரிடத்தே பெருமை பெற்று விளங்கின கடவுளைப்பற்றியுங் கூறுகின்றன; இம் முருகக்கடவுளே, இலங்கையிற் கதிர்காமத்திலும் வேறிடங்களிலும் வணங்கப்படுகின்றார்; இவரே பிற்காலத்திற் சிவபிரானுடைய திருக்குமரரெனக் கூறப்பட்டு இந்துக்கள் வணங்கும் தெய்வங்களுள் ஒருவராக விளங்குகின்றார். இது நிற்க. கி. பி. 5-ம் நூற்றாண்டிற்றான் பாண்டிய நாட்டிற் சமணமும் சோழநாட்டிற் பௌத்தமும் தலைமை பூண்டு விளங்கின. வட இந்தியாவிலே குப்தவரசர் காலத்திலே பிராம்மணக் கொள்கைகளும் ஸம்ஸ்கிருதமும் புத்துயிர் பெற்றமையினாலே தென்னிந்தியாவில் ஆரிய நாகரிகம் பரவலாயிற்று. மிகப் பழைய தமிழ்ச் செய்யுட்களிலே ஸம்ஸ்கிருதமொழி அல்லது சமயக்கொள்கை என்பவற்றின் மணமே இல்லை யெனலாம். கி. பி. 3-ம் நூற்றாண்டிலே ஐந்திரா என்னும் ஸம்ஸ்கிருத இலக்கண நூலை முன்மாதிரியாகக்கொண்டு தொல்காப்பியனார்

இயற்றிய தோல்காப்பியம் என்பதிற்றான் ஸம்ஸ்கிருத பாஷையின் சம்பந்தம் முதன் முதலாகத் திட்டமாகக் காணப்படுகின்றது. 5-ம் நூற்றாண்டிலே திருவள்ளுவர் இயற்றிய குறள் என்னும் சிறந்த நூலில் ஆரியர் கருத்துக்கள் காணப்படுவதோடு ஸம்ஸ்கிருதச் சொற்களும் உள்ளன. சிலப்பதிகாரம் மிகப் புதிய விஷயத்தைக் கூறினும், ஸம்ஸ்கிருத காப்பிய முறையைத் தழுவியுள்ள தென்க. அதன் முதலிரு காண்டங்கள் கோவலனைப்பற்றியும் அவன் மனைவி கண்ணகியைப்பற்றியுங் கூறுகின்றன. மூன்றாம் காண்டம் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டது; இது, கண்ணகி பத்தினிக் கடவுளானமையைப்பற்றி விவரிக்கின்றது. இக் காலத்திலே யியற்றப்பட்ட பெருங்காப்பியங்களுள் இறுதியாக இயற்றப்பட்டது மணிமேகலையாகும். இது பௌத்த காப்பிய நூல்; அநேகமாகக் கி. பி. 7-ம் நூற்றாண்டிலே இயற்றப்பட்டிருக்கலாம்.

தமிழ்க்கவிகள் வடமொழிக் காப்பியங்களின் நடையையும் அணியலங்காரங்களையும் தழுவி நூல்களியற்றியது மாத்திரமே 6-ம் நூற்றாண்டுகளிலே, தென்னிந்தியாவிலே ஆரிய நாகரிகம் படிப்படியாகப் பரவிய தென்பதைக் காட்டும். இதுகாறும் மாந்தர் வணங்கி வந்த தமிழ்த் தெய்வங்களுக்குப் பதிலாக அவர்களைப் போன்றே யிருந்த ஆரியத் தெய்வங்களைக் கூடியவரையில் வணங்கும் வழக்க மேற்பட்ட தென்பதும், தென்னிந்திய மன்னர், 9-ம் நூற்றாண்டிலே இலங்கையை யாண்ட அரசர்களைப் போன்று, ஸம்ஸ்கிருத புராணங்களிலே கூறப்பட்டுள்ள சூரிய, சந்திர வம்சங்களைச் சார்ந்தவர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டன ரென்பதும் அக்காலத்திய இலக்கிய நூல்களிலிருந்தும் தெரிய வருகின்றது.

பல்லவர்.

வழாம் நூற்றாண்டிலே, சேர சோழ பாண்டிய இராச்சியங்கள், வட தட்சிண சமவெளிகளிலிருந்து வந்த பல்லவர் ஆட்சிக்குட்பட்டன. கி. பி. 3-ம் நூற்றாண்டின் முதற் பாதியில் ஆந்திரர் மறைந்த காலந்தொடக்கம், 6-ம் நூற்றாண்டின் மத்தியப் பகுதிவரையில் தட்சிணத்தின் சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தெரிந்துள்ள விஷயங்கள் மிகக் குறைவே. 6-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தட்சிணத்தை யாண்டவர் பல்லவர்களாவர். அந் நூற்றாண்டின் நடுவிலே, இத்தட்சிண பிரதேசத்து முக்கிய வரசனை முதலாம் புலிகேசி என்னும் சாளுக்கியனுல் அவர்கள் தென்றிசை துரத்தப்பட்டனர். அதே நூற்றாண்டின் கடைசிப்பகுதியிலே சீவித்திருந்த சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ மன்னன், சேர சோழ பாண்டிய இலங்கை மன்னர்களைத் தோற்கடித்ததாகப் பொறிக்கப்பட்டுள்ள சாசன மொன்று இப்போதுங் காணக்கிடக்கின்றது. ஆனல் அத்தகையன் ஒருவன் படையெடுத்ததைப்பற்றி இலங்கைச் சரித்திரங்கள் ஒன்றுங் கூறவில்லை; பாண்டிய சோழ அரசர்களும் மேற்குறித்த சிம்மவிஷ்ணுவினுல் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் சிம்மவிஷ்ணுவுக்குப் பின் அரசாண்ட 1-ம் மகேந்திரவர்மனுடன் போரிடுதற்காக 2-ம் புலிகேசி (கி. பி. 608—642) யோடு சேர்ந்து கொண்டனர். இப் போரின் பயனாக, பல்லவர், கோதாவரி கிருஷ்ண நதிகளுக்கிடையே யிருந்த வேங்கி நாட்டையும் (இது மாத்திரமே அப்போது பல்லவர்களுக் குரியதாயிருந்தது) பிரசித்தி பெற்ற தலமாகிய காஞ்சிபுரத்தையும் இழந்தனர். புலிகேசியின் உடன்பிறந்தானொருவன், வேங்கி நாட்டதிபனாக நியமிக்கப்பட்டான். இவனுடைய சந்ததியினரே

கீழ்சாளுக்கியர் எனப்படுவர்; இவர்கள் தம்மை அயலா ராட்சியினின்றும் சீக்கிரமே விடுவித்துக்கொண்டனர்; மேற் கத்திய சாளுக்கியரோ, 2-ம் புலிகேசியின் சந்ததியினராவர்.

பல்லவ அரசருள் திறமை வாய்ந்த நரசிம்மவர்மன் (கி. பி. 635-668) முடிதரித்த பின்னர் அவர்கள் நிலைமை மேலோங்கியது. இவன் கி. பி. 642-ம் ஆண்டிலே 2-ம் புலிகேசியை முறியடித்து, பாதாமியைக் கைப்பற்றி, தென்னிந்தியாவிலும் தட்சிணத்திலும் பல்லவரையே அதி காரமுள்ளவர்களாக்கினான். இலங்கையைச் சார்ந்த மான வர்மன் என்பான் இவனுடன் சேர்ந்து புலிகேசியைத் தாக்கினான்; இதற்குப் பதிலாக அனுராதபுரத்தை மான வர்மன் பிடித்தற்கு நரசிங்கவர்மன் உதவிபுரிந்தான்.

நரசிங்கவர்மனுடைய மரணத்துக்குப் பின் பல்லவ ராச்சியம் க்ஷீணதசையடையத் தொடங்கியது. பல்லவர் 674-ம் ஆண்டிலே சாளுக்கியராற் றோற்கடிக்கப்பட்டனர் காஞ்சிபுரமும் பிடிக்கப்பட்டது. இதற்கு ஏறக்குறைய அறு பத்தாறுண்டுகளுக்குப் பின்னர், இவர்கள் சாளுக்கியரால் மீண்டுமொருமுறை தோற்கடிக்கப்பட்டனர். இத்தோல் விக்குப் பிறகு அவர்கள் தலையெடுக்கவில்லை. இடைவிடாப் போரினால் சாளுக்கியர் பலங்குறைந்து, அடுத்த நூற்றாண் டிலே ராஷ்டிரகூடரால் தோற்கடிக்கப்பட்டனர்.

ஒன்பதாம் நூற்றாண்டிலே சோழ பாண்டிய அரசர் ஒருவாறுகத் தனிச்செங்கலோச்சி வந்தனர். இலங்கையதிப னை 1-ம் சேனனுடைய (கி. பி. 831-851) காலத்திலே பாண்டியர் இலங்கைமீது படையெடுத்தனர்; அப்போது இத்தீவிலே குடியிருந்த தமிழர் பாண்டிய சேனைக்கு உதவி

புரிந்தனர். இதற்குப் பழிவாங்க கி. பி. 851-885 ஆண்டு களிலே இலங்கையையாண்ட 2-ம் சேனன் என்பான் கி. பி. 860 ஆண்டிலே, பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, பட்டத்துக்குரிமையற்ற ஒருவனை அதற்கதிபனாக்கினான். இதனைப் பல்லவர் ஒரு சிறிதும் தடுக்கவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே சோழராஜனான ஆதித்தன் தலைமையின் கீழிருந்த சோழ பாண்டிய சேனை பல்லவர்களைத் தோற்கடித்து அவர்களுடைய வல்லமையை அழித்துவிட்டது.

சமயம், மனைக்கலை, சிற்பம் என்பவற்றின் அபிவிருத்திக்குப் பல்லவர் பெரிதும் உதவினர். பல்லவ மன்னர்கள் இந்து சமயத்தையும் சமணசமயத்தையும் போற்றிவந்தனர். தென்னிந்தியாவிலே கற் கோயில் முதலியவற்றை நிருமாணிக்கும் வழக்கம் அவர்களுடைய காலத்திற்றான் தோன்றியதென்க. மகாபலிபுரமென இக்காலத்திலே வழங்கி வரும் மாமல்லபுரத்தைத் தாபித்தவன் நரசிங்கவர்மன் என்பவனாவன்; அங்கே பெரும் பாறுங்கற்களிலே இரதங்களைச் செதுக்கச் செய்தவனும் அவனே. அவ்விடத்திலே சிற்பவுருவங்கள் கற்களின் மீது வெகுதிறமையுடன் செதுக்கப் பட்டுள்ளன; இவற்றை இலங்கையினரும் முன்மாதிரியாகப் பின்பற்றினரென்பது ஈசுரமுனியாவிலே வெட்டப்பெற்ற அசுவ-மானிட சிற்ப உருவங்களிலே நாம் காணுதல் கூடும். இலங்கையிலே, நாளந்தா வென்னு மிடத்திலே கட்டப்பட்டுள்ள மண்டபமும் பல்லவக் கட்டட மாதிரியேயாகும்.

**சோழர்.**

பல்லவர்கள் ஆதித்தனாற் தோற்கடிக்கப்பட்ட பின்னர், தென்னிந்தியாவிலே தலைமைபெற்றிருந்தவர் சோழவரசர்களே. ஆனால் சோழ சக்கராதிபத்தியம் பாண்டிய மன்னனால் உடனே அங்கீ



நாளந்தாவிலுள்ள சேடிகை (மண்டபம்.)

கரிக்கபடவில்லை. பராந்தகச் சோழன் பாண்டியர் மீது போர் தொடுத்தான். இவ்விரு தென்னிந்திய அரசருள்ளும் சமநிலை யேற்படுதற்பொருட்டு, பலவீனரான பாண்டியருக்குச் சிங்களவரசனுன 5-ம் காசியபன் (கி.பி. 913—923) உதவிபுரிந்தான். இதற்குச் சிலவாண்டுகளுக்குப் பின்னும் பராந்தகச்சோழன் பாண்டியர்மீது படையெடுத்துச்சென்று வெற்றியடைந்தான். தோல்வியடைந்த பாண்டியவரசன், காசியபனுக்குப்பின் முடிசூடிய தப்புலனுடைய (கி. பி. 923—934) உதவியை நாடி இலங்கைக்கு வந்தான். ஆனால், இலங்கையிலே உள்நாட்டுப் போர் நடந்தமையினுல் உதவி பெருது, தன் முடியை இலங்கையிலே வைத்துவிட்டுக் கேரள நாடு சென்ருன். இம்முடியை அபகரித்தற்பொருட்டு கி. பி. (945—953) ஆண்டுகளிலே ஆட்சிபுரிந்த 3-ம் உதயன் காலத்திலே பராந்தகன் இலங்கையின்மீது படையெடுத்தானுயினும் இலங்கையை வெல்லாமலே திரும்பிச் சென்ருன்; இவ்வாறு திரும்பியதற்குக் காரணம், அவனுடைய சேனைகள் இந்தியாவிலே ராஷ்டிரகூட வரசனுன 3-ம் கிருஷ்ணனுல் தோற்கடிக்கப்பட்டமையும், கிருஷ்ணன் காஞ்சிநகரையும் தஞ்சாவூரையுங் கைப்பற்றியமையுமாயிருக்கலாம். இதுதான் தக்க தருணமென சோழ இராச்சியத்தி னெல்லைப்புறங்களை உதயன் தாக்கலானுன். 2-ம் பராந்தகன் பின்னொரு காலத்திலே இலங்கையின்மீதே எடுத்த படை யெழுச்சியானது, கி. பி. 956—972-ம் ஆண்டுகளிலே அரசுபுரிந்த 4-ம் மிகுந்துவினுற் தோற்கடிக்கப்பட்டது. இவன் (4-ம் மிகுந்து) கலிங்கநாட்டு அரச கன்னிகையை மணஞ்செய்தான். இச்சமயத்திலே கலிங்கத்தின் மீதும் சோழர் படையெடுப்ப ரென்றெண்ண இடமிருந்தது;

மேலே குறித்த மணத்துக்கும் இதுவே காரணமா யிருந்திருக்கலாம்.

பத்தாம் நூற்றுண்டிலே சோழவரசரின் வலிமை குறைந்திருந்தமையினுலும் அவர்கள் பராக்கிரமம் பொருந்திய ராஷ்டிரகூட மன்னர்களிடமிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்ததினுலும் அவர்கள் இலங்கையின் மீது படையெடுத்தபோது, சிங்களர் தம்மைத் தற்காத்துக் கொள்ள முடிந்தது. 973-ம் ஆண்டிலே ராஷ்டிரகூடர், மேற்கத்திய சாளுக்கிய மன்னனுன 2-ம் தைலபனுற் ருேற்கடிக்கப்பட்டனர். மேற்கத்திய சாளுக்கியருள்ளே, அரசுரிமை ஓர் வம்சத்திலிருந்து இன்னேர் வம்சத்துக்கு மாறியபோது, 1000-ம் ஆண்டிலே இராசராசசோழன், மைசூரிலே ஓர் பகுதியைக் கைப்பற்றி, வேங்கி நாட்டரசுக்குரிமைபெற்ற விமலாதித்தனுக்குத் தன் மகளையும் ஒத்தாசையையுங் கொடுத்தது கீழ் சாளுக்கியரின் ஒத்தாசையைப் பெற்ருன். இவன் பாண்டியனையுஞ் சேரனையுங் கீழ்ப்படியச்செய்து 1003-ம் ஆண்டளவிலே இலங்கையின் மீது படையெடுத்தான். இத்தருணத்திலே 5-ம் மிகுந்துவின் மலையாள கூலிச்சேனை கலகஞ் செய்ய, மிகுந்து, ராஜரட்டைப் பிரதேசத்தை மலையாளக் கன்னட, சிங்கள, படைவீரரிடம் விட்டு உருகுணைக்கு ஓடிவிட்டான். 1017-ம் ஆண்டிலே மிகுந்து தோல்வியுற்று, இராசராசனுடைய மகன் 1-ம் இராசேந்திர சோழனுற் சிறைபிடிக்கப்பட்டு தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட, அங்கே அவன் இறந்தான். இதன்பின்னர் இலங்கை, சோழ ராச்சியத்தின் ஓர் பகுதியாயிற்று; உருகுணையிலே சுயேச்சாதிகாரிகளா யிருந்த சிங்களரால் தாக்கக்கூடாத வசதிபெற்ற பொலன்னறுவை,

சனநாதபுரம் என்னும் மறு நாமத்துடன் சோழரின் இலங்கை இராச்சியத்துக்கு முக்கிய பட்டினமாயிற்று.

சீனம்.

இக்காலத்திலே, இலங்கை அந்நிய நாடுகள் பலவற்றுடன் நேரான தொடர்புபெற்று விளங்கியது. அவற்றுளொன்று சீனமாகும். சீனமும் இலங்கையும் பௌத்த சமயத்தைத் தழுவினமையினாலே இரண்டுக்கும் பொதுவாக ஒரே சமயமிருந்தது. கி.மு. 206 முதல் கி.பி. 220 ஆண்டுவரையிலே சீனத்தை யாண்ட ஹான்வம்ச அரசர் காலத்திலே,—முக்கியமாக கி. மு. முதலாம் நூற்றாண்டிலே—பௌத்த சமயம் அந்நாட்டிற் பரவியது. அக்காலமுதலாக, சீன யாத்திரிகர் பலர், பௌத்த புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கவும், பௌத்த சமய நூல்களைப் பிரதி பண்ணவும், இந்தியாவுக்கு வந்தனர். இவர்களிலொருவரான பாகியன் என்பார் கி. மு. 412-ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்து ஈராண்டுகாலந் தங்கியிருந்தார். சிங்கள வாசர்களும் ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலே, அனேகமாய் சமய சம்பந்தமான விஷயங்களுக்காகச் சீனத்துக்குத் தூதனுப்பினர். எட்டாம் நூற்றாண்டிலே (கி.பி. 618—907) தாங்கு வம்ச மன்னராட்சியிலே சீனம் மகோன்னத நிலைபெற்று விளங்கியது. அப்போது இலங்கையிலிருந்து பிக்குக்களும் பிக்குணிகளும் புறப்பட்டுச் சீனத்தைத் தரிசித்தனர். பின்னவர் சீனத்திலே பிக்குணிசங்கம் தாபிக்கச் சென்றனர். சுங்கு வம்சத்தினர் (கி. பி. 960—1280) ஆளத் தொடங்கிய பத்தாம் நூற்றாண்டு முதலாக, இத்தீவுக்கு வந்த மேனாட்டு வணிகருடன் வியாபாரஞ் செய்தற்பொருட்டு சீனப்படகுகளும் இங்கு வரலாயின.

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-90

மேனாட்டு வியாபாரம்.

இலங்கை புராதனகால முதலாகவே மேனாட்டுத்தேசங்களுடன் வியாபாரஞ் செய்துவந்தது. கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முன்னரே இந்தியாவின் தென்மேற்குப் பிராந்தியங்களுக்கு வியாபாரத்தின்பொருட்டு வந்த அராபியர், இலங்கையோடு வர்த்தகஞ் செய்தனரோ வென்பதைத் திட்டமாகக் கூறுதலியலாது. மற்று, இரண்டாம் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலும் கிரேக்க வணிகர் இத்தீவுக்கு வந்தனரென்க. பைசாந்தியம் என்னும் நகரை, கொன்ஸ்டண்டிநோப்பில் என்னும் புதுப் பெயருடனே உரோம சக்கராதிபத்தியத்தின் தலைநகராகச் செய்த கொன்ஸ்டண்டைன் என்னும் உரோம சக்கரவர்த்தி காலந் தொடக்கம் (கி.பி. 323—377) வியாபாரம் மீண்டும் அதிகரித்தது.

இலங்கையோடு வாணிபஞ் செய்ய வந்தவருள் இன்னொருவர், பாரசீகக் குடாவிலிருந்து கப்பலேறிவந்த பாரசீகர்களாவர். இவர்கள் ஸோராதுஸ்தர் என்பவரைத் தம் குருவாகக் கொண்ட சாதியாளர்; இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பார்சி சாதியினர் இன்னும் இவரையே தங் குருவாகக் கொண்டுள்ளனர். ஆனால் இலங்கைக்கு வந்த பாரசீகரோ, நெஸ்தோரிய கிறிஸ்தவப் பிரிவினரைச் சார்ந்தவராவர். புத்தருடைய அவதாரத்தைப்பற்றி ஹீனயான பௌத்த சமயிகளும் மகாயான பௌத்த சமயிகளும் மாறான கொள்கைகளைக் கொண்டிருந்தவாறு, கிறிஸ்துவின் திரு அவதாரத்தைப்பற்றி நெஸ்தோரிய கிறிஸ்தவருக்கும் ஏனைய கிறிஸ்தவருக்கும் கொள்கைகளிலே வேறுபாடேற்பட்டிருந்தது. இந்தியாவின் தென்மேற்குப் பிராந்தியங்களிலே வியாபாரம் நடாத்திய பாரசீகரும், திருவிதாங்

கூரைச் சார்ந்த சீரிய கிறிஸ்தவ திருச்சபையினரும் இக் காலத்தவரே.

ஏழாம் நூற்றாண்டிலே, பாரசீகம் முகம்மதியரால் பிடிக்கப்பட்ட பின்னர், அந்நாட்டினர் இலங்கையோடு செய்து வந்த வாணிபம் நின்றுவிட்டது. முகம்மது கி. பி. 632-ம் ஆண்டிலே உயிர்நீத்தற்கு முன்னே அரேபியா முழுவதுக்கும் அதிகாரியானார். அவருக்குப் பின்வந்த காலிப்புக்கள், தங் குருவான முகம்மது இறந்து பத்தாண்டு கள் கழியுமுன், சீரியா, எகிப்து, பாரசீகம், என்பவற்றை வென்றனர். கி. பி. 638-ம் ஆண்டிலே அவர்கள் அலெக் சாந்திரியாவைப் பிடிக்கவே, இலங்கை பைசாந்திய சக்க ராதிபத்தியத்தோடு நேராகச் செய்துவந்த வியாபாரம் தடைபட்டுவிட்டது; இதனாலே, இலங்கைக்கும் அரேபியாவி லுள்ள யேமன் என்னும் பிரதேசத்துக்கும் வியாபாரத் தொடர்புண்டாயது. பத்தாம் நூற்றாண்டு முடியுமுன்னரே, அராபியர் ஓர் வியாபாரத் தலத்தைக் கொழும்பிலே தாபித்து விட்டனர்.

---

பைசாந்தியம் என்பதை உரோம சக்ராதிபத்தியத்தின் தலைநக ராகக்கொண்ட யஸ்தீனியன் என்னும் இன்னோர் சக்கரவர்த்தியே (கி.பி. 527—566) அக்காலத்திய நீதிச் சட்டங்களெல்லாவற்றை யும் ஒழுங்குபடுத்தினன். இந்நீதிச் சட்டமே பிற்காலத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுற் பின்பற்றப்பட்டன; அவையே ஒல்லாந்தரால் இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டன வென்க.

## ஐந்தாமதிகாரம்

# பொலன்னறுவைக் காலம்

*சோழர் வெற்றி யடைந்த கால முதலாக மாகன் வரையிலும்.*

சோழமன்னர் இலங்கையை வென்ற காலந்தொடக்கம் கலிங்கநாட்டு மாகனுடைய அரசாட்சி முடியும்வரையிலே, பொலன்னறுவையே இலங்கையின் தலைமைப் பட்டினமாக விளங்கியது; எனவே இக்காலப்பகுதியை (கி. பி. 1017—1235) பொலன்னறுவைக் காலப் பகுதியெனல் தகும். சிங்களமன்னர் மிகச் சிறந்தவரிருவர் இக்காலத்திலே அரசுபுரிந்தனர். இவர்களி

---

பொலன்னறுவையைத் தலைநகரமாக்கினமை இரு காரணங்களினாலிருக்கலாம். கமத்தொழில் நடைபெறு மிடத்துக்கு மத்திய இடமென்னுஞ் சிறப்பினாலே, பொலன்னறுவை அனுராதபுரத்தினும் முக்கியமாயிருந்தது. உருகுணையிலிருந்து படைகள் வரக்கூடாத இடத்திலே அஃதிருந்தமையினாலே (உருகுணையில் சிங்களர் தனியரசு செலுத்தினர் என்பதை நாம் அறிதல்வேண்டும்) இந்தியாவிலே தம்மை எதிர்க்கக் கூடியவர் எவருமில்லை யென்பதை அவர்கள் நன்கறிந்திருந்தமையினாலும், சோழருக்கு அனுராதபுரத்தினும் பொலன்னறுவையே முக்கியமானதா யிருந்தது. பொலன்னறுவையிலிருந்த சிங்கள அரசர் சோழர்களை நாட்டினின்றும் துரத்திய பின்னர், உருகுணை வேந்தரோடுப் பலகாலும் போரிட்டபோதிலும், தென்னிந்தியாவிலிருந்து ஒருவிதக் கஷ்டமுமடையவில்லை என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும்.

லொருவனுன 1-ம் விசயபாகு, ஆரம்பத்திலே மலயநாட்டதிபனுக இருந்து, இறுதியிலே இலங்கையைச் சோழராட்சியினின்றும் நீக்கி இத்தீவு முழுவதும் அரசுபுரிந்தான். இன்னொருவனுன மகா பராக்கிரமபாகுவும் இலங்கைத்தீவு முழுவதுமாண்ட மன்னனு யிருந்ததோடு, தென்னிந்தியா, பேகு என்னுமிரண்டின்மீதும் படையெடுத்தான். மற்றும், அவன் சிறந்த அரசியல் முறையை ஏற்படுத்தி நீர்ப் பாசனக்கான பல கருமங்களைப் பெரிதும் புரிந்ததினுலே, கமத்தொழிலை அபிவிருத்தி செய்தான்; இதோடு பௌத்த இலக்கிய நூல்களை யெழுதுவார்க்கு உற்சாக முண்டாக்கியும், மடங்கள், ஆலயங்கள் என்பவற்றை நிருமாணித்தும் பௌத்த சமயத்தைப் பரவச் செய்தான். இக்காலப் பகுதியின் ஆரம்பத்திலும் அந்தத்திலும் தென்னிந்தியப் படையெழுச்சிகள் நடைபெற்றன. இதுமுதலாகத் தென்னிந்திய விஷயங்கள் மேன்மேலும் இலங்கைச் சரித்திரத்தைப் பாதிக்கலாயின.

அரசியற் சரித்திரம். சோழராட்சி.

கி. பி. 1017—1070 ஆண்டுகளுக்கிடையே சோழவரசர் ராஜரட்டை, தட்சிணதேசம் என்பவற்றை ஆண்டனர். வடக்கே கலாஓயாவும் தெற்கே களுகங்கையும் இப்பிரதேசத்தி னெல்லைகளா யிருந்தன. 1-ம் இராசேந்திரசோழன் (கி. பி. 1017—1042 பேகுவையும் கலிங்கத்தையும் வென்றும், மலயதீபகற்பம், சுமாத்திரா என்பவற்றின்மீது படையெடுக்கச் சேனைகளை அனுப்புவித்தும் வந்தானுயினும், உருகுணையைத் தனதாக்குதற்குத் தீவிர முயற்சி செய்யவில்லை. அவனுடைய மகனுன இராசாதிராசன் (1042—1082), 5-ம் மிகுந்தனுடைய மகனும் உருகுணை மன்னனுமான விக்கிரமபாகுவையும்

(கி. பி. 1029—1041) தென்னிந்தியாவிலே விக்கிரம பாண்டியனையும் (கி. பி. 1044--1047) வீரசாலமேகனையும் (கன்னோசி மன்னனான ஜகத்பாலன் கி. பி. 1047—1051) வல்லப மதன ராசன் என்பவனையும் தோற்கடித்ததாக விருது கூறினான்; ஆனால் இவன் காலத்திலேதான் பாண்டியரும் சேரரும் கலகம் விளைத்தனர் ; இவனையே மேற்கத்திய சாளுக்கிய வரசனான சோமேசுவரன் கி. பி. 1052-ம் ஆண்டிலே போரிலே முறியடித்தான்.

ஆனால் உருகுணை மாத்திரம் சோழராட்சிக்கு எக்காலத்தும் உட்படவில்லை. மற்று, சோழர் படையெழுச்சி, சிங்களரின் எதிர்ப்பு என்பவற்றினாலும், அரசுக்குப் போரிட்டவராலும் இப்பிரதேசம் ஓர் போர்க்களமாகவே இருந்ததெனலாம். இதன் தலைநகரமும், தேசநிலைமைக்குத் தக்கபடி இடம் மாறியது. கழுத்துறை, கதிர்காமம், கினிகங்கையின் மேற்பாகத்திலிருந்த தம்பலகமம், வளவைக்கங்கையின் கீழ்ப் பாகத்திலுள்ள மகாநாககுளம் என்னும் பல நகரங்கள் வெவ்வேறு சமயங்களிலே வெவ்வேறு மன்னரின் தலைநகரங்களாக விளங்கின.

**1-ம் விசய பாகு (1070—1114).**

சிங்கள அரச குடும்பத்தைச் சார்ந்த 1-ம் விசயபாகு என்பவனாலே சோழர்கள் கி. பி. 1070-ம் ஆண்டிலே கடைசியாக இலங்கையினின்றும் துரத்தப்பட்டனர். கீர்த்தி என்னும் இயற்பெயர் பெற்ற விசயபாகு முதலில் மலயநாட்டைத் தனதாக்கினான். பின்னர் 1059-ம் ஆண்டிலே அரசனான கேசதாது காசியபனைப் போரிற் தோற்கடித்துக் கதிர்காமத்தைப் பிடித்துத் தானே உருகுணையின் மன்னனாக முடிசூடினான். இதற்குப் பின்னர்

சோழர், 1062-ம் ஆண்டிலே இந்தியாவிலே சாளுக்கியரைத் தோற்கடித்த பராக்கிரமம் பொருந்திய வீரராசேந்திரன் என்பவனுடைய தலைமையிலே விசயபாகுவின்மீது போர்தொடுத்தனர்; அவனோ இவர்களினின்றும் தப்புதற்காக இலேசிலே படைகள் செல்லக்கூடாத மலயநாட்டினுட் புகுந்தான். சோழர்கள் ராசரட்டைக்குச் சென்றபின்னர் விசயபாகு தம்பலகமத்தைத் தன் இராசதானியாக்கினான்; ஆனால் ராஜரட்டையிலே யிருந்த கலகக்காரரை யடக்க சோழ சேனையொன்றனுப்பப்பட்டபோது, அவன் தம்பலகம் விட்டு நீங்கி, உருகுணையின் வடமேற்குப் பகுதியிலேயிருந்த பளுத்தகிரிக்கும் பின்வாங்க வேண்டியிருந்தது. அவன் தன்னை துரத்திய சேனையைத் தோற்கடித்து, அங்கிருந்துகொண்டே சோழரை இலங்கைத்தீவிலிருந்தும் முற்றாகத் தொலைத்தற்கான ஏற்பாடுகளைச் செய்யலானான். அவன் ஓர் படையுடன் பொலன்னறுவை நோக்கி சென்றபோழ்து, அனுராதபுரத்தைப் பிடிக்கும்படி ஓர் படைத்தலைவன்கீழ் அனுப்பப்பட்ட சேனை, சோழப் படையினால் தோற்கடிக்கப்பட்டது; இதையறிந்த விசயபாகு நான்குகோறளைகளிலிருந்த வாதகிரி (இதனை வாகிரிகலை என்பதுமுண்டு) க்குப் பின்வாங்கினான். ஆனால் அவனுக்கு விரோதமாக அண்மையிலிருந்த புத்தலையென்னும் ஊரிலே கலகமேற்பட, அவன் வாதகிரியையும் விட்டோட வேண்டியிருந்தது. கலகம் அடக்கப்பட்ட பின்னர், அவன் முதலிற் தம்பலகமத்திலிருந்தும், பின்னர் மகாநாககுளத்திலிருந்தும் ஆட்சிபுரிந்தான்.

சோழவரசனான வீரராசேந்திரன் கி. பி. 1069-ம் ஆண்டிலே இறந்தான்; பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் முதலாம் குலோத்துங்கன் (கி. பி. 1070—1118) என்னும்

கிழக்கத்திய சாளுக்கிய வரசனாற் றோற்கடிக்கப்பட்டான். சோழவரசன் இவ்வாறு போரிட்டுக்கொண்டிருக்க, சோழரை இலங்கையினின்று துரத்தி யோட்டுதற்காக விஜய பாகு இன்னோர் யத்தனஞ் செய்தான். அவனுடைய சேனைகளிலொன்று மகாநாக குலத்திலிருந்து புறப்பட்டு தட்சிண தேசத்தினூடே சென்றது; இன்னோர் சேனை, மகாவலி கங்கை யோரமே சென்ற வழமையான பாதை யைப் பின்பற்றியது. இச்சேனைகள் சோழர் படைகளைத் தோற்கடித்து அனுராதபுரத்தையும் பொலன்னறுவை யையும் கைப்பற்றின. விஜயபாகு, பொலன்னறுவை யைத் தலைநகராக்கி அதற்கு விஜயராஜபுரம் என்னும் நாமஞ் சூட்டினான்.

இதற்குப்பின்னர் கி. பி. 1114-ம் ஆண்டுவரையிலே விஜயபாகு இலங்கையின் ஏக சக்கராதிபதியாக அரசு புரிந் தான்; ஆனால் அவனாட்சி முற்றாக சமாதான முள்ளதாக இருக்கவில்லை. ராஜரட்டை, தட்சிணதேசம், மலயநாடு, உருகுணை என்னும் பிரதேசங்களிலே யுண்டான கலகங் களை அவன் அடக்கவேண்டி யிருந்தது. அவனனுப்பிய தூதர்கள் மேற்கத்திய சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் விக்கிரமாதித்த மன்னனால் துன்புறுத்தப்பட்டபோது, சோழர்மீது படையெடுத்தற்கான ஏற்பாடுகளைச் செய்தான்; ஆனால், வேலைக்காரர் என்னுந் தன் படை வகுப்பினரிடையே கலகம் ஏற்பட்டமையினால், அவன் அவ்வாறு செய்ய இயலாது போயிற்று. மேலும் இதனாலே அவன் இன்னோர் முறை வாகிரிகலைக்கு ஓடிப்போய், பொலன்னறுவையை மீண்டும் பிடிக்கும்வரையில் அங்கேயே தங்கும்படி யாயிற்று.

விஜயபாதுவுக்குப் பிந்திய மன்னர்.

விஜயபாகுவின் மரணத்துக்குப் பின்னர் சிங்கள இராச்சியம் இன்னோர்முறை சிதைவடைந்தது. அவனுக்குப்பின் அவனுடைய உடன் பிறந்தவனான ஜயபாகு முடிசூடினான். இவனுடைய சகோதரியும் பாண்டிய சிற்றரசன் மனைவியுமான மித்திரை என்பாளின் புத்திரர் இவனுக்கு ஒத்தாசையாக இருந்தனர். இவனுக்குப் பின் அரசுக் குரியவன் விஜயபாகுவுக்கும் கலிங்க இராசகுமாரிக்கும் பிறந்த விக்கிரமபாகு என்பவனாவன்; வழக்கப்படி அவனே இளவரசனும் தட்சிணதேசத்து அதிபதியாகவுமிருந்திருத்தல் வேண்டும். ஆனால் மித்திரையின் மூத்த மகனான மானாபரணன் என்பான், கீர்த்திஸ்ரீமேகன், ஸ்ரீவல்லபன் என்னும் தன்னிரு சகோதரர்களுடன் தட்சிண தேசத்தைக் கைப்பற்றி, அக்காலத்திலே உருகுணையை யாண்டுவந்த விக்கிரமபாகுவை எதிர்த்தான். ஆனால் அவனே இவர்களை வென்று ஜயபாகுவை சிங்காதனத்தினின்றும் நீக்கி, ராஜரட்டையின் மன்னனானான். மானாபரணனே, தட்சிணதேசத்தின் தலைநகரான புங்ககாமாவிலிருந்து அரசு புரிந்தான். (இப்புங்ககாமா வென்பது இப்போது தெடிகமவை எனக் கூறப்படுகின்றது.) அவனுடைய இரு சகோதரர்களும் உருகுணையைத் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். வளவை கங்கைக்கு மேற்கேயிருந்த உருகுணைப் பிரதேசத்தை (தெலொசதககரட்டையை) மகாநாககுலத்திலிருந்து ஸ்ரீவல்லபனும், உருகுணையின் கீழ்ப்பகுதியான அடதககரட்டையை உத்தந்துவரையிலிருந்தும் ஆண்டனர். (இது ஒருவேளை மோனராகலைக் கருகேயுள்ள கலபதை என்னுமூ ராயிருத்தல் கூடும்.)

மூன்று சகோதரரும் ஒன்றுகூடி மீண்டு மொருமுறை விக்கிரமபாகுவை எதிர்த்தனராயினும், அவர்கள் போதிசேன பர்வதத்தி னருகே முறியடிக்கப் பட்டதோடு, களனிப் பகுதி நோக்கி யோடும்போது பின்தொடரப்பட்டனர். இதுவே தக்க சமயமென வீரதேவன் என்னும் இந்திய வீரன் இலங்கையின்மீது படையெடுத்தான். அவன் மன்னருக் கருகே வெற்றி யடைந்து, பொலன்னறுவைக்குச் சென்று அதனைப் பிடித்து அங்கே தங்கி யிருந்தான். ஆரம்பத்திலே, மகாவலிகங்கையின் அக்கரையிலிருந்ததாக சொல்லப்படும் கோத்தசாரை என்னு மிடத்துக்கு விக்கிரமபாகு பின்வாங்கினபோதிலும், இறுதியிலே வீரதேவனைத் தோற்கடித்து, மீண்டும் ராஜரட்டையை யாண்டான்.

மானாபரணனுடைய மரணத்தினாலே அவனுடைய சகோதரனான கீர்த்திஸ்ரீமேகன் இளவரசனும் தட்சிண தேசத் ததிபதியுமானான்; ஸ்ரீவல்லபன் உருகுணை முழுவதையு மடைந்தான். இரண்டாம் விக்கிரமபாகு 1137-ல் இறக்க, அவனுடைய மகனான இரண்டாம் கஜபாகு முடிசூடினான். கீர்த்திஸ்ரீமேகன், ஸ்ரீவல்லபன் என்னுமிரு சகோதரரும் கஜபாகுவை யெதிர்த்தபோதிலும், ராஜரட்டையைப் பெற முடியவில்லை.

## வம்சவிருட்சம்



ஓர் புதியவன் இப்போது பிரதானமாக விளங்கினான்.

58. 1-ம் பராக்கிரம பாகு. (கி. பி. 1137—1186.)

மானாபரணனுடைய புதல்வனான பராக்கிரமபாகு, தன் தகப்பனார் இறக்குங் காலத்திலே, சிற்றப்பனான ஸ்ரீவல்லபனுடன் மகாநாககுலத்தில் வசித்துவந்தான். சிறிதுகாலத்துக்குப் பின்னர் அவன் தட்சிணதேசத்துக்கு வந்து சங்கத்தலி என்னுமிடத்திருந்து அரசாண்ட கீர்த்திஸ்ரீமேகனுட னிருந்தான். சீக்கிரத்திலே அவன் தன் சிற்றப்பனுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்து அவனுடைய சேனாபதியை படலத்தலி (இப்போது படலகோடை எனப்படுவது) என்னுமிடத்திலே தோற்கடித்தான். பிறகு அவன் புத்தகாமா (மாத்தளைப் பிரிவில் மாணிக்கதேனை யென இப்போது வழங்குவது) என்னுமிடத்திலே சிற்றப்பனுக்கு ஒத்தாசையாக வந்தவரை முறியடித்து கலாவெவ என்னுமிடத்திலே கஜபாகுவின் படைத்தலைவனோடு சதியாலோசனை செய்தான். தன்னை யெதிர்க்கச் சிற்றப்பன் அனுப்பிய சேனைகளை அவன் தோற்கடித்து, கஜபாகுவுக்குத் தன் சகோதரியை மணம் புரிந்து, அவனோடு தங்கியிருந்தான். ஆனால் இந்நட்பு நீடித்திருக்க வில்லை. அவன் கீர்த்திஸ்ரீமேகனுடன் சமாதானஞ் செய்துகொண்டு மீண்டும் அவனோடு தங்கி யிருந்து அவன் இறந்த பின்னர், தட்சிண தேசத்துக்கு அரசனானான்.

இலங்கையின் ஓர் பகுதிக்கு மாத்திரம் அரசனாயிருப்பதோடு பராக்கிரமபாகுவின் ஆசை தீரவில்லை, எனவே, ஓராண்டு காலத்துக்கு சாக்கிரதையாக ஏற்பாடுகள் செய்த பின்னர், மலயநாட்டை வசப்படுத்தத் தன் படைத் தலைவருள் ஒருவனை அனுப்பினான். கஜபாகு அனுப்பிய சேனைகளை இப்படைத்தலைவன் தோற்கடித்து, நாட்டை

வென்ற பின்னர், பராக்கிரமபாகு போர் தொடங்கினன். அவனுடைய சேனைகளிலொன்று, கலாஓயாவின் முகத்துவாரத்தினூடே உள்நாடு சென்றது; இன்னேர் படை, தும்பறையிலிருந்து புறப்பட்டு லக்கல பிரிவிலுள்ள போகம்பறை வழியேயும் அம்பனையினூடேயும் அலகரைப் பிரிவினுட் பிரவேசித்தது. மூன்ருஞ் சேனை அனுராதபுரத்தைப் பிடித்து அங்கேயே தங்கியிருந்தது. கஜபாகு அனுராதபுரத்தைப் பிடிக்கமுயன்றும் சித்தி பெறவில்லை. ஆனல் பராக்கிரமபாகு நாளந்தாவிலிருந்து பொலன்னறுவைக்குத் தன் சேனைகளுடன் செல்லுமுன்னே, அலகரைப் பிரதேசத்தைச் சயிக்கவேண்டி யிருந்ததிலிருந்து, இரண்டாம் சேனையுடன் போரிட்டதில் கஜபாகு வெற்றி பெற்றிருக்க வேண்டு மென்றெண்ண இடமுண்டு. ஈற்றிலே கஜபாகு சிறைபிடிக்கப்பட்டானெனினும், அப்போது உருகுணைக் கதிபனுயிருந்த ஸ்ரீ வல்லபனுடைய மகனுன மானுபரணனென்பான் கஜபாகுவுக்குதவி புரிய வந்து பராக்கிரமபாகுவைத் தோற்ருேடச் செய்தான். ஆனல் இம்மானுபரணன் கஜபாகுவை மிகவும் மரியாதையற்ற வகையில் நடத்தினமையினுலே, பராக்கிரமபாகுவின் உதவியைக் கஜபாகு நாடினுன். பராக்கிரமபாகுவின் படைத்தலைவன் மீண்டும் பொலன்னறுவையைப் பிடித்து, கஜபாகுவைச் சிறையிலிருந்து விடுவித்தபோது, மானுபரணன் உருகுணைக்குத் தப்பியோடினுன். கஜபாகு மீண்டு மொருகால் பராக்கிரமபாகுவோடு போர் புரிந்தபின்னர், இருவேந்தரும் தமக்குள் ஒப்பந்தஞ் செய்துகொண்டனர். அதாவது அவரவர் தத்தம் இராச்சியத்தை யாண்டு வரவேண்டும்; ஒருவனிறந்த பின்னர், அவனுடைய இராச்சியத்தையும் மற்றவனே ஆட்சிபுரிதல் வேண்டும்.

கஜபாகு 1153-ம் ஆண்டிலே இறக்க அவனுக்குப் பின் மானுபரணனும் அரசனுருகுமுரிமை தனக்குமுண்டென கூறினமையினுல், பராக்கிரமபாகு உடனே ராஜரட்டை யின் மன்னனுதல் இயலாதிருந்தது. போர் மூளலும், மகா வலிகங்கையைத் தாண்டிவர மானுபரணன் முயன்றமையி ஞலே அதனைத் தடுக்க முயன்ற பராக்கிரமபாகுவின் சேனை யோடு அந்நதிக்கரையி னேரமே யுத்தம் நடைபெற்றது. பராக்கிரமபாகுவோ, உருகுணையின் வடமேற்குப்பாகத்திலே புகுந்து அங்கிருந்தும் மானுபரணனைத் தாக்குவானுயினுன். ஆனல், நாராயணன் என்னும் அவனுடைய சேனைத்தலைவன் கலகஞ் செய்தலும், அதனை யடக்குதற்காகப் பராக்கிரம பாகு தன் சேனையினேர் பகுதியை உருகுணையிலிருந்து வருவிக்க வேண்டியிருந்தது. இதுவே தக்க சமயமென்று மானுபரணன் ஆற்றைக் கடந்தானுயினும் பராக்கிரம பாகுவின் சேனையினுற் ருேற்கடிக்கப்பட்டான். ஆனல், இன்னேர் முறை செய்த முயற்சியிலே அவன் சித்தி யடைந்தான். எவ்வாறெனில் அவன் பராக்கிரமபாகுவைப் பொலன்னறுவையினின்றும் ஓட்டி, களனிபுறமாக ஓடும் போதுப் பின்தொடர்ந்தான். தன் சிங்காதனத்தைப் பெறு தற்கு பராக்கிரமபாகு இன்னேர்முறை முயன்று மானு பரணனுடைய படைகளை கலாவெவவிலே முறியடித்துப் பொலன்னறுவையி னருகாமையிலே ஆறு மாத காலம் போர் புரிந்தபின்னரே, மானுபரணனை முற்றுகத் தோற்கடித்தான். தோல்வி யடைந்த மானுபரணன் உருகுணைக்கு ஓடி, அங்கே சிறிது காலத்திற்குப்பின் உயிர் நீத்தான்.

இஃதிவ்வாருயினும், உருகுணையிலிருந்த சிற்றரசர் சிலர் பராக்கிரமபாகுவின் ஆதிக்கத்தை அங்கீகரிக்கவில்லை.

ஆகையினாலே, அவர்கள் மானாபரணனுடைய அன்னையான சுகலையினுதவியுடன் 1157-ம் ஆண்டிலே கலகஞ் செய்தனர். இதனை யடக்குதற்கு ஓர் சேனை யனுப்பப்பட்டது; ஆனால் பராக்கிரமபாகுவினிடம் சேவை புரிந்த வேலைக்காரர், கேரள, சிங்கள வீரர் என்பவரிடையே ஏற்பட்ட புரட்சியினாலே, அவனால் உடனே ஒன்றும் செய்ய இயலவில்லை. இதனை யடக்கிய பின்னர், உருகுணைக்குச் சென்ற சேனை மகாவலி கங்கைக்கரையேசென்று, கல்கக்காரரை பிபிலே, மாடகமம், உடுந்துறை, மகாகண்டியவெவ என்னுமிடங்களிலே தோற் கடித்தது. தலதாவும் பிடிபட்டதாயினும், பராக்கிரமபாகு வின் சேனை புத்தளையைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. அப்போது பராக்கிரமபாகு தன் பகைவரை மேற்றிசையி லிருந்தும் தாக்குவானாயினான். கடற்கரையோரமே ஓர் சேனை சென்று ஜிந்தோட்டை, வலிகமம், தேவுந்துறை, கம்புறு கமவை என்பவற்றைப் பிடித்தது. இன்னொன்று இரக்குவா னவைத் தாண்டி பல்மதுளை மார்க்கமே சென்றது. நெடுங் காலம் போர்நடந்த பின்னர், சுகலை தோல்வியடைந்தாள்; உடுந்துறையும் பிடிபட்டது. இதற்குப் பின்னரும் பராக் கிரமபாகுவின் அதிகாரம் இன்னு மிருமுறை தாக்கப் பட்டது முதலாங் கலகம் 1160-ம் ஆண்டிலே உருகுணையி லும், இரண்டாவது மாதோட்டத்திலும் நடைபெற்றன; ஆனால் இரண்டும் இலகுவில் அடக்கப்பட்டன.

பராக்கிரமபாகுவுக்குப் பின் அரசு புரிந்தோர்.

1186-ம் ஆண்டிலே பராக்கிரமபாகு இறக்க, அவனுடைய மருமகனும் கலிங்கநாட்டவனுமான 2-ம் விஜயபாகு முடிசூடினான். அவனுக்கு பின்வந்த அரசன் நிஸ்ஸங்க மல்லன் என்பவனாவன். இவ்விருவரும், பராக்கிரமபாகுவினால் தண்டிக்கப்பட்டோரைப் பிரீதி

செய்ய முயன்றமையினாலே, கலிங்க கட்சியினரா யிருந்திருக்கலாம். இவர்களுக்குப் பின்னர் ஒன்பதுபேர் ஆண்டனர்; இவர்களைப்பற்றிக் கூறுவதற் கொன்றுமில்லை. ஆனால் இவ்வொன்பதின்மருள் பராக்கிரமபாகுவின் பட்டத்தரசியான லீலாவதி, நிஸ்ஸங்க மல்லனின் இராணியான கல்யாணவதி என்னும் ஸ்திரீகளும் அரசியற்றின ரென்பதையும், அவர்களுக்குப் பின்னர் இரு அந்நியநாட்டுப் படையெழுச்சிகள் ஏற்பட்டன வென்பதையும் நாம் இங்கே குறிப்பிடலாகும். 1211-ம் ஆண்டிலே பராக்கிரமபாண்டு என்பான் தென்னிந்தியாவிலிருந்து வந்து, லீலாவதியை அகற்றி, மூன்றாண்டு காலத்துக்கு ஆட்சிசெய்தான். ஆனால் இவனை மாகன் என்னும் கலிங்கன் அரசிருக்கையினின்றும் நீக்கித் தானே முடிதரித்தான். இவனாண்ட இருபத்தோராண்டுகளிலே பிக்குக்களையும் குடிகளையும் பெரிதும் துன்புறுத்தி அவர்களுடைய செல்வத்தைப் பறித்தான்.

**அரசியல் முறை.** இக்காலத்திய அரசியல் முறை முந்திய காலத்தினதினின்றும் பெரிதும் மாறவில்லை. சோழருடைய பழக்கத்தாலே போலும், புதிதாக ஓர் உத்தியோகம் ஏற்பட்டது. கீர்த்திஸ்ரீமேகன் காலத்திலே தட்சிண தேசமானது இரு அதிகாரி (அதிகாரர்) களால் ஆளப்பட்டு வந்தது; பராக்கிரமபாகு மூன்றாவது அதிகாரி பதவியையும் ஏற்படுத்தினான். துரைத்தனம் பன்னிரண்டு இராசப் பிரதிநிதிகளாலும், சிறு பிரிவுகளிலே அதிகாரஞ் செலுத்திய எண்பத்துநான்கு பேராலும் நடத்தப்பட்டு வந்தது. அரசாட்சியாரின் உயர் பதவிகளையும் பல்வேறு பகுதிகளையும் பராக்கிரமபாகு சீர்திருத்தினானெனக் கூறப்படுகின்றது.

இக்காலத்திலே, அரசனது அந்தரங்க சபையானது, பட்டத்துக்குரிய இளவரசன், மற்றைய அரச குமாரர், சேனுபதி, முக்கியமான சுற்றரசர், கணக்கன், மாகாணுதிபதிகள், பகுதித் தலைவர், பிரதான வணிகர் என்பவர் கொண்டதாயிருந்தது. இச்சபைக்கு என்ன அதிகாரமிருந்ததென்பதை அறியமுடியவில்லை.

போர்.

இந்தியாவிலே சேனைகள், இரத, கஜ, துரக, பதாதி, அதாவது, தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என வகுக்கப்பட்டிருந்தன; இலங்கையிலே இதிலே சிறிது வேறுபாடு காணப்பட்டது. குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்பன சில சமயங்களிற்றான் உபயோகிக்கப்பட்டன. இதற்குக் காரணமென்னையெனின், நாடு வனமடர்ந்திருந்த தன்மையும், கீழ்த்திசைத் (இங்கே நிஸ்ஸங்கமல்லன் இரு மைல்களுக்கோர் கல் நாட்டினுன்) தவிர ஏனைய இடங்களிலே தக்க பாதைகளில்லாமையுமேயாம். சேனுபதிகள் பல்லக்குகளின் மீதிவர்ந்து சென்றனர்; குடையே அவர்களுடைய அதிகாரச் சின்னமாயிருந்தது.

அக்காலத்திலே படைவீரர் உபயோகித்த ஆயுதங்கள் வில்லும் அம்புகளும் (அம்புகளுக்குச் சிற்சில சமயங்களிலே நஞ்சூட்டுவதுண்டு), வாட்களும், குத்துவாட்களும், ஈட்டிகளும், வேல்களும், கதைகளென்னும் பருத்த தடிகளுமாம். வீரர் தம்மைக் காக்க எருமைத் தோலினுலான கேடயங்களை உபயோகித்தனர்.

படைவீரர் அநேகமாய் அவ்வப்பிரதேசங்களிலிருந்து சேர்க்கப்பட்டனர். காசுக்காகப் போர்புரிந்து, தமக்குப் பெரும்பொருள் தந்தோனுக்கு உயிர்விடச் சித்தமாயிருந்த கூலிப்படையினர், மலையாளம், கன்னடம், என்னுமிடங்

களிலிருந்தும் தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வந்தனர். வேலைக்காரர் என்போர், நாட்டின் பற்பல இடங்களிலும் தக்க ஏற்பாடுகள் அமைத்துக்கொண்ட ஓர் வியாபாரச் சங்கத்தினராவர்; இவர்களுடைய தலைமையதிகாரச்சபை மகாராஷ்டிர நாட்டிலிருப்பினும், பிரிவுகள், இலங்கையுட்பட, தனிப்பட்ட நிருவாகசபைகளுடன் பல இடங்களிலு மிருந்தன. இவ்வியாபாரச் சங்கம் ஓரளவுக்குப் போர் புரியும் சேனையாகவே இருந்தது; சோழப்படைகள் சில, வேலைக்காரர் நிறைந்த வகுப்புக்களே. இவர்கள், சோழர் இந் நாட்டிற் குடியேறி ஆட்சி செய்தபோது அனேகமாய் வந்திருத்தல் கூடும். 1-ம் விஜயபாகு, 1-ம் பராக்கிரமபாகு என்போரின் காலத்திலே இவர்கள் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

பொலன்னறுவைபோன்ற நகரங்கள் அரண்களாலும் அகழிகளாலும் பகைவரின் தாக்குதல்களினின்றும் பாது காக்கப்பட்டிருந்தன. தோல்வியடைந்த சேனைகள், தம்மை எளிதிற் காத்துக்கொள்ளக் கூடிய வாகிரிகலை போன்ற மலைக் கோட்டைகளைச் சென்றடைந்தன. கூர்முனையுள்ள தடிகளைத் தரைக்குள் செலுத்தி அவற்றை வேலிபோன்றமைப் பதினாலும், இடையே அகழிகளை வெட்டி, அவற்றுள் கூரான முளைகளையும் முட்களையும் இடுவதாலும் பாசறைகள் நிருமாணிக்கப்பட்டன. கோட்டை கொத்தளங்கள், கோபுரங்கள், சேனைகள், பாலங்கள் என்பவற்றைப் பற்றியும் அக்காலத்து நூல்களிற் குறிப்புகள் காணப்படுகின்றன.

சேனைகள் நதிக்கரையோரங்களையே முக்கிய பாதைகளாகக் கொண்டன. ஓர் நாட்டை வெல்லுதற்கு அவை உதவியதோடு அகழிகளாகவும் உதவின. தென்றிசையிலிருந்த

சேனைகள், அலுட்நுவரை தொடக்கமாக மகாவலிகங்கைக் கரையினூடே செல்லக்கூடுமாயினும், ராஜரட்டையை சார்ந்த படைகளைத் தாக்கும்போது நதியைக் கடப்பதிற் கஷ்டப்பட்டன. இதனாலே, அம்பங்கங்கையின் வடகரையோரமே அணிவகுத்துச் செல்லுதல் கஷ்டமாயிருந்த போதிலும், அவ்வாறு சென்ற சேனையினாலேயே பொலன்னறுவை தாக்கப்பட்டது. கீழ்க்கரையே பிபிலை, மாடகமம், மோனராகலை என்பவற்றின் வழியே தென்றிசை சென்ற சேனைகள் புத்தலையை யடைதற்குக் கும்பகன்ன ஓயாவையும் ஓர் மலைக்கணவாயையுந் தாண்டவேண்டியிருந்ததினாலே, புத்தலைக்கு அருகிலேயே தடுக்கப்பட்டன. இக்காரணத்தினாலே, பல்மதுளை, புலுதோட்டை என்பவற்றைத் தாண்டியாவது கடற்கரை வழியேயாவது சென்ற சேனைகளினாலேயே உருகுணை பெரும்பாலும் தாக்கப்பட்டது. மலைய நாட்டின் தன்மையினாலே—மலைகளும் வனங்களுஞ் செறிந்திருந்தமையினாலே—அப்பிரதேசத்தை வெற்றி கொள்ளுதல் கடினமான காரியமாக இருந்ததென்க.

**கிருஷியும் நீர்ப்பாசனமும்.**

எண்ணிறந்த போர்கள் நடைபெற்றனவாயினும் கிருஷித்தொழில் நன்கு நடைபெற்றது. முதலாம் விஜயபாகு பல ஏரிகளையுங் குளங்களையும் செப்பனிட்டான். பராக்கிரமபாகு தட்சிணதேசத்தை யாண்டபோது, கால்வாய்களினாலே தெதுரு ஓயாவின் தண்ணீரை வயல்களுக்குத் திருப்பினான். பசுதுணை கோறளையிலுள்ள சதுப்பு நிலங்களின் நீரையும் இவனே வற்றச்செய்தானெனக் கூறப்படுகின்றது. இலங்கை முழுவதுக்கும் அரசனாக அவன் முடிசூடியபோது பயிர்த்தொழில் ஓங்குதற்கு இன்னமும் அதிகமாகப் பாடுபட்டான். அவன் பல ஏரிகளைச் சீர்திருத்தி, தற்காலத்

திலே தும்புதுலுவேவ என்னும் ஏரியைத் தோபவேவ வுடன் சேருமாறு செய்ததினாலே பராக்கிரமக்கடல் என்னும் பெயர் பூண்ட பெரிய ஏரியை யுண்டாக்கினான். ஆகாச கங்கை போன்ற கால்வாய்களை வெட்டி, தோபவெவ, கிரித்தலே, மின்னேரியா, கந்தளாய் ஏரிகளை அம்பன்கங்கையோடு சேர்த்தமையினாலே, அப்பிரதேச முழுவதிலும் நீர்ப்பாசன முண்டாகும்படிச் செய்தான்.

பௌத்த சமயமும் இந்து சமயமும்.

இக்காலப்பகுதியி னாரம்பத்திலே, பௌத்த சமயத்திலே மாந்தருக்கு முன்னர்போன்று அதிக ஆர்வங் காணப்படவில்லை. சோழ அரசர்கள் ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு இலங்கையை ஆட்சி புரிந்ததின் பயனாய் இச்சமயம் க்ஷீணநிலை யடைந்தது; இதனாலே தக்க குருபரம்பரை யேற்படுத்துவதற்காக 1-ம் விஜயபாகு, ராமண்ண (பர்மா) விலிருந்து பிக்குக்களை வரவழைக்க வேண்டி யிருந்தது; பௌத்த சங்கத்தையும் சீர்திருத்தவேண்டிய அவசிய மேற்பட்டது. 1-ம் பராக்கிரமபாகுவும் நிஸ்ஸங்க மல்லனும் தகைமையற்ற பிக்குக்களைச் சங்கத்திலிருந்து நீக்கியதோடு, பௌத்த சமயத்தின் மூன்று பிரிவினரான நிகாயர்களுக்குள்ளும் சமரஸ மேற்படுத்தினர். 1-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலே பௌத்த சமயம் மீண்டும் தழைத்தோங்கியது; ஆனல் இக்காலப்பகுதியின் இறுதியிலே கலிங்கனான மாகன் காலத்தில் பௌத்த சமயத்தின் உயர்நிலை குறைந்தது; ஏனெனில் இவன் பௌத்த விக்கிரகம் முதலியவற்றை அழித்துச் சனங்களை இந்துக்களாகும்படி வற்புறுத்தினான்.

இக்காலத்திலேதான் சிவனடிபாதத்துக்குச் சனங்கள் யாத்திரைசெய்வது வழக்கமாயிற்று; சிவனடிபாதமென்பது



பொலன்னறுவையிலுள்ள முதலாம் சிவ தேவாலயம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

புத்தரின் அடிச்சுவடென்றே கருதப்பட்டு வந்தது. ராஜ ரட்டையிலிருந்து சிவனடிபாதத்திற்குச் செல்லும் பாதையிலே யாத்திரிகர் தங்குதற்கான இடங்களை 1-ம் விஜயபாகு ஏற்படுத்தியதோடு, யாத்திரிகருக்கு உணவளித்தற் பொருட்டு இரத்தினபுரிப் பகுதியிலுள்ள கிலிமலை என்னும் கிராமத்தையும் ஒதுக்கி வைத்தான்.

இதற்கு முந்திய சரித்திர காலப்பகுதியின் தொடக்கத்திலே இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட தலதாவை வைத்திருப்பது அரசுரிமையை உறுதிப்படுத்துஞ் செயலாயிற்று; எனவே சிங்காதன மேறுதற்குப் போர்புரிந்த சிற்றரசர் இதனையும் பிட்சைப்பாத்திரத்தையும் தம் வசத்தில் வைத்துக்கொள்ளப் பெரிதும் பாடுபட்டனர். 1-ம் விஜயபாகு கட்டினதாகக் கூறப்படும் சமய சம்பந்தமான இரு கட்டடங்களுள் ஒன்று, புத்தரது பல் வைத்தற்காகக் கட்டப்பட்ட ஆலயமாகும்; இதனை அவனுடைய சேனாதிபதி கட்டி முடித்தான்; இதனையும் இதற்குரிய கிராமங்கள், சிப்பந்திகள், சொத்துக்கள் என்பவற்றையும் செவ்வனே பாதுகாக்குங் கருமம் வேலைக்காரரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

சோழர் இலங்கையிற் றங்கியிருந்த காலத்திலே இந்து சமயம் பெரிதும் போற்றப்பட்டு மேலோங்கியது. நாட்டினின்றும் சோழர் நீங்கியதோடு இந்துசமயத்தின் செல்வாக்கு மறைந்து விடவில்லை. 1-ம் விஜயபாகுவுக்குப் பின் இலங்கையை யாண்ட மன்னர், பாண்டிய அல்லது கலிங்க அரசவம்சத்திற் தோன்றியவராவர்; இவர்கள் இந்து அனுட்டானங்களையும் பழக்க வழக்கங்களையுங் கைக்கொண்டொழுகியதோடு, இந்து தேவாலயங்களையும் கட்டுவித்தனர். சாதிக்கட்டுப்பாடுகளையும் இந்துசமயம், அனுசரிக்கச் செய்தது. சில இலங்கை வேந்தர் மனுநீதி தவறாது அரசு

புரிந்தனரென்றும் கூறப்படுகின்றது. கீழ்ச்சாதியினர் பூசை செய்தற்பொருட்டு 1-ம் விஜயபாகு சிவனடிபாதத்திலே ஓர் தாழ்ந்த படிக்கட்டைக் கட்டுவித்தான். க்ஷத்திரியர்களைத் தவிர பிற சாதியினர் அரசாளுதற் குரியவரல்லர் என நிஸ்ஸங்க மல்லன் எடுத்துக் காட்டினான்.

இக்காலத்திலே அரச இலட்சணங்களைப்பற்றின கொள்கை முன்னிலுமதிகமாக விருத்தியடைந்தது. முற் காலத்திலே அரசன் போதி சத்துவனெனவே கருதப்பட்டு வந்தான். ஆனால் நிஸ்ஸங்க மல்லனுடைய சித்தாந்தப்படி, நடுநிலைமையுள்ள வேந்தனை புத்தனெனவே குடிகள் கருத வேண்டும்; அரசர் மானிட உருவத்தோடு தோன்றினாலும், இந்துக்கள் தம் மன்னரைக் கருதுவதுபோன்று, தேவாம் சம் பெற்றவர்களெனவே கருதுதல் வேண்டும்.

மனைக்கலை, சிற்பம், ஓவியம் என்னுங் கலைகள்.

பொலன்னறுவையை இராசதானியாகக் கொண்டு அரசர் ஆட்சிசெய்த காலத்திலே ஏற் பட்ட சுபிக்ஷ நிலைமை, மனைக்கலை, சிற்பம் ஓவியம் என்னும் அழகுக் கலைகளிலே பெருமுயற்சி யுண்டாக்கியது. மிகப் பெரிய அளவிலே கட்டடங்கள் நிருமாணஞ்செய்ய ஏற்பாடு கள் செய்யப்பட்டன. சரித்திர நூல்களிற் கூறப்பட்டவற் றுள் மிகப் பெரியதும் பொலன்னறுவையி லுள்ளதுமான ஜேதவனமகாசயை என்பதைப் பராக்கிரமபாகு கட்டுவித் தான்; ஆனால் அது இப்போது ஓர் மண்மேடாகவே உள் ளது. அவன் கட்டுவித்த கிரிவிகாரையும் நிஸ்ஸங்க மல்லனாற் கட்டப்பெற்ற ரங்கோட்டு விகாரையும் அளவிற் பெரியன வாயும் அனுராதபுரத்திலுள்ள பெரிய டாகபக்களைப் போன்று அரைகோள வடிவங்கொண்டனவாயும் உள்ளன.



பொலன்னறுவையிலுள்ள கிரிவிகாரை,

இக்காலத்திற் கட்டப்பட்ட விகாரைகள் இலங்கையிலுள்ளவற்றுள் மிகப் பெரியவை; இவை செங்கல்லினாலும், சுண்ணச் சாந்தாலுமானவை. 1-ம் விஜயபாகுவால் கட்டியதோ வென்றெண்ணக்கூடிய தூபராமா டாகப் பொலன்னறுவையிலுள்ளது. தெமலமகாசயைக் கணித்தாயிருக்கும் லங்காதிலகமும், வடதிசையிலிருக்கும் டாகாபவும் பராக்கிரமபாகுவினால் நிருமாணிக்கப்பட்டன. தூபராமாவுக்கு மேலே ஓர்வகை வில்மாடமிருக்கின்றது. அதன் சுவர்களில் மிகச் சிறந்த சீமந்துபோன்ற ஓர்வகைக் கலவை பூசப்பட்டிருப்பதை நோக்கும்போது, இத்தொழில் பெரும் முன்னேற்றத்தை அடைந்ததென்பது தெளிவாகின்றது. இம்மூன்று கட்டடங்களும் அனுராதபுரத்திலே ஜேதவனாராம டாகபவுக்கு மேற்கேயுள்ளவற்றின் மாதிரியாகவே யுள்ளன. வடதிசையிலுள்ள ஆலயத்திலே சீமந்துச் சுண்ணாம்புச் சுவரின்மேலேயே பல சித்திரப் படங்கள் வரையப்பட்டுள்ளன; இவற்றுட் சில, ஜாதகக் கதைகளை விளக்குவன. பராக்கிரமபாகுவின் அரண்மனையின் சிலமான பாகங்களை இன்னமும் நாம் காணுதல் கூடும்; இவை மிகப் பெரியவையே.

சோழர் இலங்கையிலே குடியிருந்தமையினால் மனைக் கலையிலும் அவர்கள் முன்மாதிரி பின்பற்றப்பட்டென்பதைக் காட்டும் சான்றுகள் பல உள. முதலிலே பௌத்த சமயத்துக் குதவிபுரிந்த சோழவரசர்கள் ஏழாம் நூற்றாண்டிலே சைவர்களாகிக் கோயில்களைக் கட்டி, சைவ சமய மோங்குதற்குப் பெரிதும் உதவினர். தஞ்சாவூரிலே யுள்ள பெருங்கோயிலை ராஜராஜன் கட்டியதோடு அதன் பராமரிப்புக்காகப் பல கிராமங்களை மானியமாகச் சாசனஞ் செய்தான்; இவற்றுட் சில இலங்கையிலுள்ளன வென்பதை



பொலன்னறுவையிலுள்ள லங்கா திலக விகாரை.

ஈண்டு நாம் குறிப்பிடல் தகுதியே. பொலன்னறுவையிலே இரண்டாம் சிவாலய மெனப்படுவது, அனேகமாய்ச் சோழர் குடியேறிய காலத்திற்றான் கட்டப்பட்டிருக்க வேண்டும். அது 11-ம் ஆண்டிலே கட்டப்பெற்ற சோழர் முறையைத் தழுவி முற்றாகக் கல்லினாற் கட்டப்பட்டது. தூபராமாவிகாரையின் வில்மாடமும் சோழருடைய மாதிரியைப் பின்பற்றிக் கட்டப்பட்டதாயிருக்கலாம்.

இதே காலத்திற் செதுக்கப்பட்ட கல்லுருவங்களும் பிரம்மாண்டமானவையே. கலாவெவவுக்குக்கண்மையில் அவுக்கண என்னு மிடத்திலும், பொலன்னறுவையிலே உத்தர்ாராமாவிலும் உள்ள புத்த விக்கிரகங்கள் இலங்கையிலுள்ளவற்றுள் மிகப் பெரியனவெனக. இக்காலப் பகுதியைச் சார்ந்த சிற்ப வுருவங்களுள் மிகச் சிறந்தது பொலன்னறுவையிலே போதுகல் விகாரைக் கருகே பாறையிற் செதுக்கப்பட்ட உருவமாகும். இதனைச் சிலர், மகாபராக்கிரமபாகுவின் உருவமெனவும், வேறு சிலர் அகஸ்தியரி னுருவமெனவுங் கூறுவர். ஆனால் பொலன்னறுவையிலே யுள்ள சந்திரகாந்தக் கல் போன்ற ஏனைய சிற்பங்கள் இக்கலை தாழ்நிலை யடைந்துள்ள தென்பதைக் காட்டும். குப்த சிற்ப முறையிற் காணப்படும் எளிமையும் வனப்புவன்மையும் இவற்றிலில்லை. மற்று, திராவிட மாதிரிகளைப் பின்பற்றி னதினாற் போலும் அதிகமான பூவேலையும் நுணுக்கமான சிற்ப வேலையும் காணப்படுகின்றன.

**இலக்கியம்.** 1-ம் பராக்கிரமபாகுவின் காலத்தி லேற்பட்ட பௌத்த சமயக் கிளர்ச்சியினாலும், பிக்குக்கள் ஸம்ஸ்கிருத நூல்களை அதிகமாகக் கற்றமையினாலும் இலக்கிய நூல்கள் இயற்றப்பட்டன.



பொலன்னறுவையிலுள்ள இரண்டாஞ் சிவ தேவாலயம்.

பாளிமொழியிலே நூல்களியற்றும் வழக்கம் இன்னமு மிருந்தது. நூல்கள் பல அபிதர்மத சங்கிரகம் போன்று பாளி மொழியிலுள்ள சமயநூல்களின் விருத்தியுரை, கருத்துரை என்பனவேயாம். இதற்கு முந்தின காலப் பகுதியிலே பாளிமொழியி லியற்றப்பட்ட சமயநூல்களை விரித்துரைக்கும் நோக்கமாகப் பல அகல உரை நூல்களும் இயற்றப்பட்டன.

ஸம்ஸ்கிருத மொழிப் பயிற்சியினால் பாளி, சிங்களம் என்னு மிருமொழிகளிலும் மாற்ற மேற்பட்டதோடு, நூல் விஷயங்களும், அவை எவ்வகையிலெழுதப்பட வேண்டு மென்பதுங்கூடத் திட்டமாக்கப்பட்டன. சிலர் ஸம்ஸ் கிருதத்திலேயே நூல்களியற்றவும் முயன்றனர். பாளி யாப்பு, அலங்காரம், இலக்கணம், அகராதி என்பன ஸம்ஸ் கிருத நூல்களைத் தழுவி இயற்றப்பட்டன. உதாரணமாக, மோக்கல்லனர் இயற்றிய பாளி இலக்கணம், சந்திர கோமினியின் வியாகரணத்தை மூலமாகக் கொண்டிருந்தது. அபிதானப்ப தீபிகை யென்பது அமரகோசம் என்னும் ஸம்ஸ்கிருத அகராதியை மூலமாகக் கொண்டுள்ளது.

புத்தருடைய தந்தசேஷத்தைப்பற்றிக் கூறுவதும், செய்யுள் முறையிலே பாளிமொழியி லியற்றப்பட்டதுமான தாதவம்சம் என்னும் நூலில், இக்காலத்திய பாளிவசன நூலான மகாபோதிவம்சம் என்பதின் விஷயமே கூறப்படு கின்றது; இது ஸம்ஸ்கிருத மொழியைப் பெரிதும் தழுவி பாளியி லியற்றப்பட்டுள்ளது. தாதவம்சத்தை யியற்றிய தர்மகீர்த்தியே, சூளவம்சம் என்னும் நூலின் முற் பகுதிக்கு ஆசிரியர் என்று கூறப்படுகின்றது. சூளவம்ச மானது ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள பெருங்காப்பிய

நூல்களைப் பின்பற்றி யிருப்பதோடு, அம்மொழிக்குரிய அணியலங்காரங்களையும் கொண்டுள்ளது. இந்நூலாசிரியர், கௌடில்யரின் அர்த்தசாத்திரம், காளிதாசனியற்றிய காப்பியங்கள் போன்ற ஸம்ஸ்கிருத நூல்கள் பலவற்றை நன்கறிந்திருந்தனர் என்பது அந்நூலிலிருந்து பெறப் படும்.

பாளிமொழியில் நூலியற்றுவதே பாரம்பரியமான வழக்கமாயிருந்தமையினலே மிகச் சில நூல்களே சிங்கள மொழியிலாக்கப்பட்டன. சில அகராதிகளும், நிகண்டு களும், பாளி சமயநூல்களின் மொழிபெயர்ப்பு நூல்களும் மாத்திரமே சிங்களத்தி லியற்றப்பட்டன. இக்காலப்பகுதியி னிறுதியிலே முக்கியமான இரு வசனநூல்களும் இரு செய் யுள் நூல்களும் இயற்றப்பட்டன. அமாவதுரை, தர்மப் பிரதீபிகை (பாளிநூலான மகாபோதி வம்சத்துக்கு உரை) என்னும் இரு வசனநூல்களும் குருலுகோமி என்பவரா லாக்கப்பட்டன; இவையே இப்போதும் கிடைக்கக் கூடிய மிகத் தொன்மை வாய்ந்த இரு சிங்கள செய்யுள் நூல்களென்க. இவற்றுள் சசதாவதா என்பது 12-ம் நூற் ருண்டின் இறுதியிலியற்றப்பட்டது. மற்றது முவதேவ தாவதா என்பதாகும். இவ் விருநூல்களும் ஜாதகக் கதைகளையே தம்விஷயமாகக் கொண்டுள்ளன. சசதாவதா என்பது (சசஜாதகம்) போதிசத்துவர் முயலாகப் பிறந்த போது நடைபெற்றனவற்றை கூறுவது. மற்றது மகாதேவ ஜாதகக் கதையைக் கூறும். காளிதாசனும், அவன் காலத் திலே சீவித்த குமாரதாசன் என்போரு மியற்றிய ஸம்ஸ் கிருத நூல்களையே இவை தம் செய்யுளமைப்பு முதலிய வற்றில் முற்ருகப் பின்பற்றியுள்ளன.

அயல் நாட்டவரின் படையெழுச்சி.

இக்காலத்திலே இலங்கை பல அந்நிய நாடுகளோடு நேர்முகமாகவே சம்பந்தஞ் செய்துவந்தது. 1-ம் விஜயபாகுவின் காலத்திலே சோழருக்கஞ்சின இலங்கையரசர் தமக்கு ஒத்தாசை புரிபவரோடு சினேக உடன்படிக்கை செய்து கொண்டனர். சோழமன்னரின் பகைஞரோடு விஜயபாகு நட்பாளனாயிருக்க முயன்றது இயற்கையே. சோழராட்சியிலிருந்து இலங்கையை மீட்க அவன் முயன்றபோது, 1-ம் இராசேந்திர சோழனால் துன்புறுத்தப்பட்ட ராமண்ண (பெகு) நாட்டினரின் உதவியை விஜயபாகு நாடினான். அவன் கலிங்க அரசகுமாரியான திரிலோகசுந்தரியை மணப்பதால் கலிங்கத்தோடும், தன்னுடன் பிறந்த மித்திரையை ஒரு பாண்டிய மன்னனுக்கு வதுவைசெய்வித்தமையினாலே பாண்டியரோடும் சம்பந்தஞ் செய்துகொண்டான். மேலைச்சாளுக்கிய மன்னனான 6-ம் விக்கிரமாதித்தனோடும் (கி.பி. 1076-1128) இவன் நட்புகொண்டான்; ஏனெனில், சோழவரசனான 1-ம் குலோத்துங்கன், விக்கிரமாதித்தனுடைய மைத்துனனைச் சிங்காதனத்தினின்றும் துரத்தினமையினாலே சோழனோடு இடைவிடாது சமர்புரிந்தான்.

குலோத்துங்கனுடைய மரணத்துக்குப் பின்னர் சோழவரசனுடைய வலிகுறைந்தபடியினாலே, 1-ம் பராக்கிரமபாகு முடிசூடினபோது இத்தகை நட்புக்களும், உடன்படிக்கைகளும் தேவைபடாதொழிந்தன. ஆகவே, யானைவியாபாரத்திலே ராமண்ண நாட்டவருடன் மனஸ்தாபம் ஏற்பட்டு, கம்போடியாவுக்குச் சென்ற சிங்கள இராச கன்னிகை யொருத்தியை ராமண்ணவின் அரசன் பிடித்தபோது அந்நாட்டுடன் போர்புரிதற்கு பராக்கிரமபாகு

தயங்கவில்லை. அவனுடைய கப்பற்படை குசுமி (இப்போது பசீன் என்றழைக்கப்படுவது) யைப் பற்றியது; சமாதானம் ஏற்படும் வரையில் ஐந்து மாத காலத்துக்கு அவனுடைய சேனைகள் யுத்தஞ்செய்தன. இதற்கப்பால் இலங்கையும் ராமண்ணுவும் நட்புரிமை கொண்ட நாடுகளாகவே இருந்துவந்தன. 3-ம் விஜயபாகுவும் நிஸ்ஸங்க மல்லனும் ராமண்ணுவுடன் போக்குவரவுக்கான தொடர்பு கொண்டிருந்தனர். இம்மட்டோ ! இலங்கைக்கு நெடுந்தூரத்திலேயுள்ள இராசபுதனம், கம்போடியா என்னும் சீமைகளுக்குக் கூடத் தான் தூதனுப்பியதாக நிஸ்ஸங்கன் கூறினுன்.

பராக்கிரமபாகுவின் காலத்திலே, சிங்களர் தென்னிந்தியாவிலும் யுத்தஞ்செய்தனர். 1167-ம் ஆண்டிலே பாண்டிய மன்னனுன பராக்கிரமன் என்பவனுடைய அரசுரிமையைக் குலசேகரன் என்னும் இன்னொரு பாண்டியன் மறுக்க, முன்னவன் பராக்கிரமபாகுவின் உதவியை நாடினுன். லங்காபுரன் என்னும் படைத்தலைவன் கீழ் பராக்கிரமபாகு அனுப்பிய சேனை இராமேசுவரத்தையும், பின்னர் மதுரையையும் பிடித்துக்கொண்டது. அதற்குள்ளே குலசேகரன் பராக்கிரமபாண்டியனைத் தோற்கடித்து அவனைக் கொன்று மதுரையைப் பிடித்திருந்தான். லங்காபுரன் மதுரையைப் பிடித்து, இறந்துபோன வேந்தன் மகனுன வீரபாண்டியனுக்கு முடிசூட்டினுன். இஃதிங்ஙனமாக, மதுரையினின்றும் ஓடிய குலசேகரன், சோழவரசனுன 2-ம் இராசாதிராசனிடம் சரண்புகுந்து அவனுதவியினுலே மீண்டும் பாண்டிய மன்னனுனுன். லங்காபுரன் தோல்வியடைந்து இறக்க, அவனுடைய தலை மதுரை நகரக்கோட்டை வாயிலின் மேற் பொருத்தி வைக்கப்பட்டது. இச்சம்பவம் நடைபெற்ற சிறிது காலத்துக்கெல்லாம் குலசேகரன் இறந்

திருக்கவேண்டும்; ஏனெனில், வீரபாண்டியனுடைய மகன் சிங்களருதவியுடன் மீண்டும் போர் தொடங்கியபோது அவன் ஓட்டியது குலசேகரனை யன்று; மற்று அவன் மகன் விக்கிரம பாண்டியனையே என்க. இவன் தன் தகப்பனைப்போன்று அப்போது ஆட்சி புரிந்த 3-ம் குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான். குலோத்துங்கன் அனுப்பிய சேனை வீரபாண்டியனுடைய மகனைப் புறங்காட்டி யோடச்செய்து மதுரையைக் கைப்பற்றி, விக்கிரம பாண்டியனை அரசிருக்கையி லிருத்தும், சிங்களரை இந்தியாவினின்றும், துரத்திவிட்டது. இதுவே சோழர் இறுதியாகப்பெற்ற பெரும் வெற்றியாகும். இப்போர் நிகழ்ந்தகாலத்திலே சோழராதிக்கத்துக்குட்பட்ட இராமேசுவரம், நிஸ்ஸங்க மல்லன் காலம்வரையிலும் சிங்கள இராச்சியத்தினேர் பாகமாயிருந்தது; இவன் கோயிலைப் புதுப்பித்து அதற்கு நிஸ்ஸங்கேசுவரம் எனப் புது நாமஞ் சூட்டினன்.

## ஆரும் அதிகாரம்

# சிங்கள இராச்சியத்தின் சீரழிவு

3-ம் விஜயபாகு முதல் 8-ம் பராக்கிரமபாகு வரையில்.

இவ்வதிகாரத்திலே 3-ம் விஜயபாகு காலமுதல் (கி. பி. 1232—1236) போர்த்துகீசர் இலங்கைக்குப் வந்தபோது அரசாண்ட 8-ம் பராக்கிரமபாகு காலம்வரையிலு (1484—1518) மான சரித்திரம் கூறப் படும். பல தென்னிந்தியப் படையெழுச்சிகளோடு பொலன்னறுவைக் காலப்பகுதி முடிவடைந்தது. அப்பட்டினத்திலே கடைசியிலாண்ட இரு அரசருளொருவன் ஓர் பாண்டியவீரன்; மற்றவன் கலிங்க நாட்டவன். இதற்குப் பின்னரும் தென்னிந்தியர் இலங்கைத் தீவினரை நெருக்குவாராயினர்; சிங்கள இராச்சியம் சீரழிந்து வந்தமையைப்பற்றியே இனி நாம் கூறவேண்டியிருக்கின்றது.

2-ம் பராக்கிரமபாகு, 6-ம் பராக்கிரமபாகு ஆகிய இருவரே இக்காலத்திய பெருமன்னர்களாவர். முன்னவன் தன் வீரத்தினாலும் அரசியற் றிறமையினாலும் கீர்த்திபெறுதலினும் பார்க்க, இலக்கிய நூல்களியற்றியதினாலும் சமயவளர்ச்சிக்கான கருமங்களைப் புரிவதினாலுமே பிரசித்திபெற்றான். நமக்குக் கிடைக்கக்கூடிய சான்றுகளிலிருந்தும், அவன் பொலன்னறுவையையும் அனுராதபுரத்தையும் வென்றதாக

தெரியவருகின்றதே தவிர யாழ்ப்பாண நாட்டின்மீது செங்கோலோச்சியதாகத் தெரியவில்லை. 6-ம் பராக்கிரம பாகு அக்காலத்து மன்னருள் மிகச்சிறந்து விளங்கியதோடு இலங்கையின்மீதும் ஏகசக்கராதிபத்தியஞ் செலுத்திஞன்.

தீவின் பிரிவுகள்.

இத்தீவு முந்திய காலப்பகுதியிற் போலவே பிரிக்கப் பட்டிருந்தது. ஆனல் "திரிசிங்களம்" என்னும் மூன்றுபிரிவுகள் இப்போது பிசிதிரட்டை மாயரட்டை, உருகுணை என்றழைக்கப்பட்டன. முன்போலப் பொலன்னறுவை அவ்வளவு ஆதிக்கம் பெற்றிருக்கவில்லை. 2-ம் பராக்கிரமபாகுவும் அங்கு சிறிதுகாலமே தங்கியிருந்தான். அதனைத் தலைநகராக்கிய 4-ம் விஜயபாகுவும் ஈராண்டுகளுக்கே ஆட்சி புரிந்தான். பாண்டியராதிபத்தியத்தை ஒப்புக்கொண்டதிஞலே 3-ம் பராக்கிரமபாகு அங்கிருந்து அரசுபுரிய முடிந்ததுபோலும்! இம்மன்னர் மூவரும் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டிருந்தபோதும்கூட பிசிதிரட்டை முழுவதையும் ஆளமுடியவில்லை. யாழ்ப்பாணத்தரசர் முதலில் சிங்கநகரத்தையும் பின்னர் யாழ்ப்பாணப்பட்டினத்தையும் தங்கள் தலைநகராகக்கொண்டு சுயேச்சாதிகாரஞ் செலுத்தி வந்தனர்.

மேலே கூறிய பட்டினங்களைத் தவிரவும் தம்பதேனியா, யாப்பகு, குருநாகல், கம்பளை, கோட்டைக்காடு என்னும் நகரங்கள் ஐந்தும் இக்காலத்திலே தலைநகரங்களாகவிருந்தன. முதல் மூன்றும் இயற்கையாயமைந்த கற்கோட்டைகளாம். கம்பளை கண்டியைப்போன்று, குன்றுகளாற் பாதுகாக்கப் பட்டுள்ளது. கோட்டைக்காடு அக்காலத்திலே சதுப்பு நிலத்தாற் சூழப்பட்டிருந்தது. முன்னர் சிகிரியா தலைநகரா



சிகிரியாவிலே சுவற்றில் வரையப்பெற்ற ஓர் சித்திரம்.

யமைந்தவாறே இந்நகரங்களும் இராசதானிப் பட்டினங்களா யிருந்தமை அரசர்கள் தம்மெதிரிகளுக்குப் பயந்து ஆட்சி செய்தமையை விளக்கும். அவர்கள் சமவெளிகளிலே இருந்து தம் குடிகளைக் காக்க முடியவில்லை; ஆகையினாலே தங்களைத் தற்காத்துக்கொள்ளும்பொருட்டு தக்க இடங்களைத் தேட வேண்டியிருந்தது. சிற்றரசர்கள் வசித்த பேராதனை, கந்தணி கலே, கோவிந்தகேலே (இது கீழ்கடற்கரையிலே திருக் கோவிலுக்கு இருபது மைலுக்கு மேற்கேயுள்ள ஓர் உயர்ந்த குன்று) போன்ற இடங்களும் இயற்கையமைப்பினாலேயே பகைவரின் தாக்குதல்களின்றும் காக்கக்கூடிய இடங்களா யிருந்தன.

அரசியற் சரித்திரம்.

இக்காலத்தைப்பற்றின ஆதார நூல்களின் திருப்தி யற்ற தன்மை இக்கால சரித்திரத்தை ஓரளவுக்குத் தெளிவற்றதாகச் செய் கின்றது. இப்பகுதியிலே சீவித்த சிங்கள வேந்தருள் முதல்வனான 3-ம் விஜயபாகு, ஏனைய பொலன்னறுவை மன்னவர் எவருக்கும் உறவினனன்று. அவனும் அவன் சந்ததியினரும் தம்பெயர்களோடு "ஸ்ரீ சங்கபோ" என்பதைச் சேர்த்துக்கொண்டனர். அவனுக்குப் பின் 4-ம் பராக்கிரமபாகுவரையில் முடி சூடியவர்கள் அவன் சந்ததியினரே; 1-ம் புவனேகபாகு வின் காலத்திலே பாண்டியர் இலங்கையை யாண்டபோது மாத்திரமே இவர்களாட்சிக்குத் தடை யேற்பட்டது. கிரி யுல்லாவுக்கு அண்மையிலேயுள்ள தம்பதேனியா விஜயபாகு வின் தலைநகராயிருந்தது. அவனுடைய மகன் 2-ம் பராக்கிரமபாகு (கி. பி. 1236—1271) தமிழரிடமிருந்து அனுராதபுரத்தையும் பொலன்னறுவையையும் பற்றிய பின்னர் பிந்தியநகரத்திலே சிறிதுகாலம் தங்கியிருந்தான்.

4-ம் விஜயபாகு (கி.பி. 1271—1273) தன் படைத்தலைவனாற் கொலை செய்யப்பட்டபின்னர், அவனுடன்பிறந்தானான 1-ம் புவனேகபாகு (கி.பி. 1273—1284), யாப்பகுவிலிருந்து தமிழரைத் துரத்துவது சுலபமாயிருந்தமையினாலே இன்னொரு முறை அதனைத் தன் தலைநகராக்கினான். 4-ம் விஜயபாகுவின் மகனான 3-ம் பராக்கிரமபாகு (கி.பி. 1302—1310) மறுபடிம் பொலன்னறுவையைத் தன் தலை நகராக்கினான்; இதற்குக் காரணம் அவன் பாண்டியருடைய ஒத்தாசை பெற்றமையினாலிருக்கலாம். அவனுடைய தாயாதியும் அவனைத் தோற்கடித்தவனுமான 2-ம் புவனேகபாகு (கி.பி. 1310—1325) குருநாகலைத் தன் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான்; பொலன்னறுவைப் பகுதியிலே யிருந்த தமிழரிடமிருந்து எவ்வித ஒத்தாசையையும் அவன் பெற முடியாமையினாலே இவ்வாறு செய்திருக்கலாம். இவனுக்குப்பின், இவனுடைய மகன் 4-ம் பராக்கிரமபாகு முடிசூடினான். ஆனால் 5-ம் பராக்கிரமபாகு (கி.பி. 1348—1360) 5-ம் விஜயபாகுவின் புத்திரன் என்பதை தவிர்த்து, 4-ம் பராக்கிரமபாகுவுக்குப்பின் ஆண்டவர்களின் வம்சபரம்பரையைப்பற்றி ஒன்றும் அறியக்கூடவில்லை. இவர்களில் மூன்றுமவனான 4-ம் புவனேகபாகு (கி.பி. 1346—1353) கம்பளையைத் தலைநகராக்கினான். சிங்களரிடையே கலகம் விளைந்தமையினாலே இராசதானி, குருநாகலிலிருந்து கம்பளைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும். யாழ்ப்பாண அரசனரின் நெருக்கிடையினாலேயும் இவர்கள் தென்றிசைநோக்கி உள்நாடு சென்றிருக்கலாம்.

2-ம் வீரபாகு (கி.பி. 1391—1397) கம்பளையிலே அரசாண்ட அரசவம்சத்தைச் சார்ந்தவனாயினும் அவன் முதலாக இன்னொரு புதிய அரசவம்சம் தோன்றியது.

அவன் பாணந்துறைக்குக் கிழக்கேயுள்ள ராய்கமத்திலிருந்து அரசுபுரிவானாயினன்; இது அக்காலத்திலே, உண்மையான அதிகாரம் செலுத்திய வீரஅளகேசுவரனை வென்றமையினாலும், தமிழர், சோனகர் என்போரின் படையெழுச்சிகளைத் தடுத்தற்கு ஏனைய இடங்களைப் பார்க்கிலும் இது தக்கதெனக் கருதினமையினாலு மிருக்கலாம்.

வீரபாகுவின் இரண்டாம் மகனிடமிருந்து சிங்காதனத்தைப் பறித்து, 6-ம் விஜயபாகுவென (கி.பி. 1397—1409)ப் பட்டப்பெயர் சூடிய வீரஅளகேசுவரனுடன் அரசபரம்பரைத் தொடர்பற்றுப் போயிற்று. இவனைச் சீனர் சிறைபிடித்தேக, இவனுடைய புத்திரனான 6-ம் பராக்கிரமபாகு, தன் தகப்பன் சிறைபிடிக்கப்பட்டபோது முடிசூடிய பராக்கிரமன் என்பானை மாய்த்துத் தானே முடிசூடி, கோட்டைக்காட்டைத் தன் இராசதானிப் பட்டணமாக்கினன். கோட்டைக்காடு ஏன் இராசதானியாக்கப்பட்ட தென்பதைப் பற்றி நமக்கு நிச்சயமாக ஒன்றுந் தெரியவில்லை. வாசனைச் சாமான்களின் வியாபாரம் கொழும்புவில் நடந்தமையினால் அதுமுக்கியமாக இருந்திருக்கவேண்டும்; அன்றேல், நகரத்தைச் சுற்றியிருந்த சதுப்பு நிலப் பாதுகாப்பினாலாவது இவ்வாறு நடந்திருக்கலாம்.

அக்காலத்திலே கண்டஉடபசரட்டை என்றழைக்கப்பட்ட மலைப்பிரதேசம் அப்போது உடுனுவரை, யதினுவரை, ஹரிசுபட்டு, ஹேவஹாதை, தும்பறை என்பவற்றை அடக்கி யிருந்தது. இங்கிருந்த கம்பளையைச் சிற்சில அரசர்கள் தந் தலைநகராக்கினமையினாலே இப்பிரதேசம் விசேடமாயிற்று தாழ்ந்த நிலப்பிரதேசத்திலே தலைநகரிருந்தபோது, இங்கிருந்த சில சிற்றரசர்கள் சுயேச்சாதிகாரஞ் செய்ய முயன்றனர். ஜோதியசிதானே

என்பவன் திறைசெலுத்த மறுத்தமையினாலே, 6-ம் பராக்கிரமபாகு (கி.பி. 1411—1468) ஒரு கலகத்தை யடக்க வேண்டியிருந்தது. 6-ம் புவனேகபாகுவும் (கி. பி. 1473—1480) இப்பிரதேசத்தை ஒரு முறை அடக்கித் தன்னதிகாரத்துக்குள் கொண்டுவரவேண்டியிருந்தது.

இக்காலப்பகுதியிலே, சிங்களவரசர்கள் தம்மிராச்சியத்துக்குள்ளேயும் மிகச் சிறு அளவுக்கே அதிகாரஞ் செலுத்தினர். 5-ம் புவனேகபாகு பெயரளவில்தான் அரசனாயிருந்தான்; உண்மையான அதிகாரம் வீரஅளகேசுவரன் என்னுஞ் சிற்றரசனிடமிருந்தது. 2-ம் புவனேகபாகு, 3-ம் பராக்கிரமபாகுவினிடமிருந்து சிங்காதனத்தை அபகரிக்க முடிந்ததென்பதைக் கருதுமிடத்து, முந்தியவன் முடிசூடுமுன்னர் குருநாகலிலே பெருமதிகாரம் படைத்திருக்கவேண்டும் என்பது தெளிபு. 3-ம் விஜயபாகு, தலதாவை பாதுகாப்புக்காக வக்கிரிகலைக்கு வடமேற்குத் திசையிலுள்ள பெலிகலையிலே வைத்தமையினாலே, அவன் தன் தலைநகரான தம்பதேனியாவிலே கவலையற்றிருந்தானெனக் கூறுதற்கில்லை. 4-ம் விஜயபாகுவினால் வரிகளை இறுக்கக்கூடவில்லை; அதனோடு அவன், தன் படைத்தலைவனை மித்திரனால் கொல்லப்பட்டான். 6-ம் விசயபாகுவைச் சீனர் சிறைபிடித்துச் சென்றனர்.

**வன்னியர்.** சுயேச்சாதிகாரம் செலுத்த முயன்ற சிற்றரசர் இருந்த இன்னொரு பிரதேசம் வன்னியாகும். இக்காலப்பகுதியிற்றான் வன்னியர்களைப்பற்றி நாம் முதன்முதலாகக் கேள்விப்படுகிறோம். அவர்கள் சிங்கள—யாழ்ப்பாண இராச்சியங்களுக் கிடையேயிருந்த பிரதேசத்திற்றங்கி, சமயத்துக் கேற்றவாறு இரு ராச்சியங்களிலோர் அரசனைத் தலைவனென அங்கீகரித்தும்

கூடினபோது தம் சுயேச்சைப்படி நடந்தும் வந்தனர். 3-ம் விஜயபாகு மாயாரட்டையிலிருந்து தமிழரை ஒட்டுமுன்னே வன்னி நாட்டதிபனுனுன். வன்னியர், 2-ம் பராக்கிரமபாகு 4-ம் விஜயபாகு ஆகிய இருவருடைய அதிகாரத்துக்கும் கீழ்ப்படிந்து நடந்தனர். பிந்தியவன், பகைவரினின்றும் அனுராதபுரத்தைக் காக்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்புவித்தான். 1-ம் புவனேகபாகு பட்டத்துக்கு வந்தவுடனே அவர்களை அடக்கினுன். அவனுட்சியி னுரம்பத்திலே, தமிழர் படையெடுத்த பின்னர் வன்னியர் சுயேச்சாதிகாரம் செலுத்த விரும்பினர் என்றெண்ண இடமுண்டு. 6-ம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைப் பிடிக்குமுன் அவர்களுடன் போரிட்டுத் தனக்குக் கீழ்ப்படியச் செய்தமையினுலே அதற்குப்பின்னர் அவர்கள் சுயேச்சாதிகாரம் பெற்றவர்களாகவோ, அன்றேல், யாழ்ப்பாணத்து மன்னர்களுக்குட்பட்டோ இருந்திருத்தல் வேண்டும்.

**யாழ்ப்பாண இராச்சியம்.**

யாழ்ப்பாண இராச்சியத்தின் சரித்திரத்தைத் தொடர்ச்சியாகக் கூறுதல் இயலாது. சிங்கள-பாளி, இதிகாச நூல்களும் எல்லா கற்சாசனங்களும் சிங்கள மன்னரின் ஆட்சியைப் பற்றியே கூறுகின்றன. 6-ம் பராக்கிரமபாகு வரையில் இம் மன்னர்களனைவரும், திரிசிங்களநாட்டின் வேந்தர்களென விருதுகூறினபோதிலும், சிற்சில காலந்தவிர, பிசிதிரட்டையின்மீதும், பிபிலிக்கு வடக்கேயிருந்த உருகுணையின்மீதும் முற்றுக அதிகாரஞ் செலுத்தவில்லை. மகாபராக்கிரமபாகுவின் காலம் வரையிலேனும் இலங்கையின் வடபாகம் சிங்கள மன்னராட்சிக்குட்பட்டிருந்ததெனை எண்ண இடமுண்டு. தமிழராட்சியின்கீழ் அது எக்காலத்திலே

சுயேச்சாதிகாரம் பெற்ற நாடாயிற்றென்பது விளங்க வில்லை; ஆனால் கலிங்க மாகன் காலத்திருந்தவனும், அவனுக்குப்பின் முடிசூடினவனுமான 4-ம் விஜயபாகு, தமிழரை மாயரட்டையிலிருந்து மாத்திரமே துரத்தினபடியி னல், மாகன் காலத்திலே தமிழ் இராச்சிய மேற்பட்ட தென்று நினைக்கப் போதிய காரணமுண்டெனக. 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலே தமிழர், பிசிதிரட்டை, பிபிலி என்பவற்றுக்கு வடக்கேயுள்ள உருகுணை, ஆகிய இரண்டையும் தம் வசப்படுத்தி யிருக்கவேண்டும். 2-ம் பராக் கிரமபாகுவின் காலத்திலே அவர்கள் அனுராதபுரத்தையும் பொலன்னறுவையையு மிழந்தனர்; 13-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலே அவர்கள் பாண்டியராட்சிக்குட்பட்டன ரெனத் தோன்றுகின்றது. 2-ம் பராக்கிரமபாகு இழந்ததை அவர்கள் 4-ம் விஜயபாகுவின் காலத்திலே மீண்டும் பெற்றனர். ஆனல் அப்பிரதேசத்தை 3-ம் பராக் கிரமபாகுவின் காலத்திலே மீண்டுமிழந்தனர். கி.பி. 1310-ம் ஆண்டளவில் 2-ம் புவனேகபாகு சிம்மாதன மேறினபோது, அவர்கள் பொலன்னறுவையை மீண்டு மடைந்து, அதே சமயத்தில் பாண்டிய ராட்சியின்றும் விடு பட்டனரெனத் தோன்றுகின்றது. கி.பி. 1346-ம் ஆண்டி லே, அராபிய யாத்திரிகனன இபின் பதூதா இலங்கைக்கு வந்தபோது, யாழ்ப்பாணவரசன் வன்மைவாய்ந்தவனு யிருந் தான்; அவனுடைய இராச்சியம் புத்தளம் வரையில் விசாலித்திருந்தது; புத்தளத்து முத்துக்குளிப்பு அவனுக் குட்பட்டிருந்தது.

இதற்குப் பின்னர் சிலவாண்டுகளுள் யாழ்ப்பாண வரசர் தமது அதிகாரத்தைத் தென்றிசையிலே ஓங்கச் செய்தன ரென்றும், சிங்கள ராச்சியத்தினின்றுங்கூடத்

திறை பெற்றனரென்றும் கூறுதற்கு இடமுண்டு. இதனை யொழித்தற்காக, அளகேசுவரன் என்னும் நிஸ்ஸங்க அளகக்கோன்ஞரன் போரிடுதற்குச் சித்தஞ்செய்து, கோட்டைக் காட்டிலும் பாணந்துறைக்குக் கிழத்திசையிலுள்ள ராய்கமாவிலும் அரண்களைக் கட்டினான். 3-ம் விக்கிரம பாகுவின் ஆட்சிமுடிவிலே, யாழ்ப்பாணவரசனை எதிர்த்தற்குப் போதிய பலம் தன் சேனைக்குண்டெனா அளகேசுவரன் கருதியபோது, யாழ்ப்பாண வரசனது திறையிறுப்போனைத் தூக்கிலிட்டு, அவ்வகையே அம்மன்னனை அவமானப்படுத்தினான். இதனைக் கேள்வியுற்ற யாழ்ப்பாணவரசனை ஆரியச்சக்கரவர்த்தி கடல்வழியாகவும் தரைவழியாகவும் இருசேனைகளை அனுப்பினான். தரைப்படை ஓரளவுக்கு வெற்றிபெற்றிருக்கவேண்டும்; ஏனெனில் 5-ம் புவனேகபாகு கம்பளையிலிருந்து ராய்காமாவுக்கு ஓடிவிட்டான். ஆனல் தமிழர் இறுதியாகத் தோல்வியடைந்தனர்; கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம் என்னுமிடங்களிலிருந்த அரண்களையும் அவன் பிடித்துக்கொண்டான்.

6-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலே (கி.பி. 1450) சபுமால் குமாரையா யாழ்ப்பாணத்தின்மீது படையெடுத்த போதிலும், அதனைப் பிடிக்கமுடியவில்லை. ஆனல் இரண்டாமுறை அவன் சித்திபெற்றான். பிறகு அவன் அதனைச் சில கால மாண்டு, சிங்கள சக்கராதிபத்தியத்தை யொப்புக்கொண்டு, கடைசித் தமிழரசனுடைய மருமகனுக்கு யாழ்ப்பாணத்தை அளித்துவிட்டான்.

பௌத்த சமயமும் இந்துசமயமும்.

நாட்டின் நிலையற்ற தன்மை பௌத்த சமயத்தின் செல்வாக்கைக் குறைத்துவிட்டது. இக்காலத்திலே ஆட்சிபுரிந்த அரசர் நால்வர். அஷ்டசீலத்தின்படி ஒழுகுமாறு பிக்குக்களை வற்புறுத்தியும், அவ்வாறு செய்ய

மறுத்தோரை விலக்கவும் வேண்டியிருந்தது. சங்கத்தின் தாழ்ந்த நிலைக்கு அயல்நாட்டுப் படையெழுச்சிகளும் உள்நாட்டுக் கலகங்களும் ஓரளவுக்குக் காரணங்களாகு மென்பதிற் கைய மில்லை.

புத்தசமயக் கொள்கைகளைச் சீர்திருத்தவும், எதிர்க் கட்சிகளோடு சமரசஞ்செய்யவும் முயற்சிகள் செய்யப் பட்டபோதிலும் மகாயானக் கொள்கைகள் இலங்கையி னின்றும் மறையவில்லை. விசேடமாக 6-ம் பராக்கிரமபாகு காலந்தொடக்கம் நாதன் அதாவது அவலோகிதேசுவர ரைப் பூசிப்பது முன்னிலும் பிரதானமாகக் கருதப்பட் டது. பல இலக்கியங்களிலே இப்போதிசத்துவரின் பெயர் குறிக்கப்படுகின்றது; பல ஆலயங்களிலே அவரது விக்கிர கங்கள் பூசிக்கப்பட்டன வென்பது சில சிலாசாசனங்களி லிருந்து தெரியவருகின்றது. இக்காலத்தில், சாமன் என் னுந் தேவதையும் பூசிக்கப்பட்டுவந்தது; சாமன் என்னும் தேவதையும் சமந்தபத்திரன் என்னும் போதிசத்துவனும் ஒருவரே என சில ஆசிரியர்கள் அபிப்பிராயங் கொண்டுள் ளனர்.

''தலதா'' என்னும் புத்தரின் தந்தசேஷமானது பொலன்னறுவைக் காலப் பகுதியினுங் கூடின சிரத்தை யுடன் பூசிக்கப்பட்டது. அரசர்கள் அதனைத் தம்முடனே கொண்டுபோகாம விருப்பதில்லை; இராசதானிப்பட்டினம் புதிதாக ஓரிடத்திலேற்பட்டபோது தந்தசேஷத்துக்கென ஓர் ஆலயம் கட்டப்பட்டது.

இந்து சமயத்தின் செல்வாக்கும் இக்காலப்பகுதியிலே பெரிதும் வளர்ச்சியடைந்தது. சிங்களவரசரிற் சிலர், பிராமண குருக்களை ஆதரித்தனர்; இந்து தெய்வங்களும் புத்தவிகாரைகளில் அமைக்கப்பட்ட தேவாலயங்களிலேனும்

விகாரைகளிலேனும் பூசிக்கப்பட்டன. கம்பளைக்கருகிலுள்ள லங்காதிலகவிகாரையிலே, இந்து தெய்வங்களின் விக்கிரகங்கள் விகாரையின் உள்மதிலுக்கும் வெளிமதிலுக்குமிடையே வைக்கப்பட்டன. இக்காலத்து சிங்கள நூலாசிரியர்களும், தம்வணக்கங்களை புத்தர், தர்மம், சங்கம் ஆகிய மூன்றுக்கும் செலுத்தியதோடு, பிரம்மா, சிவன், விஷ்ணு முதலியோருக்கும் செலுத்தினர். போதிசத்துவர்களான நாதன், சாமன் என்போரும் இந்து தெய்வங்களான சிவனும் லக்ஷ்மணனும் எனவே கூறுதல் வழக்கமாயிற்று.

மனைக்கலையும் உருவச்சிற்பமும்.

இக்காலத்திலே வெகு சில கட்டடங்களே நிருமிக்கப்படுதற்கு நாட்டின் அமைதியற்ற தன்மையும் அரசர்களின் அளவான வருவாயுமே காரணங்களாயிருந்தன. லங்காதிலக விகாரையும் கடலடேனிய விகாரையுமே இக்காலத்திய பெருங்கட்டடங்களாம். முன்னையது செங்கற்களினாலானது; பொலன்னறுவைக் காலப்பகுதியிலே நிருமிக்கப்பட்ட கட்டடங்களைப் போன்றது. மூலஸ்தானத்துக்கு முன்னே இரு அறைகளிருப்பதே இதன் விசேஷமாகும். இதனைச் சுற்றி ஒரு மதிற்சுவ ரெழுப்பப்பட்டிருப்பதால் கட்டடம் நீள்சதுர வடிவங் கொண்டிராது நேர்சதுர வடிவங் கொண்டுள்ளது. உள்ளிருக்கும் கர்ப்பக்கிருகம் பௌத்தவிகாரை; வெளிப்பிரகாரம், விக்கிரகங்கள் பூசிக்கப்படும் இடம். பொலன்னறுவையிலே முதலாம் சிவதேவாலயமென்னப்படுவது, பாண்டியர் இந்நாட்டில் தங்கிய காலத்திற் கட்டப்பட்டிருக்கலாம். அது 13-ம் நூற்றாண்டின் பாண்டிய கட்டட முறைப்படி கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. நிற்க, கடலடேனிய விகாரையும் லங்காதிலக



கம்பளைக் கருகேயுள்ள லங்கா திலக விகாரை.

விகாரையும் கம்பளையிலரசு புரிந்த 4-ம் புவனேகபாகுவினற் கட்டப்பட்டன. முந்தியது இதுகாறும் நிருமாணிக்கப்பட்ட விகாரைகளுள் கல்லினாலான ஓரேவொரு கட்டடமாகும்; விஜயநகரக் கட்டட மாதிரிகளை அது முற்றிலும் ஒத்திருக்கின்றது. யாப்பகுவிலுள்ள மாடிப்படி இந்து கட்டட முறையைத் தழுவியுள்ளது; அதாவது அது பிற்காலத்திய பாண்டிய அல்லது விஜயநகரக் கட்டடமுறையைத் தழுவியுள்ளது.

**இலக்கியம்.** இலக்கிய மொன்றில் மாத்திரமே விசேடமான வளர்ச்சி காணப்பட்டது. இந்தியக் கல்வியாளரின் மொழியாகிய ஸம்ஸ்கிருதந்தை இலங்கைவாசிகள் கற்றனரேனும் பாளிமொழியில் நூல்களியற்றும் வழக்கம் பின்பற்றப்பட்டு வந்தது. நூல்களும் முந்திய காலப் பகுதியைப்போன்றே யிருந்தன. தூபவம்சமானது, பாஷை, நடை, விஷயம் என்பவற்றில் மகாபோதிவம்சத்தைப் போன்றே யிருந்தது. சூளுவம்சத்தின் இரண்டாம் பாகத்திலே, ஸம்ஸ்கிருதமொழியின் கலப்பானது, முதற்பாகத்தினு மதிகமாகக் காணப்படுகின்றது. இக்காலத்தி லியற்றப்பட்ட இரு சரித்திர நூல்களாவன:—ஸ்ரீ சங்கபோவின் சரித்திரத்தைக் கூறும் ஹத்தவனகல்ல விகாரவம்சம, பௌத்த சமய சரித்திரத்தைக் கூறும் சத்தர்மசங்கிரகம் என்பனவே.

103-கதைகள்கொண்ட ரசவாகினி என்னும் வசன நூலும், ஜினசரிதம், ஜினலங்காரம், சிவஞெளிபாதத்தை விவரிக்கும் சமந்தகூட வருணனை என்பனவும் ஏனைய பாளி நூல்களாகும். இலக்கண நூல்களும் பைஷஜ்ய மஞ்ஜுஸா என்னும் வைத்திய நூலும் இக்காலத்தியவையே.

இக்காலத்தி லியற்றப்பட்ட சிங்கள நூல்களின் தொகை இதற்கு முந்திய காலப்பகுதி யெவற்றினும் கூடினதென்க. அவற்றுட் பல அக்காலத்துப் பாளி நூல்களின் மொழிப் பெயர்ப்புக்களே. தூபவம்சம், தலதாபூஜாவளி (தாதுவம் சத்தை முதல் நூலாகக் கொண்டது), அத்தனகலுவம்சம், மகாபோதிவம்சம், சத்தர்மாலங்காரம் (ரசவாகினியை மூலமாகக் கொண்டது), ஜாதகம், என்பன சிங்கள வசன நூல்களென்க. தூபவம்சத்தைப் போன்று, பூஜாவளியிலும் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் அதிகமான அளவுக்குக் காணப்படுகின்றன. நிகாயசங்கிரகம் என்பதும் மேற்கூறிய வற்றைப் போன்றதே; இது பௌத்த சமயவாலாற்றையும் அதன் பிரிவுகளைப்பற்றியும் கூறுகின்றது. சத்தர்ம ரத்னு கரம் என்பதும் இன்னொரு பௌத்த சமய நூலாகும்.

செய்யுள்நடையி லெழுதப்பட்ட சமயசம்பந்தமான நூல்கள் பல இக்காலத்திற் றோன்றின. பராக்கிரமபாகு வினல் இயற்றப்பட்ட கவிசிலுமிணு அல்லது குசதாவதா என்னும் நூல் குசஜாதகக் கதையைக் கூறுகின்றது; பாஷை யிலும் நடையிலும் சசதாவதையையொத்தது. தோதகமுல ஸ்ரீ ராகுலர் இயற்றிய காவியசேகரமும், குட்டிலகாவியமும் செய்யுள் நடையில் ஜாதகக்கதைகளைக் கூறுவனவே. புத்த ரின் தந்தசேஷத்தைப் பற்றிக் கூறும் தலதாசரிதம், நீதிக் கதைகளடங்கிய லோகோபகாரயம், புத்தரையும் அவரது உபதேசங்களையும் துதித்துக் கூறும் புத்தகுணலங்காரியம், புத்தருபதேசங்களை வற்புறுத்தும் லோவாதசங்கராவம் என்பனவும் இக்காலத்திய செய்யுள் நூல்களென்க.

இலௌகிக விஷயங்களைப்பற்றின நூல்களும் காணக் கிடக்கின்றன. பிற்காலத்திய சிங்கள இலக்கியத்தைப் பெரிதும் மாற்றிய சித்தத் சங்கராவம் என்னும் சிங்கள



யாப்பகுவிலுள்ள பெருங்கற்பாறை.

இலக்கண நூல் 14-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே எழுதப் பட்டது. இராவணமாலே, பிரியும்மாலே, நாமாவளி—என்னும் நிகண்டுகளும், வைத்திய நூல்களான யோகார் ணவமும், யோகரத்னுகரமும் இக்காலத்தவையே.

சந்தேசம் என்னும் ஒரு புதுமுறைச் செய்யுளும் இக் காலத்தில் வழங்கியது. இவை காளிதாசனியற்றிய மேக தூதம் என்பதை முன்மாதிரியாகக் கொண்டவை; சமய விஷயத்திலும் பார்க்க இலௌகிகவிஷயத்தையே கூறுவன. பெயருக்கேற்ப மன்னனுக்கோ அல்லது அரசகுடும்பத் தைச் சார்ந்த ஒருவனுக்கோ மங்களமுண்டாகவோ, அல்லது போரில் வெற்றியுண்டாகவோ வேண்டும் விண்ணப் பத்தை பறவையின் மூலம் ஒரு கோயிலுக்கனுப்பும் செய்தியை இந்நூல்கள் அடக்கியுள்ளன. பறவை சென்ற பாதை இவற்றிலே விவரித்துக் கூறப்படும்; எனவே அக்காலத்திய பட்டினங்கள், கிராமங்கள், கட்டடங்கள் என்பவற்றைப்பற்றின பல விஷயங்களை இவற்றிலிருந்து நாமறிதல் கூடும்.

நூல்களியற்றுதற்குச் சிங்களமொழி இக்காலத்திலே அதிகமாக உபயோகிக்கப்பட்டதற்குக் காரணங்கள் பல உள. இந்தியாவிலிருந்து பௌத்த சமயம் ஒழிந்தமை யானது, பாளிமொழியை இடைவிடாதுபயோகிப்பதைக் குறைத்ததென்பது நாம் எதிர்பார்க்கக் கூடியதே. முகம்மதி யர்கள் இக்காலத்திலே இந்தியாவைக் கைப்பற்றியதினுல், ஸம்ஸ்கிருதத்தின் தேவை குறைய, அது பாளிக்குப் பதிலாக உபயோகிக்கப்படவில்லே.

ஆனுல், ஸம்ஸ்கிருதம் விசேடமாகப் பயிலப்பட்டமை யினுலேதான் சிங்களம் வழங்கி வந்ததென்க. இது சிங்கள

மொழியிலில்லாத சொற்களை யளித்து, அதிலுள்ள சொற்களின் தொகையைப் பெருக்கியது; அபப்பிரம்சம்போன்று பாளி மொழியினின்றும் பிறந்த திசைமொழிகளையும், ஏனைய ஆரியத் திசைமொழிகளையும் பயிலுதற்கு அது வழி காட்டியது. இலக்கணம், யாப்பு, ஒலிநூல் என்பவற்றினாராய்ச்சியை அது உற்சாகப்படுத்தியதோடு, சிங்கள மொழியை நன்கறிந்து கொள்ளவும், அதனை இலக்கிய நூல்கள் இயற்றுதற்கேற்ற மொழியாக்கவும், ஸம்ஸ்கிருதமொழிப் பயிற்சியானது தீவிரப்படுத்தியது. பாளி அல்லது ஸம்ஸ்கிருதபாஷையை அறியாத இலௌகிகர் மனதுக்குகந்த மருத்துவம், சோதிடம்போன்ற சமயச் சார்பற்ற விஷயங்களையும் ஸம்ஸ்கிருதம் கற்கச்செய்தது. இலங்கையிலே இயற்றப்பட்ட இலக்கியங்கள் இந்தியருக்கு மகிழ்ச்சியளிக்காதபோது, இலக்கியங்களியற்றுதற்குத் தகைமை பெற்றதும், சனங்களுக்கு நன்கு விளங்குவதுமான சிங்களமொழியில், கல்வியறிஞர் நூல்களியற்றத் தொடங்கியது இயல்பே.

**தென்னிந்தியர்: பாண்டியர்.**

இலங்கையிலே கலவரமேற்பட்டதையும், அங்கே இரு இராச்சியங்கள் போரிடுவதையும் பயன்படுத்தியவர் தென்னிந்தியவாசிகளே. சோழவரசருடைய வன்மை குறைய பாண்டியர் கொஞ்சங் கொஞ்சமாகச் சுயேச்சாதிகாரமடைந்து அவ்வழியே சோழ இராச்சியத்தின்மீது தம்மதிகாரத்தைப் பெருகச்செய்வாராயினர். கி.பி. 1216—1239-ம் ஆண்டுகளிற் செங்கோல் செலுத்திய மறவர்மன் சுந்தரபாண்டியன் 1220-ம் ஆண்டிலும், 1230-ம் ஆண்டிலும், சோழ மன்னனான 3-ம் இராஜராஜனுடன் (கி. பி. 1216—1246) யுத்தஞ் செய்து இரண்டாமுறையிலே அவனைத் தோற்கடித்தான். இதன்பின்னர், சோழ

மன்னனுக்குக் கீழிருந்த பல்லவ அரசனான கோப்பெருஞ் சிங்கனும் தன்னைச் சுயேச்சாதிகாரி யென்று கூறி, 3-ம் இராஜராஜனுடன் யுத்தஞ் செய்து அவனைச் சிறைபிடித்தான். ஆனால் சோழமன்னனோ மைசூரரசனான 3-ம் ஹோய்சால நரசிங்கனால் மீட்கப்பட்டு, சிம்மாதனத்தமர்த்தப் பட்டான். இதன் பின்னரும் நரசிங்கன் பாண்டியனுடன் போர்செய்து இராமேசுவரம் வரையிலும் தன்படையுடன் சென்றான். பராக்கிரமபாகு என்னும் இலங்கையரசனொருவனும் அவனுடைய சேனாவீரர் மூவரும் கோப்பெருஞ் சிங்கன் சார்பாக நரசிங்கனுடன் சண்டையிட்டுத் தம் முயிர் நீத்தனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவன் அக்காலத்திலே இலங்கையிலரசுபுரிந்த ஒரு சிற்றரசனாயிருக்கலாம்.

13-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே சோழனுடன் யுத்தஞ் செய்த 1-ம் ஜடாவர்ம சுந்தரபாண்டியன் முன்னைய பாண்டிய மன்னரிலும் அதிகமான அளவுக்கு வெற்றிபெற்றான். இவன் சோழ, ஹோய்சால அரசர்களை வென்று, சோழரைத் தனக்குத் திறைசெலுத்தச் செய்தான். இவன் கி. பி. 1254-ம் ஆண்டளவில் இலங்கையின்மீது படையெடுத்து வந்ததாகவும், இலங்கைவேந்தனிட மிருந்துத் திறையாக இரத்தினங்களையும் யானைகளையும் பெற்றதாகவும் விருது கூறினான்; அவனுக்குப்பின் முடிசூடிய 2-ம் ஜடாவர்மன் கி. பி. 1254—56-ம் ஆண்டுகளிலே இலங்கையின்மீது படையெடுத்தான். அவன் அங்கே ஓரரசனைக் கொன்று அவனுடைய சொத்துகளைப் பற்றியதாகவும், இன்னோர் அரசனிடமிருந்து கப்பம் பெற்றதாகவும் கூறிக் கொண்டான். முதலாமரசன் யாழ்ப்பாண வரசனாகவும் இரண்டாமவன் 2-ம் பராக்கிரமபாகுவாகவு மிருக்கலாம்.

இவனுக்கும் பிந்திய பாண்டியவரசனான மறவர்ம குலசேகரனும் (கி.பி. 1268—1311) சிங்கள இராச்சியத்தின்மேற் படையெடுத்தான். முதற்றடவை அவன் 1-ம் புவனேகபாகு (கி.பி. 1273—1284) வினுற் தோற்கடிக்கப்பட்டான். இரண்டாமுறை வந்த அவனுடைய மந்திரியான ஆரியச்சக்கரவர்த்தி யாப்பகுவைக் கைப்பற்றி தலதாவை எடுத்துச் சென்று குலசேகரனிடம் ஒப்புவித்தான்; இதற்குப் பின்னர் இருபதாண்டுகாலத்துக்கு, இலங்கை பாண்டியர்களால் ஆளப்பட்டுவந்ததாகத் தோற்றுகின்றது. பின்னர் சிங்களவரசனான 3-ம் பராக்கிரமபாகு தலதாவைப் பெறுதற்பொருட்டு நேராகவே பாண்டிய மன்னனைக் காணச் சென்றுன். அனேகமாய் அவன் பாண்டிய மன்னனடி பணிந்து அவனுதரவைப் பெற்றிருக்கவேண்டும். குலசேகரனிறக்கவும், வீரன், சுந்தரன் என்னுமவனுடைய இரு குமாரர்களும் தம்முள் போரிட்டனர். இதுவே தக்க சமயமென முகம்மதியர், மாலிக்காபுர் என்பான் தலைமையில் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து அதனை வென்றனர். 2-ம் புவனேகபாகு 3-ம் பராக்கிரமபாகுவுடன் போரிட்டு முடிசூடினமைக்கு மேற்கூறிய நிகழ்ச்சிகளே காரணமாயிருந்திருக்கலாம்.

**விஜயநகர இராச்சியம்.**

கி. பி. 1310-ம் ஆண்டிலே பாண்டியநாட்டை வென்ற முகம்மதியர் இலங்கையினுட் பிரவேசிக்கவில்லை. ஆனல், கிருஷ்ணு, துங்கபத்திரா நதிகளுக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தை யாண்ட விஜயநகர மன்னர்களினதிகாரத்துக்குப் பாண்டியநாடு 1377-ம் ஆண்டில் உட்பட்டபோது முகம்மதியராட்சி தென்னுட்டில் முடிவடைந்தது. 2-ம் ஹரிஹரன் (கி. பி. 1399—1406) என்னும் விஜயநகர வேந்தனுடைய

மகன் விருபாட்சன் என்பான் இலங்கையை வென்றதாக விருதுகூறினன். ஆனால் அவன் வென்றதெல்லாம் அனேகமாய் யாழ்ப்பாண இராச்சியமாக இருத்தல்வேண்டும்; ஏனெனில், 2-ம் தேவராயன் (கி.பி. 1421—1449) விஜயநகரத்தை யாண்டகாலத்திலே யாழ்ப்பாணம் அவனுக்குத் திறை செலுத்தி வந்தது. தன்னாட்சியின் கடைசிக்காலத்திலே 2-ம் தேவராயன் இலங்கையின்மீது படையெடுத்ததாகக் கூறப்படுகின்றது. அவனுடைய மரணமும், அதன்பின்னர் விஜயநகரத்திலேற்பட்ட குழப்பமுமே, சபுமல் குமாரையன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவும், கறுவாப்பட்டையுடன் சென்ற ஒரு கப்பலைப் பிடித்தமையினாலே தண்டித்தற் பொருட்டுச் சிங்களர் தென்னிந்தியாவிலுள்ள அதிராம் பட்டினத்துக்குத் தண்டப்படையொன்றை யனுப்பிப் போர்புரிந்து ஓரளவுக்கு வெற்றி பெறவும் இயன்றது. 1565-ம் ஆண்டிலே முகம்மதியரால் அழிக்கப்படும் வரையில் விஜயநகர இராச்சியம் சிறப்புடனிருந்தது.

**மலாய்நாடுகள்.** இதே காலத்திலே, மலாய்நாட்டிலே, பந்தன் விரிகுடாவுக்கருகேயுள்ள தாம்பிரலிங்க நாட்டரசனை சந்திரபானு என்னும் பௌத்தனும் இலங்கையின்மீது இருமுறை படையெடுத்தான். அவன் 1244-ம் ஆண்டிலே 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலே முதன்முதலாக வந்தான்; தெய்வசக்தி பொருந்தியதெனக் கூறப்பட்ட ஒரு புத்த விக்கிரகத்தை அபகரிக்கவே அப்போது வந்திருத்தல்கூடும். தோல்வியடைந்தபோது அவன் தென்னிந்தியாவுக்குச் சென்று, 4-ம் விஜயபாகுவின் காலத்திலே பாண்டிய சோழப் படைகளுடன் மீண்டும் இலங்கைக்கு வந்து, தலதாவும் புத்தரது பிட்சாபாத்திரம் தன்னிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமெனக்

கேட்டான். அவன் யாப்பகுவரையில் வந்தபோதிலும் அரசனுடைய மருமகனை வீரபாகுவினுற் தோற்கடிக்கப் பட்டான்.

சீனம்.

சீனச்சக்கரவர்த்திகள் தலதாவைத் தமக்களிக்கும்படி பன் முறை வற்புறுத்திக் கேட்டபோதிலும், அதனைப் பெறவில்லை. சீனத்திலே யூவன் அரசவம்சத்தைத் (கி.பி. 1280—1368) தாபித்த குப்ளாய் கான், அதற்காகத் தூதர்களை கி.பி. 1284-ஆண்டிலே அனுப்பினுன்; அடுத்த நூற்றுண்டிலும் இதன்பொருட்டு தூதர்கள் இருமுறை வந்தனர். கி. பி. 1405-ம் ஆண்டிலே, மாங் அரசவம்சத்து (கி. பி. 1368—1644) யுங்கோ என்னும் சீனச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி அவனுடைய உத்தியோகத்தனை சிங்கோ என்னும் பேடி தலதாவைக் கொண்டுபோதற்கு இலங்கைக்கு வந்தான். ஆனுல் 6-ம் விஜயபாகு அவனை அவமரியாதையுடன் நடத்தினுன். சிங்கோ மீண்டும் கி.பி. 1408-ம் ஆண்டில் வந்து, அரசனையும் பட்டத் தேவியையும் பிரதான உத்தி யோகத்தர்களையும் சீனத்துக்குச் சிறைபிடித்துச் சென்றுன். சிறிதுகாலத்துக்குப் பின்னர் விஜயபாகு சிறையினின்றும் விடுவிக்கப்பட, அக்காலமுதல் கி. பி. 1459-ம் ஆண்டு வரையில் இலங்கை சீனத்துக்குத் திறை செலுத்திவந்ததெ‌ன எண்ண இடமுண்டு.

யேமன், எகிப்து, பேகு என்ப.

யேமன், எகிப்து, பேகு என்னும் நாடுகளுடனும் இலங்கை நேராகப் போக்குவரத்து செய்துவந்தது. தொண்டைமண்டலத் துச் சுல்தானுடைய நட்பாளனுகிய யாழ்ப்பாணவரசன், அரேபியாவிலுள்ள யேமன் நாட்டு மன்னனுடைய நண்பனுயிருந்தான்; இலங்கை, யேமனுடன்

வியாபாரவிஷயமான தொடர்பு பெற்றிருந்தது. கி.பி. 1283-ம் ஆண்டிலே 1-ம் புவனேகபாகு எகிப்துடன் நட்புக் கொள்ளவும், நவரத்தினங்களையும் யானைகளையும் கறுவாப் பட்டையையும் ஏற்றுமதி செய்யவும் கூடுமெனக் கூறி தூதனுப்பினான். இது, யேமன் வேந்தன் யாழ்ப்பாண அரசனுடன் நட்புகொண்டாடினமையினாலிருக்கலாம்.

பர்மாவுக்கும் இலங்கைக்கு மிடையே யேற்பட்ட தொடர்பு சமய சம்பந்தமானதே. இலங்கையிலே யுள்ள சங்கத்தினரிடம் பிக்குதீட்சை பெறுதற்பொருட்டு, இருபத்திரண்டு பிக்குக்களை பேகு நாட்டதிபனான தர்மசேதி (கி. பி. 1472—1492 இலங்கைக் கனுப்பினான். இவர்கள் திரும்பி வந்து, பர்மாவிலிருந்தும் சீயத்திலிருந்தும் வந்தோருக்குப் பிக்குதீட்சை யளித்தனர்.

யேமனுக்கும் தென்னிந்தியாவுக்கு மிடையே வியாபார நிமித்தமாக ஏற்பட்ட தொடர்பு, இலங்கையிலே அனேக முஸ்லிம்கள் தங்குதற்குக் காரணமாயிற்று. இவர்கள் நாட்டினுட்புறங்களிலும் குடியேறி, அங்குள்ள கிராமங்களிலே பள்ளிவாசல் (மசூதி) களைக் கட்டினர். சிவனொளி பாதத்திலிருந்த அடிச்சுவடு, அவர்கள் சமயநூற்படி முதலாம் மனிதனான ஆதாமின் அடிச்சுவடே என அவர்கள் நம்பினமையினால், அவர்கள் அங்கும் சென்றனர். அவர்களுடைய முக்கிய குடியிருப்புத்தானம் கோழும்பாகவே இருந்தது. இங்கே ஒரு முஸ்லிம் கப்பற்கொள்ளைக்காரன், அபிசீனியப் படைவீரரின் துணைகொண்டு வியாபாரத்தைத் தன்னதிகாரத்துள் வைத்திருந்தான்.

## பின்னுரை

கடைசி அதிகாரத்திலே சிங்கள இராச்சியம் க்ஷீண தசை யடைய வாரம்பித்த வரலாறு கூறப்பட்டுள்ளது; இதற்குப்பின்னர் இந்த க்ஷீணதசையின் வரலாறே இலங்கையின் சரித்திரமாகும். பாண்டியருக்குப் பதிலாகப் போர்த்துக்கேசியர் வந்து, சிங்களரை மலயநாட்டுக்குத் துரத்தி தமிழரிடமிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினர். இதற்கப்பால், ஒல்லாந்தர் கடற்கரைப் பிரதேசங்களை போர்த்துக்கேசியரிட மிருந்து அபகரித்தனர். இப்பிரதேசத்தை ஆங்கிலேயர் இவர்களிடமிருந்து கைப்பற்றி, மலயநாட்டையும் பற்றி, சிங்களரின் தனியரசை இல்லாது செய்தனர்.

மகாவம்சத்திற்போலவே, இச்சிறுநூலிலும், இலங்கையை ஆங்கிலேயர் வென்ற வரலாறு கூறப்படவில்லை. இலங்கைக்குப் போர்த்துக்கேசியர் வந்தமை, மத்தியகாலப் பகுதி முடிவடைந்து தற்காலம் தொடங்குவதைக் காட்டும் ஓர் அறிகுறிபோன்றிருத்தலினாலே, இதோடு இச்சரித்திரத்தை முடிப்பதே தகுதியெனத் தோன்றுகின்றது. இக்கால முதலாக இலங்கைத் தீவினர், தமது முன்னேற்றத்துக்கு இந்தியாவைப் பார்க்கிலும் மேனாடுகளையே உற்ற துணையாகவும் முன்மாதிரியாகவுங் கொண்டுள்ளனர்; இந்து சமயத்தின் செல்வாக்குக்குப் பதிலாக, கிறிஸ்தவ சமயத்தின் செல்வாக்கே படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இலங்கைவாசிகள் மேனாட்டு உடைகளையும் பழக்க வழக்கங்களையும் அனுசரிக்கத் தொடங்கியதோடு, சென்ற ஒரு நூற்றாண்டாக ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கும் அடிகோலினர் என்க.

ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றியது முதலாக, இலங்கை பெரிதும் மாறியுள்ள தென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை; தற்கால வாழ்க்கையிலே மிகப்பிரதானமான விஷயங்கள் சில, சமீபகாலத்திலேயே தொடங்கின. புதிய கொள்கைகளும் எண்ணங்களும் மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றிவிட்டன; இலங்கைச் சரித்திரம் ஒரு புதிய வழியே செல்லத் தொடங்கிய தென்றும் கூறலாகும்.

இப்பெரு மாறுதல்கள் தோன்றியிருப்பினும், பண்டைய காலத்திலே மக்களுக்கு உறுதுணையாயிருந்த பல விஷயங்கள் இன்னமும் சனங்களுக்கு ஊக்கமளித்து வருகின்றன. ஆங்கிலமொழி, இலக்கியம், என்பவற்றின் பயிற்சியானது மாந்தருக்கு வாழ்க்கையிலொரு புதுநோக்கத்தை ஓரளவுக்குக் கொடுத்துதவினும், இப்போதும் அதிகமாய் பேசப்படும் பாஷைகள் சிங்களமும் தமிழுமேயாம். கிறிஸ்தவ திருச்சபையின் செல்வாக்கு, கிறிஸ்தவரின் தொகையை மாத்திரம் கவனிக்குமிடத்து மிகவு மதிகமாயிருப்பினும், பௌத்த, இந்து சமயிகளே அதிகத் தொகையானவர்; முஸ்லீம்களும் ஏறக்குறைய கிறிஸ்தவருக்குச் சமமான தொகையினராகவே யிருப்பரெனலாம். கமத்தொழில் வியாபார நோக்கத்துடனேயே இக்காலம் நடை பெறுகின்றதாயினும், பெரும்பாலான சனங்களின் சீவனத்தொழில் நெற்பயிர் செய்கையேயாம். புகைரதம், மோட்டார்வண்டி, தந்தி, டெலிபோன் என்னும் தூரபாஷிணிக்கருவி என்பன மக்களின் வாழ்க்கையிலோர் இன்றியமையாத பாகமாய்ச் சீவியத்தினெப்பகுதியிலும் சம்பந்தப்பட்டு அரசினருடைய அதிகாரம் எத்திசையிலும் பரவுதற்கு உதவிபுரியினும், பண்டைக்கால யாத்திரை முறைகளும், புராதன அரசியல் முறைகளும் ஒழிந்தபாடில்லை. மேலும், புராதன மனேக்கலை,

சிற்பக்கலை, ஓவியம் என்பவற்றிலே இப்போது புத்துயிர்க் கிளர்ச்சி யொன்று தோன்றியுள்ளது. பண்டைய ஏரிகள், குளங்கள், வெட்டாறுகள் என்பவற்றைப் புதுப்பித்தலிலே முன்னைய காலத்திலும் பார்க்க இப்போது அதிக கவன மெடுக்கப்படுகின்றது. இந்தியாவையே தமக்கு உற்சாகமும் புத்துயிரும் அளிக்கும் நாடாகக் கருதும் மனப்பாங்கும் சிலரிடங் காணப்படுகின்றது.

இலங்கையின் தற்கால நிலைமைக்கு மூலாதாரமான விஷயங்கள் மிகவும் வேரூன்றியிருப்பதினாலே, இலங்கை வாசிகள் தம் பண்டைச் சரித்திரத்தை முற்றாக ஒதுக்கிப் புதுவழி புகுதல் இயலாத காரியமாகும். மேலும், இலங்கையை முற்காலத்திலே பாதித்து நின்ற விஷயங்களும்—உதாரணமாக தேசஅமைப்பு—அதிகமாக மாறவில்லை. உயிருள்ள எந்த சீவனும் தமது பழைய சரித்திரத்தை ஒதுக்கிவைத்தல் இயலாதுபோல, இலங்கைவாசிகளும் தம் பண்டைய சரித்திரத்தை ஒதுக்குதல் முடியாது. மற்று, அவர்கள் இக்காலத்து நிலைமைக் கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளத்தான் கூடும். ஆனால் இவ்வாறு செய்யும்போது, பிரதானமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், நிரந்தரமாயிருக்கக் கூடியவற்றைப் பாதுகாத்து, உபயோக மற்றவற்றை அறவே நீக்கி, தம் வளர்ச்சிக்குத் தேவையான வற்றை வெளியே யிருந்து பெறுதல் வேண்டுமென்பதே யாம். இலங்கையின் பூர்வ கால சரித்திரத்தை உள்ளவா றுணர்ந்து, அதன் அருமை பெருமைகளை அவதானித்தற்கு இக்காலத்திலும் பார்க்க ஏற்ற தருணம் வாய்த்தலரிது; அவ்வாறு அவதானித்தற்கு இச்சிறு நூல் ஒரு சிறிதேனும் உதவுமாயின், இந் நூலாசிரியர் தம் நோக்கம் சித்தி பெற்ற தென்றே கருதுவர்.

# அனுபந்தம் 1

## அரசர் நாமாவளி*

| | பெயர் | காலம். |
|---|---|---|
| | | கி. மு. |
| 1. | விஜயன் | ... 483 |
| | அரசனற்ற ஒருவருடகாலம் | ... 445 |
| 2. | பந்து வாசுதேவன் (விஜயனுடைய மருமகன்) | ... 444 |
| 3. | அபயன் (2-இன் மகன்) | ... 414 |
| | அரசனற்ற காலம் | ... 394 |
| 4. | பண்டுகாபயன் (3-இன் மருமகன்) | ... 377 |
| 5. | முட்டசிவன் (4-இன் மகன்) | ... 307 |
| 6. | தேவனன்பிய திஸ்ஸன் (5-இன் 2-ம் மகன்) | ... 247 |
| 7. | உத்தியன் (6-இன் சகோதரன்) | ... 207 |
| 8. | மகாசிவன் ( ஷை ) | ... 197 |
| 9. | சூர திஸ்ஸன் ( ஷை ) | ... 187 |
| 10, 11. | சேனன், குட்டிகன் (தமிழர்) | ... 177 |

---

*மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு:—இந்நாமாவளியிற் குறிக்கப்பட்ட பெயர்கள், கூடினவரையில், சிங்கள நூல்களிற் கூறப்பட்டுள்ளவாறே குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அரசனுடைய பெயரும் சிங்களத்திலுள்ளவாறே பாளிமொழிநூல்களிற் குறிக்கப்படவில்லை. சில வரசர்களுக்குப் பல பெயர்களிருந்தன. இவற்றுட் சிலவும் இந்நாமாவளியிற் குறிக்கப்பட்டுள்ளன.

12. அசேன் (6-இன் சகோதரன்) ... 155
13. எலாரன் (எல்லாளன்-தமிழன்) ... 145
14. துட்டகெமுனு ... 101
15. சத்தா திஸ்ஸன் (14-இன் சகோதரன்) ... 77
16. துல்லதானன் (15-இன் மகன்) ... 59
17. லஞ்ச திஸ்ஸன் (16-ன் சகோதரன்) ... 59
18. கல்லாட நாகன் (கலுன்னன்) (ஷை) ... 50
19. வலகம்பா (வத்தகாமணி அபயன்) (ஷை) ... 43
20-24. புலகத்தன், பாகியன், பனயமாறகன் பிளயமாறகன், தாதிகன் என்னும் தமிழர் ஐவர். ... 43
19. வலகம்பா (மீண்டும் அரசுபுரிந்தது) ... 29
25. மகாசூலி மகா திஸ்ஸன் (18-இன் மகன்) ... 17
26. சோர நாகன் (19-இன் மகன்) ... 3

கி. பி.

27. திஸ்ஸன் ("சின்ன" திஸ்ஸன்) (25-இன் மகன்) ... 9
28. அனுலா (சிவன், வடுகன், தாருபாதிக திஸ்ஸன் நீலியன் என்பவரை முறையே மணந்த சோர நாகன் மனைவி) ... 12
29. மகலந்திஸ்ஸன் (குடகப்பதிஸ்ஸன், குடகண்ணன், காலகண்ணி திஸ்ஸன்) (27-இன் சகோதரன்) ... 16
30. 1-ம் பாத்தியன் (பாதிகாபயன், பாதிக திஸ்ஸன்) (29-இன் மகன்) ... 38
31. மகாதாலியமானன் (மகாதாட்டிக மகாநாகன்) (30-இன் சகோதரன்) ... 67
32. அடகெமுனு (ஆமந்தகாமணி அபயன்) (31-இன் மகன்) ... 79
33. கணிரஜானு திஸ்ஸன் (இளிகிரிதளன்) (32-இன் சகோதரன்) ... 89
34. சூளாபயன் (சின்ன அப, சூளுஅப) (32-இன் மகன்) ... 92

| | | கி. பி. |
|---|---|---|
| 35. | சீவலி, (34-இன் சகோதரி) ... | 93 |
| | அரசனற்ற 3-வருடகாலம் ... | 93 |
| 36. | ஈழநாகன் (எலுனன்) (35-இன்-மருமகன்) ... | 96 |
| 37. | சந்தமுகுனு (சந்திரமுகசிவன்) (36-இன் மகன்) ... | 103 |
| 38. | யசலாலக திஸ்ஸன் (யசசிளு) (37-இன் சகோதரன்). | 112 |
| 39. | சுபன் (சபன்) ... | 120 |
| 40. | வசபன் (வாகாப்பு) ... | 127 |
| 41. | வங்க நாசிகதிஸ்ஸன் (40-இன் மகன்) ... | 171 |
| 42. | 1-ம் கஜபாகு (கஜபாகுக காமணி) (41-இன் மகன்)... | 174 |
| 43. | மகாலுனன், (மகல்லக நாகன், மகலுமாளு) (42-இன் மாமன்) ... | 196 |
| 44. | 2-ம் பாத்தியதிஸ்ஸன் (பாதிகதிஸ்ஸன், பாத்தியன்) (43-இன் மகன்) ... | 203 |
| 45. | கனிஷ்டதிஸ்ஸன் (44-இன் சகோதரன்) ... | 227 |
| 46. | குஹுாண்ணன் (குஜ்ஜநாகன்) (45-இன் மகன்) ... | 246 |
| 47. | குட்டநாகன் (குஞ்சநாகன், குடானன்) (46-இன் சகோதரன்) ... | 248 |
| 48. | 1-ம் ஸ்ரீநாகன் (சிறீளு குட சிறீளு), (47-இன் மைத்துனன்) ... | 249 |
| 49. | வோர திஸ்ஸன் (வோகாரிகதிஸ்ஸன்)(48-இன் மகன்) | 269 |
| 50. | அபய நாகன் (அபாசேன், அபநாதிஸ்ஸன்) (49-இன் சகோதரன்) ... | 291 |
| 51. | 2-ம் ஸ்ரீநாகன் (சிறீளு) (49-இன்-மகன்) ... | 300 |
| 52. | விஜயிந்து (விஜயகுமாரகன்) (51-இன் மகன்) ... | 302 |
| 53. | 1-ம் சங்கத்திஸ்ஸன் ... | 303 |
| 54. | ஸ்ரீ சங்கபோ (ஸ்ரீ சங்கபோதி) ... | 307 |
| 55. | கோலுஅபா (கோட்டாபயன், மேகவர்ணபயன்) ... | 309 |
| 56. | சேட்ட திஸ்ஸன் (தெத்துதிஸ்ஸன், கலகன் தெத்த திஸ்ஸன், மகலன்தேத்த திஸ்ஸன்) (55-இன்மகன்). | 323 |
| 57. | மகாசேனன் (56-இன் சகோதரன்) ... | 334 |

கி. பி.

58. கீர்த்தி ஸ்ரீமேகவர்ணன் (57-இன் மகன்)
59. 2-ம் சேட்ட திஸ்ஸன் (58-இன் மருமகன்) ... 362
60. புத்ததாசன் (புஜஸ்) 59-இன் மகன்
61. உபத்திஸ்ஸன் (60-இன் மகன்)
62. மகாநாமன் (61-இன் சகோதரன்) ... 409
63. சொத்திசேனன் (செங்கோத்து) (62-இன் மகன்) ... 431
64. சத்திரகிராககன் (சத்காககன், லாமணிதிஸ்)(62-இன் மருமகன்) ... 431
65. மித்திரசேனன் (மித்தசேனன், கரல்சோரன்) ... 432
66. பண்டு (தமிழன்)
67. பாரிந்தன் (66-இன் மகன்)
68. குட்டபாரிந்தன் (67-இன் சகோதரன்) ... 433
69. திரிதரன் (தமிழன்)
70. தாத்தியன் (ஷை)
71. பிதியன் (ஷை)
72. தாதுசேனன், தாசன் காலியன் ... 460
73. 1-ம் காசியபன் (கஸ்ஸபன், சிகிரிகாசபு, கசபு) (72-இன் மகன்) ... 478
74. 1-ம் முகலன் (மொக்கல்லனன்) (72-இன் மகன்) ... 496
75. குமாரதாசன் (குமாரதாதுசேனன்) (74-இன்-மகன்) 513
76. கீாத்திசேனன் (கித்திசேனன்) (75-இன் மகன்) ... 522
77. சிவன் (மாடி சீவன்) (76-இன் சிற்றப்பன்) ... 522
78. 2-ம் உபத்திஸ்ஸன் (லாமாணிஉபத்திஸ்ஸன்) (72-இன் மருமகன்) ... 524
79. சிலாகாலன் (சலமேவன்) ( ஷை ) ... 524
80. தாபுலுசேனன் (79-இன் 2-ம் மகன்) ... 537
81. 2-ம் முகலன் (80-இன் சகோதரன்) ... 537
82. கீர்த்திஸ்ரீமேகன் (81-இன் மகன்) ... 556
83. மகாநாகன் (சேனவிமானன்) ... 556

| | | கி. பி. |
|---|---|---|
| 84. | 1-ம் அக்கபோதி (அக்போ), (83-இன் மருமகன்) ... | 568 |
| 85. | 2-ம் அக்கபோதி(ஷை, குடாஅக்போ)(84-ம் மருமகன்). | 601 |
| 86. | 2-ம் சங்கத்திஸ்ஸன் ... | 611 |
| 87. | தலமுகலன் (தல்லமொக்கலனன், லாமணிபோநா முகலன் மாதிபோமுகலன்) ... | 611 |
| 88. | சிலாமேகவர்ணன் (சலமேவன்) ... | 617 |
| 89. | 3-ம் அக்போ (அக்கபோதி, ஸ்ரீசங்கபோ) (88-இன் மகன்) | ... 626 |
| 90. | 2-ம் தெத்து திஸ்ஸன் (சேட்ட திஸ்ஸன்) (86-இன் மகன்) | |
| | 3-ம் அக்போ (மீண்டும் சிங்காதனமமர்ந்தது | |
| 91. | 1-ம் தாதோப திஸ்ஸன் (தாதாசிவன்) | |
| 92. | 2-ம் காசியபன் (பாசுலுககபு)(89-இன் சகோதரன்)... | 641 |
| 93. | 1-ம் தப்புலன் (தாபுலு) (88-இன் மருமகன்) .. | 650 |
| 94. | 2-ம் தாதோபதிஸ்ஸன் (ஹத்ததாதன்) (91-இன் மருமகன்) .. | 650 |
| 95. | 4-ம் அக்போ, (ஸ்ரீ சங்கபோ) (94-இன் சகோதரன்). | 658 |
| 96. | தத்தன் .. | 674 |
| 97. | ஹத்ததாதன் .. | 676 |
| 98. | மானவர்மன் (மகலாபாணே) (92-இன் மகன்) .. | 676 |
| 99. | 5-ம் அக்போ-(98-இன் மகன்) .. | 711 |
| 100. | 3-ம் காசியபன் (99-இன் சகோதரன்) .. | 717 |
| 101. | 1-ம் மகிந்தன் (மிகுந்து, மிதிலராஜன்) (99-இன் சகோதரன்) .. | 724 |
| 102. | 6-ம் அக்போ (அக்கபோதி சிலாமேகன், அக்போல மேவன் (100-இன் மகன்) .. | 727 |
| 103. | 7-ம் அக்போ (101-இன் மகன்) .. | 766 |
| 104. | 2-ம் மகிந்தன் (மகிந்த சிலாமேகன்) .. | 772 |
| 105. | 2-ம் தப்புலன் (உதயன், தப்புளு) (104-இன்மகன்).. | 792 |

கி. பி.

106. 3-ம் மகிந்து (105-இன் மகன்) .. 797

107. 8-ம் அக்போ (மாதி அக்போ) (106-இன் சகோதரன்) 801

108. 3-ம் தப்புலன் (106-இன் சகோதரன்) .. 812

109. 9-ம் அக்போ (பசுளுஅக்போ) .. 828

110. 1-ம் சேனன் (சிலாமேகன், மர்வலசேனன், சலமேவன்) (109-இன் சகோதரன்) ... 831

111. 2-ம் சேனன் (மூகையின்சேனன், அபாஸ்ரீ சங்கபோ) (110-இன் மருமகன்) .. 851

112. உதயன் (உத அபாசலமேவன்) (109-இன் சகோதரன்) 885

113. 4-ம் காசியபன் (கசுப்ஸ்ரீ சங்கபோ) (111-இன் சகோதரன்) ... 896

114. 5-ம் காசியபன் (கஸ்ஸபகசுபு பசுலுகசுபு, சலமேவன் அபயன்) (111-இன் மகன்) .. 913

115. 4-ம் தப்புலன் (தாப்புளு) (114-இன் சகோதரன்) .. 923

116. 5-ம் தப்புலன் (114-இன் சகோதரன்) .. 923

117. 2-ம் உதயன் (111-இன் மருமகன்) .. 934

118. 3-ம் சேனன் (117-இன் சகோதரன்) .. 937

119. 3-ம் உதயன் (117-இன் ஷை ) ... 945

120. 4-ம் சேனன் (பசுளு) (114-இன் மகன்) ... 953

121. 4-ம் மகிந்து (120-இன் சகோதரன்) ... 956

122. 5-ம் சேனன் (சலமேவன்) (121-இன் மகன்) ... 972

123. 5-ம் மகிந்து (மகிந்தன்) (122-இன் சகோதரன்) ... 981

12 ஆண்டுகளுக்கு அரசனற்ற காலம் .. 1017

124. *விக்கிரமபாகு (கஸ்ஸபன், காசியபன்) (123-இன் மகன்) .. 1026

125. கீர்த்தி .. 1041

---

*124-131 இலக்கமிடப்பட்டவர் உருகுணைமன்னராவர். (127-இன் தலைநகர், கழுத்துறை; 131-132-இன் தலைநகர், கதிர்காமம்.)

| | | கி. பி. |
|---|---|---|
| 126. | மகாலாணு கீர்த்தி (மகாலே) ... | 1041 |
| 127. | விக்கிரமபாண்டு (விகும்பண்டி) ... | 1044 |
| 128. | ஜகத்பாலன் (ஜகதிபாலன்) ... | 1047 |
| 129. | 1-ம் பராக்கிரமபாண்டு ... | 1051 |
| 130. | லோகேசுவரன் (லோகன்) ... | 1053 |
| 131. | காசியபன் ... | 1059 |
| 132. | 1-ம் விஜயபாகு, (124-ன் பேரன்) ... | 1059 |
| 133. | 1-ம் ஜயபாகு (132-இன் சகோதரன்) ... | 1114 |
| 134. | 1-ம் விக்கிரமபாகு (132-இன் மகன்) ... | 1116 |
| 135. | 2-ம் கஜபாகு (134-இன் மகன்) ... | 1137 |
| 136. | 1-ம் பராக்கிரமபாகு ... | 1153 |
| 137. | 2-ம் விஜயபாகு (135-இன் மகன்) ... | 1186 |
| 138. | 6-ம் மகிந்து ... | 1187 |
| 139. | கீர்த்தி நிஸ்ஸங்க மல்லன் ... | 1187 |
| 140. | 1-ம் வீரபாகு (139-இன் மகன்) ... | 1196 |
| 141. | 3-ம் விக்கிரமபாகு (139-இன் சகோதரன்) ... | 1196 |
| 142. | சோடகங்கன் (139-இன் மருமகன்) ... | 1196 |
| 143. | லீலாவதி (136-இன் பட்டத்தரசி-கீர்த்தியென்பவனுடன் அரசுபுரிந்தாள்) ... | 1197 |
| 144. | சாகசமல்லன் (139-இன் சகோதரன்) ... | 1200 |
| 145. | கல்யாணவதி (139-இன் பட்டத்தரசி (ஆயஸ்மந்த சமூபதியுடன்) ... | 1202 |
| 146. | தர்மாசோகன் ... | 1208 |
| 147. | அனிகங்கன் (அனியங்கன்) ... | 1209 |
| 143. | லீலாவதி (விக்கண்டசமூனக்கனுடன்) ... | 1209 |
| 148. | லோகேசுவரன் ... | 1210 |
| 143. | லீலாவதி ... | 1211 |
| 149. | பராக்கிரமபாண்டு ... | 1211 |
| 150. | மகன் | 1214-1235 |

| | | கி. பி. |
|---|---|---|
| 151. | 3-ம் விஜயபாகு ... | 1232 |
| 152. | 2-ம் பராக்கிரமபாகு (கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித பராக்கிரமபாகு) (151-இன் மகன்) ... | 1236 |
| 153. | 4-ம் விஜயபாகு (போசத்விஜயபாகு) (152-இன் மகன்) | 1271 |
| 154. | 1-ம் புவனேகபாகு (லோகேகபாகு) (153-இன் சகோதரன்) ... | 1273 |
| | அரசனற்ற காலம் ... | 1284 |
| 155. | 3-ம் பராக்கிரமபாகு (153-இன் மகன்) ... | 1302 |
| 156. | 2-ம் புவனேகபாகு (154-இன் மகன்) ... | 1310 |
| 157. | 4-ம் பராக்கிரமபாகு (பண்டித பராக்கிரமபாகு) (156-இன் மகன்) } ... | 1325 |
| 158. | 3-ம் புவனேகபாகு (வன்னிபுவனேகபாகு) } ... | 1325 |
| 159. | 5-ம் விஜயபாகு (ஜயபாகு, சஆலு விஜயபாகு) } ... | 1325 |
| 160. | 4-ம் புவனேகபாகு ... | 1346-1353 |
| 161. | 5-ம் பராக்கிரமபாகு (159-இன் மகன்) ... | 1348-1360 |
| 162. | 3-ம் விக்கிரமபாகு ... | 1347-1375 |
| 163. | 5-ம் புவனேகபாகு .. | 1360-1391 |
| 164. | 2-ம் வீரபாகு (163-இன் மைத்துனன்) .. | 1391-1397 |
| 165. | 6-ம் விஜயபாகு (வீரஅளகேசுவரன்) (164-இன் சகோதரன்) .. | 1397-1409 |
| 166. | பராக்கிரமபாகு அபா .. | 1409-1412 |
| 167. | 6-ம் பராக்கிரமபாகு .. | 1412-1468 |
| 168. | 2-ம் ஜயபாகு (வீர பராக்கிரமபாகு) .. | 1468-1473 |
| 169. | 6-ம் புவனேகபாகு (சபுமல்குமாரையன்) (167-இன் மகன்) .. | 1473-1480 |
| 170. | 7-ம் பராக்கிரமபாகு (பண்டித பராக்கிரமபாகு) .. | 1480-1484 |
| 171. | 8-ம் பராக்கிரமபாகு (அம்புலுகல ராஜன்) ... | 1484-1518 |

# அனுபந்தம் 2

## சித்திரப்படவிளக்கம்: சிங்கள் வரிவடிவின் வளர்ச்சி

1. இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள கிர்னூர் என்னுமிடத்திலே காணப்படும் அசோகனுடைய இரண்டாம் கற்சாசனத்தின் தொடக்கம்:—

மூலம்:—(1) ஸர்வதவிஜிதம்ஹி தவானம்பிரியஸ பிரிய தஸினோராஞோ (2) ஏவமபி பிரசந்தேசு யதா சோடா பாடா சத்தியபுதோ கேதல புதோ ஆ தம்ப (3) பண்ணி.

மொழிபெயர்ப்பு.—தேவர்களுக்குப் பிரியனான பிரியதர்சினியின் இராச்சியங்களிலெல்லாம், அவனுடைய இராச்சியத்தின் எல்லைப்புறங்களிலே வுள்ள சோடர், பாண்டியர், சத்தியபுதர், கேரளபுதர் தாம்பிரபர்ணியிலுங்கூட.

2. மிகுந்தலையிலுள்ள ஓர் குகையிற் காணப்படும் கல்வெட்டு. இதனை வலதுபுறத்திலிருந்து இடதுபுறம் வாசிக்கவேண்டும்; இரு எழுத்துக்கள் தலைகீழாக உள்ளன.

மூலம்:—உபாஸிக தீஸய லேண.

மொழிபெயர்ப்பு.—உபாசிகனான (இலௌகிக வாழ்க்கையிலிருக்கும் பக்தன்) திஸ்ஸனுடைய குகை.

3. வடமத்திய மாகாணத்திலுள்ள ரிதிகலே என்னுமிடத்திலே ஓர் குகையிற் காணப்படும் கல்வெட்டு.

மூலம்.—தேவனபிய மகாராஜா கமினி தீஸஹ புத தேவனபிய தீஸ அ (பயஹ) லேனே அகத அனகத சது (தி) திஸ ஸகஸ.

மொழிபெயர்ப்பு.—மகாமன்னனான தேவனபிய கமினி திஸனின் மகன் தேவனபிய திஸஅபயனுடைய குகையானது நாற்றிசையிலுள்ளவர்களும் அங்கு வந்திருப்பவர்களும் வராதிருப்பவர்களுமான பௌத்த குருக்களுக்கு (அளிக்கப்படுகின்றது.) (தே. திஸஅபயன் = லஞ்சிதிஸ்ஸன்; தே. கமினிதிஸன் = சத்தாதிஸ்ஸன்.)

4. தமனகடுவைப்பிரிவிலே திம்புலகலேக்கருகில் மோலகித்திய வேலகலேயிலேயுள்ள பாதிக அபயன் என்பவனுடைய கல்வெட்டின் ஆரம்பம்.

(ஸ்வஸ்திகையின் அடையாளம்) ஸித்தம் தேவனபியதிஸ மஹாராஜஹ மறுமனக குடகண ராஜஹ ஜேத புத்தராஜ அபய.

மொழிபெயர்ப்பு:—குடகண மன்னனின் மூத்த புத்திரனை தேவனபியதிஸ னென்னும் மகாராஜனுடைய பேரப்பிள்ளையான அபயராசன்.

5. வெஸ்ஸகிரியிலே பலகையின்மேற் செதுக்கப்பட்ட 5-ம் தப்புலனுடைய கல்வெட்டின் 9-ம் 10-ம் வரிகள்.

மூலம்:—மபுறுமீ—புத்தஸ்—அபகை—சலமெவன் தாபுல மஹாராஜ-ஒஸத்—லெங்கூ தேவன—ஹவுநதுயேஹி.

மொழிபெயர்ப்பு.—புத்தஸ் அபகைசலமெவன் தாபுலமஹா ராஜன் குடையுயர்த்திய (சிம்மாதனமேறிய)தற்கு இரண்டா மாண்டிலே.

6. வடமத்திய மாகாணத்திலே பதவியக் குளத்தின் கரையிலுள்ள ஓர் ஆணின்மேற் செதுக்கப்பட்ட கல்வெட்டு.

மூலம்:—(1) பண்டா கங்க வெவ ஸி
(2) றி லகெத கெத் க—
(3) ரவா ஸியல் தியா
(4) ரந்தவா பெறெதும்பா
(5) நிருநீது கெலமே.

இக்கல்வெட்டு செய்யுள் வடிவமாகவுள்ளது.

மொழிபெயர்ப்பு:—சிற்றுறுகளேயும், நதிகளேயும், அணே போட்டுத் தடுத்தும், ஸ்ரீ இலங்கையிலே ஏரிகள் (குளங்கள் அமைத்தும்) வயல்களிற் பயிர்ச் செய்யச் செய்தும், (ஏரிகளில்) தண்ணீரையெல்லாம் தங்கச்செய்துமான பின்னர், பராக்கிரமபாகு வாசன் இதனைச் செய்தான்.

# வினாக்கள்

[பள்ளிக்கூடங்களிலே, மாணவர்களுக்கு இப்புத்தகத்தின் 2-ம் அதிகாரத்திலிருந்து படிப்பித்தல் நலம். 6-ம் அதிகாரம் படிப்பித்தபின்னர் 1-ம் அதிகாரத்திலடங்கின விஷயங்களைக் கற்பித்தல் எளிதாகும்.]

## 1-ம் அதிகாரம்

1. மாகாவம்சத்தின் வெவ்வேறு பாகங்கள் எவை? அவை யாரால் எவ்வெப்போது இயற்றப்பட்டன?

2. மகாவம்சம், வலகம்பா காலத்திலியற்றப்பட்ட தென்பதற்கு அந்நூலிற் காணப்படும் சான்றென்னை?

3. மகாவம்சத்தின் ஒவ்வொருபாகமும் சரித்திர (இதிகாசம்) நூலியற்றுதற்கு என்ன அளவுக்குப் பயன்படுகின்றது?

4. சரித்திரம் அல்லது இதிகாசம் என்பதென்னை?

5. சரித்திர நூல்களியற்றுவதில் படிப்படியா யேற்பட்ட விருத்தியென்னை?

6. சரித்திர நூல்களில் முதற்படியைச் சார்ந்தவற்றுக்குச் சில உதாரணங்களைக் கூறுக.

7. சரித்திரப் பகுதிகளென 10-ம் பிரிவிற்கூறப்பட்டவை கால அட்டவணைப்படி யுள்ளனவோ? உமது விடைக்குக்காரணங்கள் கூறுக.

8. இலங்கைச் சரித்திரத்தின் முக்கிய பகுதிகளெவை?

9. இலங்கையிலேற்பட்டுள்ள பெருமாறுதல்களுக்குக் காரணங்களென்னை?

10. இலங்கை ஆசியாக்கண்டத்தில் தானமைந்திருக்கும் தன்மையினாலே, எவ்வாறு இத்தீவின் சரித்திரத்தை மாற்றியுள்ளது?

11. எக்காரணங்கள் தன்வளர்ச்சியிலே இலங்கை, இந்தியாவினின்றும் மாறுபடச்செய்தன?

## 2-ம் அதிகாரம்

1. சரித்திரகாலத்துக்கு முந்தின காலத்துக்கும் பிந்தினகாலத்துக்கு முள்ள வேற்றுமையென்னை?

2. கற்காலம், உலோகக்காலம் என்றுலென்ன?

3. வேடர்கள் யார், எங்கிருந்துவந்தனர் என்பதைப்பற்றி மகாவம்சம் விளக்குகின்றதோ? அப்படிக் கூறுமாயின் அதிற் கூறப்பட்டவற்றை நீர் ஒப்புக்கொள்கின்றீரோ? காரணங்கூறுக.

4. வேடர்களால் இலங்கை யடைந்த நன்மைகளென்னை?

5. ஆரியர் இலங்கைக்கு வந்தமையைப்பற்றி மகாவம்சத்திற் கூறப்பட்ட கதை யாது?

6. இந்தியாவின் எப்பகுதியிலிருந்து சிங்களர் வந்தனரென்பதை அறிதற்குச் சிறந்தவழி எது? இம்முறையை இக்காலத்திற் பின் பற்றக்கூடுமோ! ஏன்?

7. சிங்களர், இந்து—ஐரோப்பிய வம்சத்தில் நேர்வழியிற் றோன்றியவர்களோ? உமது விடைக்குக் காரணங்கூறுக.

8. வாலிபச்சாரணர் எவ்வெவ்வழிகளிலே, மரம், மிருகம் என்பவற்றைத் தம் குலம்பெயராகக்கொண்ட சாதியினரைப் பின் பற்றுகின்றனர்?

9. இலங்கையின் முன்னேற்றத்துக்கு ஆரியர் எங்ஙனம் உதவி புரிந்தனர்?

10. ஒரு வேடனின் சீவியத்திலும் கமக்காரனுடைய சீவியம் எங்ஙனம் சிறந்தது?

11. திராவிடர் என்பவர் யாவர்?

12. ருக்வேதத்திலே கூறப்பட்ட தேவதைகளி லெவரேனும் இப்போதும் இலங்கையிற் பூசிக்கப்படுகிறனரோ ?

13. "போதிசத்துவர்" என்பவர் எத்தகைய இலட்சணங்கள் பொருந்தியவர்?

14. பௌத்த சமயம், பாடலிபுரத்திலிருந்து இலங்கைக்குப் பரவிய வரலாற்றைக் கூறுக.

15. பாளிமொழியும் இலக்கியமும் இலங்கையில் மானிடர் சீவியத்தில் எவ்வித மாறுதல்களை உண்டாக்கின?

## 3-ம் அதிகாரம்

1. சிங்களர் முதன் முதலிற் குடியேறிய இடங்களை விவரிக்க.

2. இலங்கையின் தலை நகராக அனுராதபுரம் தெரிந்தெடுக்கப் பட்டதேன்?

3. பண்டைகாலத்திலே ஒரு சிங்களன் மாகமாவிலிருந்து மாதோட்டத்திற்குச் செல்லும்போது காணக்கூடிய பட்டினங்க ளென்னை ?

4. பண்டைகாலத்திய அரசியல் முறையை விவரிக்க.

5. பண்டைக்கால அரசியல் முறையை, வெடுவகிருஷி காலத்து அரசியல் முறைகளோடு ஒப்பிடுக.

6. ஏரிகள் (குளங்கள்) இலங்கையில் எவ்வாறமைக்கப் பட்டன ?

7. காலக்கிரமப்படி இலங்கையில் வெட்டப்பட்ட குளங் களின் பெயர்களைக் கூறுக. கமத்தொழில் எவ்வெவ்விடங்களில் பரவிய தெனக்கூறுக.

8. அக்காலத்திய பௌத்த சமயப் பிரிவுகள் ஒவ்வொன் றுக்கு முள்ள வேறுபாடுகளை விளக்குக.

9. அக்காலத்தில் எவ்வெவ்வித கட்டடங்கள் நிருமாணிக்கப் பட்டன ?

10. ஆந்திர இராச்சியத்துக்கும் இலங்கைக்குமான தொடர்பென்ன ?

11. பண்டைக்காலத்திலே தென்னிந்தியாவில் இருந்த இராச்சியங்களெவை ?

12. தென்னிந்தியாவிலே மரம், விலங்கு என்பவற்றின் பெயர்களைத் தம் குலப்பெயர்களாகக் கொண்ட சாதியினர் இவர்களுள் எவருடைய பெயர்கள் இலங்கையிலும் காணப்பட்டன ?

13. வட இந்தியாவிலே மௌரியர் என்னும் பெயர் கொண்டிருந்தவர் யார் ?

14. கிரேக்கர் வாசனைத்திரவியங்களைத் தென்னிந்தியாவிலிருந்தே பெற்றனர் என்பதற்கான சான்றுகள் என்னை ?

15. வலகாரக ஜாதகக்கதை, குவேனியின் சரித்திரத்தை எவ்வெவ்வழிகளில் ஒத்திருக்கின்றது ?

16. இலங்கையின் தேசபடம் முதன்முதலாக ஒரு கிரேக்கனால் எழுதப்பட்டதேன் ?

17. "கற்சாசனங்களின் உதவியைக் கொண்டே இக்காலத்திய சரித்திரம் பெரிதும் அறியப்படுகின்றது" என்பதை விளக்குக. (இக்கேள்வியை 4-7 அதிகாரங்களிலும் அமைத்துக்கொள்க.)

18. இந்தியாவின் தேசபடமொன்று வரைந்து வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்குச் செல்லுதற்கான பாதைகளைக் குறிக்க.

## 4-ம் அதிகாரம்

1. கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் காலமுதலாக ஒரு புதிய சரித்திர காலப்பகுதி தோன்றுகின்றதெனக் கூறப்படுவதேன் ?

2. இலங்கை தேசபடமொன்று வரைந்து, அதிலே நாட்டின் பலபிரிவுகளையும் குறிக்க.

3. காசியபனையும், சிகிரியாவையும்பற்றி மகாவம்சத்திற் கூறப்படாத புதியவிஷய மெதனை நீர் கூறுதல்கூடும் ?

4. இக்காலப்பகுதியை வரைந்த மகாவம்ச ஆசிரியர் சிகிரியாவைப்பற்றி மிகச்சிறிதே கூறுவதேன் ?

5. பொலன்னறுவை "குந்தவூறுதுவரை" "பாசறைவாசல்" எனப்பட்டதேன் ?

6. இக்காலத்து அரசியல்முறையை விவரிக்க.

7. கிராம சுயராச்சிய முறையில் எப்பாகங்கள் இக்காலத்திலும் காணப்படுகின்றன ?

8. இலங்கைப்படம் வரைந்து, அதிலே முக்கிய ஏரிகள் எல்லாவற்றையும் குறிக்க.

9. அபனகங்கை நீர்ப்பாய்ச்சலுக்கு எவ்வாறு உதவுகின்றதெனக் கூறுக.

10. தலதா (புத்தரின் பல்) இலங்கைக்கு எப்போது கொண்டு வரப்பட்டது? அதுபிற்காலத்திலே சமயசம்பந்தமாகமாத்திரமே முக்கியமாகக் கருதப்பட்டதோ ?

11. 3-ம் அதிகாரத்திற் குறிக்கப்படாத பௌத்த சமயப்பிரிவுகளைக் கூறுக.

12. இக்காலத்திய மனைக்கலை, சிற்பம், ஓவியம் என்பன எந்த அளவுக்கு இந்தியாவின் முன்மாதிரியைப் பின்பற்றின.

13. பாகியன் புத்தகோஷன் என்போர் எப்போது இலங்கைக்கு வந்தனர் ? என் ?

14. புத்தகோஷனுடைய தொண்டினாலேற்பட்ட பலாபலன்களென்னை ?

15. இலங்கை சீனத்துக்குப் புரிந்த நன்மை யென்னை ?

16. இலங்கையிலே இப்போது பிக்குணிகள் இராததற்குக் காரணமென்னை?

17. இக்காலத்திலே இயற்றப்பட்ட நூல்கள் எத்தன்மையன?

18. சிங்களமொழியின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுக.

19. காளிதாச ஞியற்றிய நூல்களென்ன ? அவற்றுக்கும் சிங்கள இலக்கிய நூல்களுக்கும் உள்ள தொடர்பென்ன ?

20. புத்ததத்தன் என்பவன் யார் ? அவன் எங்கு சீவித்தனன் ? எக்காலத்தில் ?

21. இலங்கைக்கும் முந்திய காலத்திலேயே, தென்னிந்தியா வில் இந்துசமயம் ஸம்ஸ்கிருத மொழியும் செல்வாக்குப்பெற்றதின் காரணமென்னை ?

22. "மகாயானபௌத்தம்" என்றுலென்னே? அது இலங்கை யிலே விளைத்த நற்பயன்கள் என்னை ?

23. பல்லவர், சோழர் என்பவர் யாவர் ? அவர்களுக்கும் இலங் கைக்கு முள்ள தொடர்பைக் கூறுக.

24. இலங்கையின் வடபாகம், சோழ இராச்சியத்தின் ஒரு பாகமாக அமைவதைச் சிங்களரால் தடுக்கமுடியாதமைக்குக் காரண மென்னை ?

25. இக்காலத்திலே இலங்கையுடன் வியாபாரஞ்செய்த சாதியினர் யாவர்?

## 5-ம் அதிகாரம்

1. 1017—1225-க்குள் அடங்கிய காலம் "பொலன்னறுவைக் காலப்பகுதி" யெனக் கூறப்படுவதேன் ?

2. பொலன்னறுவை இக்காலத்திலே இலங்கையின் தலைநக ரான தெங்ஙனம ?

3. இலங்கையின் வடபகுதியையாண்ட சோழவரசர்கள் யார் ? அவர்களாட்சியினுலேற்பட்ட பயனென்னை ?

4. 1-ம் விஜயபாகுவை ஒரு கீர்த்திபொருந்திய மன்னனெனக் கருதுதற்குக் காரணங் கூறுக.

5. 1370-ம் ஆண்டிலே சோழரை இலங்கையினின்றும் துரத்து தற்கு இந்தியாவிலே நடந்த எச்சம்பவம் உதவிசெய்தது ?

6. பராக்கிரமபாகுவின் சீவியத்தை எத்தனை பகுதிகளாகப் பிரிக்கலாம் ?

7. தென்னிந்தியாவைப்பற்றின என்ன முக்கியமான விஷயங்கள் மகாவம்சத்திற் கூறப்படவில்லை ?

8. அரசியல் முறையிலே 1-ம் பராக்கிரமபாகு செய்த மாறுதல்களென்னை ?

9. வேலைக்காரர்களைப்பற்றி நீரறிந்தவற்றைக் கூறுக. வாணிபஞ்செய்த இவர்கள் படைவீரர்களை அமர்த்தியதேன்?

10. இலங்கைப்படமொன்று வரைந்து அதிலே 1-ம் விஜயபாகு, 1-ம் பராக்கிரமபாகு என்போரின் சேனைகள் சென்ற பாதைகளைக் குறிக்க.

11. இலங்கையிலே கிருஷியை எவ்வாறு பராக்கிரமபாகு மேனிலையடையச் செய்தான் ?

12. சாதி (வருணம்) என்றுலென்னை? இக்காலப் பகுதியில் இதனுலேற்பட்ட நன்மை தீமைகளென்னை ?

13. வருணுசிரம தர்மத்தைக்கூறும் நூலொன்றின் பெயரென்னை ?

14. இந்து சமயம் பரவுவதற்கான காரணங்களென்னை ?

15. அரசர்கள் தேவாம்சம் பெற்றவர் எனச் சிங்களர் கருதினரோ ? விவரிக்க.

16. பொலன்னறுவையினுள்ள பிரதானகட்டடங்களை விவரிக்க.

17. அங்கே, அனுராதபுரத்திற் காணப்படாத புதியமாதிரிக் கட்டடங்கள் உளவோ ?

18. அனுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் காணப்படும் பிரதிமைகளுள் வேறுபாடுகளுண்டோ?

19. இக்காலத்திய இலக்கிய நூல்களில் நீர் காணும் புது அம்சங்களென்னை ?

20. சசதாவதா எந்த மன்னனுடைய ஆட்சிக்காலத்திலே இயற்றப்பட்டது ?

U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★ 24438

21. 1-ம் விஜயபாகுவின் அந்நியநாட்டு அரசியல் முறையை 1-ம் பராக்கிரமபாகுவின் முறையோடு ஒப்பிடுக.

## 6-ம் அதிகாரம்

1. இக்காலப்பகுதியிலே இலங்கையின் தலைநகரங்களாயிருந்தவை எவை? அவை அந்நிலைமையடைந்தமைக்குக் காரணங்கள் கூறுக.

2. யாழ்ப்பாண இராச்சியம்; மலயநாடு என்பவற்றின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுக.

3. 2-ம் பராக்கிரமபாகுவை 6-ம் பராக்கிரமபாகுவோடு ஒப்பிடுக.

4. இந்து சமயம் பரவிய வரலாற்றைக் கூறுக; இதனைக் கிறிஸ்தவசமயம் பரவியவகையோடு ஒப்பிடுக.

5. இக்காலத்திலே சிங்கள இலக்கியம் ஏன் விருத்தியடைந்தது?

6. சிங்கள நூல்களின் தொகைகூடுவதற்கு முதன்முதலாகச் செய்யவேண்டியது யாது?

7. இவ்வதிகாரத்துக்கு "சிங்கள இராச்சியத்தின் சீரழிவு" என்னும் நாமஞ்சூட்டுதல் தகுதியோ?

8. பாண்டிய இராச்சியம் மேலோங்கியதன் காரணமென்னை? அதற்கும் இலங்கைக்குமான தொடர்பென்னை?

9. விஜயநகர இராச்சியம் இலங்கையின்மீது செலுத்திய செல்வாக்கினளவை விவரிக்க.

10. சீனம், யேமன், எகிப்து, பெகு, தாமிரலிங்கம் என்பவற்றோடு இலங்கை செய்து வந்தபோக்கு வரவின் வரலாற்றைக் கூறுக.

11. இக்காலப்பகுதியிலே கொழும்பு பிரதானபட்டினமாக இருந்தமைக்குக் காரணங்கூறுக.

---

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90
288